# வைரவிழா மலர்

## 1956 - 2016




## பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்
## நீர்வேலி

# பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்
# நீர்வேலி

# வைரவிழா மலர்

## 1956 - 2016

# CRECHE & PRESCHOOL
# NEERVELY

## DIAMOND JUBILEE SOUVENIR
## 1956 - 2016

# நூன்முகம்


நூல் :- வைரவிழா மலர்
நூலின் தன்மை:- சிறப்பு மலர்
வெளியீடு :- பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்
நீர்வேலி.
தாள் :- B5 அளவு, 120g ஆட்பேப்பர்
பக்கங்கள் :- XLVI, 72
பதிப்பு :- 17.09.2016
பிரதிகள் :- 500
அச்சுப் பதிப்பு :- ஷாம்பவி பதிப்பகம்.
நீர்வேலி & யாழ்ப்பாணம்.

---

Title :- Diamond Jubilee Souvenir
Type :- Special Volume
Published by :- Creche & Pre School
Neervely.
Paper :- B5 Size, Art Paper 120g
Pages :- XLVI, 72
Edition :- 17.09.2016
No. of Copies :- 500
Printed by :- Shampavi Printers
Neervely & Jaffna.

# இலச்சினை

CRECHE & PRE SCHOOL

TRUTH EVER WINS

NEERVELY

# கொடி

CRECHE & PRESCHOOL

NEERVELY

# தூர நோக்கு (Vision)

சமூகத்திற்கு பொருத்தப்பாடுடைய, அறிவுசார்ந்த, ஆற்றலுள்ள நற்பிரசைகளை உருவாக்குதல்.

# பணிக்கூற்று (Mission)

- பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- போசனை மிகு உணவளித்தல்.
- நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்துதல்.
- எமது பண்பாட்டு, கலாச்சார, ஒழுக்க விழுமியங்களை அறிந்து ஒழுகச் செய்தல்.
- மகிழ்ச்சிகரமாக கற்க ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- அடிப்படை மொழி, கணித அறிவினை பெறச்செய்தல்.
- அடிப்படைத் திறன்களை வளர்த்தல்.
- சகபாடிகளுடன் நல்ல தோழமை உணர்வை உருவாக்குதல்.

# பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளியின் கீதம்

## பல்லவி

பாலர் பகல்விடுதி - பலம் பெறவே
சால உழைத்திடுவோம் நாளுமே (பாலர்)

## அநுபல்லவி

ஞாலத்திற் பாலர் வளர்ந்திடவே - என்றும்
காலத்தைப் போக்கிடாமல் உழைத்திடுவோம் (பாலர்)

## சரணம்

பச்சை யிளஞ்சிறு பாலர்கள் உய்ந்திட
இச்சையொடு மிளிரும் எங்கழகம்
மெச்சு புகழோடு இச்சகம் போற்றும்
உச்ச மடைந்திடும் உயர்நிலையுள்ள (பாலர்)

அறிவியற் கலையொடு ஆடல் பாடலும்
நெறிவளர் நிலைகளும் நிலவச் செய்திடும்
மேற்பார்வை யாளரும் மிகுபணியாளரும்
ஏற்ப நலம் பெற அணைத்திடு மெங்கள் (பாலர்)

# பாலர் பகல் விடுதிக்கு வித்திட்ட உத்தமர்கள்



**அமரர் சேர். கந்தையா வைத்தியநாதன்**
(முன்னாள் சமூகசேவை, வீடமைப்பு, கைத்தொழில் அமைச்சர்)



**அமரர் இ. க. சண்முகநாதன்**
(முன்னாள் தலைவரும் கல்விப்பணிப்பாளரும்)

# பொருளடக்கம்


பக்கம்

நூன்முகம்
இலச்சினை, கொடி
தூர நோக்கு, பணிக்கூற்று
பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளியின் கீதம்
பாலர் பகல் விடுதிக்கு வித்திட்ட உத்தமர்கள்
நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் அமைவிடம்

01. நிர்வாகக்குழு விபரம்
02. நிர்வாகத்தினர்
03. ஆசிரியர்கள்
04. மேற்பார்வையாளர், கல்விசாரா ஊழியர்கள்
05. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் I - XLVI
06. பாலர் பகல்விடுதி திறப்புவிழா, அன்றைய தின இராப்போசன விருந்து
07. பாலர் பகல்விடுதியின் ஆரம்பம் முதல் இன்றுவரையான தலைவர்கள்
08. பாலர் பகல்விடுதி ஸ்தாபிதத்ததிலும் வளர்ச்சியிலும் சேவையாற்றியோர்
09. பாலர் பகல்விடுதியின் ஆரம்பம் முதல் இன்றுவரையான மேற்பார்வையாளர்கள்
10. 3, 4, 5 வயதுப் பிரிவுப் பாலர்கள்
11. 3, 4, 5 வயதினர் வகுப்புக்கள்
12. கணினி, ஆங்கில பேச்சுக்கலை வகுப்புக்கள்
13. பாலர்பகல் விடுதியும் முன்பள்ளியும், சமுதாய முன்னேற்றக்கழகம் அன்றுமுதல் இன்றுவரை ஒரு பார்வை 01 - 06
14. பாலர்பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் காணி வரைபடம்
15. பாலர்பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் கட்டட வரைபடம்
16. பாலர்பகல் விடுதியின் கட்டட உட்புறத் தோற்றங்கள்
17. விளையாட்டு முற்றம்
18. காலை உணவின்போது, மதிய உணவின்போது
19. சமையல் கூடம், பாலர்கள் உணவு உண்பதற்கு கை கழுவுதல், பாலர்களின் உறங்கல் நேரம்
20. நிகழ்வுகளின் விருந்தினர்கள்

பக்கம்

21. பாலர் பகல் பராமரிப்பு இல்லத்திற்கான கொள்கை 07 - 11

22. கட்டுரைகள்

i. சமுதாய வளர்ச்சியில் பாலர் பகல் விடுதியின் பங்களிப்பு 12 - 15
திருமதி ஞா. தெய்வேந்திரராசா

ii. முன்பள்ளிப் பிளளைகளிடையே கணித
எண்ணக்கருக்களை விருத்தி செய்தல் 16 - 27
கலாநிதி த. கலாமணி

iii. முன்பள்ளிகளில் சுற்றாடற் கல்வியின் முக்கியத்துவம் 28 - 32
செல்வி ஜெயா தம்பையா

iv. முன்பள்ளிகளில் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு
விளையாட்டுக்கள் 33 - 41
கலாநிதி (செல்வி) நிர்மலா கந்தையா

v. முன்பள்ளிப்பராய கல்வியும் நவீன ஒன்றினைந்த
அணுகுமுறைப் பிரயோகங்களும் 42 - 46
கலாநிதி பா. தனபாலன்

vi. முன்பள்ளிகளின் விளைதிறனுள்ள செயற்பாட்டிற்கான
பொதுமைப்படுத்தப்பட்ட குழநதைக்
கலைத்திட்டத்தின் தேவை 47 - 58
திரு. பொ. சற்குணநாதன்

vii. மழலைகளின் வளர்ச்சியில் கணினியின் செல்வாக்கு 59 - 62
திரு. பா. சசிகுமார்

23. பசுமை நினைவுகள்

24. கண்காட்சி நிழல்கள்

25. விளையாட்டு விழா நிழல்கள்

26. கலைநிகழ்வுகளின் நிழல்கள்

27. சுற்றுலா நிழல்கள்

28. மதிப்புரைகள் 63 - 68

29. புலம்பெயர் நாடுகளிலிருந்து தொடர்ச்சியாக
நிதியுதவி வழங்குவோர் 69 - 70

30. வைரவிழாவிற்கு நிதிப்பங்களிப்புச் செய்தோர் 71

31. நன்றியுரை

# நீர்வேலி பாலர் பகல்விடுதியும் முன் பள்ளியும் அமைவிடம்



## பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்

## நிர்வாகக் குழு

| | |
|---|---|
| தலைவர் | :- திரு. செ. பத்மநாதன் |
| உபதலைவர் | :- திரு. கு. வரதகுலசிங்கம் |
| செயலாளர் | :- திரு. வே. குணசீலன் |
| உபசெயலாளர் | :- திரு. ந. குமணன் |
| பொருளாளர் | :- திரு. பொ. சரவணபவானந்தன் |
| உறுப்பினர்கள் | :- திரு. த. பத்மநாதன் |
| | திரு. தி. முத்துக்குமரன் |
| | திரு. பா. சசிக்குமார் |
| | திரு. இ. நிதீபன் |
| | திருமதி உ. யோகானந்தா |
| | திரு. தே. குகானந்தன் |

## பாலர் பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் நிர்வாகத்தினர்



இருப்பவர்கள் (இ – வ) : திருமதி உ. யோகானந்தா, திரு. வே. குணசீலன், திரு. செ. பத்மநாதன், திரு. பொ. சரவணபவானந்தன், திரு. கு. வரதகுலசிங்கம்
நிற்பவர்கள் (இ – வ) : திரு. தி. முத்துக்குமரன், திரு. தே. குகானந்தன், திரு. இ. நிதீபன், திரு. பா. சசிக்குமார், திரு. ந. குமணன், திரு. த. பத்மநாதன்

# ஆசிரியர்கள்



இருப்பவர்கள் (இ – வ) : செல்வி வெ. கவிதா, திருமதி வி. நாவேந்தன் (மேற்பார்வையாளர்), திரு. பீ. கிருபாகரன் சேவியர்
நிற்பவர்கள் (இ – வ) : செல்வி சு. றஜனி, செல்வி க. சகிலா, திருமதி க. தர்சிகா, செல்வி இ. வாசுகி

## மேற்பார்வையாளர்



## கல்விசாரா ஊழியர்கள்



இடமிருந்து வலமாக : திருமதி சி. சிவசக்தி, திருமதி வி. நாவேந்தன் (மேற்பார்வையாளர்),
திரு. செ. திருஞானசம்பந்தர்

ௐ

சிவஸ்ரீ இராஜேந்திர. சுவாமிநாதக் குருக்கள்
பிரதமகுரு, அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி. இலங்கை.



**Sivasri Rajendra. Swaminatha Gurukkal**
**Chief Priest**
KANDASAMY KOVIL,
NEERVELY, SRILANKA.

☎ 0094 (0)602 213550



## பாலர் பகல் விடுதியே பல்லாண்டு பணி செய்க

நீர்வேலி தெற்கு பாலர் பகல் விடுதி தனது அறுபதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். 08.12.1955 இல் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் அத்திபாரம் இடப்பட்டு 08.07.1956இல் அரச அதிபராக இருந்த திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. நீர்வேலியூர் திரு. இ. க. சண்முகநாதன் அவர்களது முயற்சியே இன்று இந்த பாலர் பகல்விடுதி உயர்ந்து நிற்பதற்கு அடிகோலாக அமைந்தது. அவருடன் சேர்ந்து திரு. வே. சி. அப்புத்துரை, திரு. சு. கனகசபாபதி ஐயர் ஆகியோர் செயலாளர்களாகவும். திரு. க. இராசதுரை ஆசிரியர் பொருளாளராகவும் இருந்து பணியாற்றி வந்துள்ளார்கள்.

காலச் சூழலால் இந்த பாலர் நிலையம் சேதமடைந்து தடைப்பட்டிருந்த போது UNHCR அமைப்பின் உதவியால் மீண்டும் புனரமைக்கப்பட்டு இன்று அறுபதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடுமளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கின்றது. வடமாகாணத்தில் இப்படிவசதிகள் கூடிய கட்டிடத்தை தான் காணவில்லை என்று மறைந்த இந்துக்கலாச்சார அமைச்சராக இருந்த கௌரவ திரு. தி. மகேஸ்வரன் அவர்கள் பாடசாலைக்கு விஜயம் செய்தபொழுது கூறியுள்ளார். அப்படியான வசதிகளோடு இந்தப் பாடசாலை சிறந்து விளங்குகின்றது என்றால் அதற்கு நிர்வாகம், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரின் அக்கறையேயாகும்.

இது தொடர்ந்து மென்மேலும் பணியாற்றி பலநூறு ஆண்டுகள் சேவையாற்ற, எல்லோருக்கும் பெருமை சேர்க்க எல்லாம் வல்ல நீர்வைக்கந்தன் அருள் வேண்டி நிற்கின்றேன்.

வாழ்க வாழ்க வளர்க நின்பணி

நன்றி.

**சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்**



# தூய மிக்கேல் ஆலயம்
# ST. MICHAEL'S CHURCH

பங்குத்தந்தை
உரும்பிராய்

T.P. 021 2230751

Parish Priest
Urumpirai



## ஆசிச் செய்தி

"குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
மழலைச் சொற்கேளாதவர்"

முத்து முத்தாய் மழலை மொழி மிளிர, கொத்துக் கொத்தாய் புன்னகை விரிய, மலரும் மொட்டாய் பவனிவரும் குழந்தைகளை பெற்றோரின் தொழில் நிமித்தம் பராமரிக்க பொறுப்பெடுத்த பாலர் பகல் விடுதியையும், நீர்வேலி சமுதாய முன்னேற்ற கழகத்தின் சிறப்பினையும் எடுத்துரைக்க வார்த்தையில்லை. அன்புத் தாயாக, தந்தையாக இருந்து அப்பிள்ளைகளை காலை 7.30 மணியில் இருந்து மாலை 4.30 மணிவரை பராமரித்து அவர்களுக்கு வேண்டிய போசனைமிக்க உணவுகளை வழங்கிவரும் நீர்வேலி பாலர் பகல்விடுதியை வாழ்த்துவதில் பெருமகிழ் வடைகின்றேன்.

குழந்தைகளின் மழலை மொழியில் மகிழாதவர் எவரும் இல்லை. அக்குழந்தைகளின் காப்பகமாக திகழும் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தின் பாலர் பகல் விடுதி வடமாகாணத்தில் முதலாவது பாலர் பராமரிப்பு நிலையம் என்பதும் அத்துடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி பாலர்விடுதிகளில் இதுவும் ஒன்று என்பதில் யாவரும் பெருமைப்படக்கூடியதொன்றாகும்.

குழந்தைகளை பராமரித்து வரும் மேற்பார்வையாளர், ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் பணியாட்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன் வைரவிழாக்காணும் இக் கழகம், மேலும் மேலும் சேவைகளை இச் சமூகத்திற்கு வழங்கி பல ஆண்டுகள் புதுப் பொலிவுடன் திகழ எனது வாழ்த்தைத்தெரிவித்து இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

அருட்பணி. ம. பத்திநாதர்,

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை ஜனாதிபதி
President of Sri Lanka



## வாழ்த்துச் செய்தி

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம் நடத்திவரும் பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளியின் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிறுவர்களே நம் நாட்டின் எதிர்காலம் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அறிவும் ஆற்றலும் நல்லொழுக்கமும் நிறைந்த மனிதர்களே தேவைப்படுகின்றனர். அப்படியான மனிதர்களை சிறு பராயத்திலிருந்தே உருவாக்குவதில் 60 ஆண்டுகளாக நீர்வேலி பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளியானது இந்நாட்டுக்கு அளப்பெரிய சேவையாற்றியுள்ளதாக அறிகின்றேன்.

நாட்டின் வளரச்சிக்காகவும் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் இவ் அமைப்பு எடுத்துவரும் முயற்சிகளை நான் பாராட்டுவதுடன், எதிர்காலத்திலும் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கும், வைரவிழா நிகழ்வுகள் சிறப்பான முறையில் நடைபெறவும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

27th July 2016

மைத்ரிபால சிறிசேன
ஜனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

**Prime Minister of Sri Lanka**



## MESSAGE FROM THE HON. PRIME MINISTER

I am pleased to issue a message of felicitations for the Diamond jubilee of the Creche at Neervely.

It is noteworthy that this creche has rendered a yeoman service in providing reliable and trustworthy childcare services to the community. It is always a gesture that is deeply appreciated by the society at large.

As more and more parents engage in work that takes them outside the home environment, it is indeed pertinent to note that there would be more opportunity for this Creche to be of service to the community.

I take this opportunity to wish them all the very best.

11th July 2016

Ranil Wickremesinghe
Prime Minister

3 වන මහල, II අදියර,
"සෙත්සිරිපාය", බත්තරමුල්ල.

3 வது மாடி, கட்டம் II,
"செத்சிறிபாய", பத்தரமுல்லை.

3rd Floor, Stage II, "Sethsiripaya",
Battaramulla.

විජයකලා මහේෂ්වරන්, පා.ම.
விஜயகலா மகேஸ்வரன், பா. உ.
Vijayakala Maheswaran, M. P.
ළමා කටයුතු රාජ්‍ය අමාත්‍ය
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்
State Minister of Child Affairs

දුරකථන / தொலைபேசி / Telephones — කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2186056, 011-2187264, 011-2187263
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 0112187260
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail: mkala8642@gmail.com



# வாழ்த்துச் செய்தி

மனிதனை ஒரு பூரண மனிதனாக மிளிரவைப்பது வாசிப்பாகும். அவ்வாசிப்பினை அறிவதற்கு அடித்தளமிடுவது முன்பள்ளிக் கல்வியாகும். அப்படிப்பட்ட ஆரம்பக்கல்வியினை நீர்வேலி கந்தசுவாமி கோயில் வீதியில் அமைதியான சூழலில் இப் பாலர் பகல் விடுதி முன்பள்ளி நிலையத்தில் போதிக்கப்பட்டு வருவது சிறப்பம்சமாகும். இவ் பாலர் பகல விடுதி 60 ஆண்டுகள் பூர்த்தி செய்து வைரவிழா கொண்டாடும் இத்தருணத்தில் அதன் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

வேலைக்குச் செல்லும் பெற்றோரின் பிள்ளைகளை பராமரிக்கும் நோக்குடன் அரச நன்கொடையுடனும் ஊர்மக்களின் அன்பளிப்புக்களுடனும் நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் கோப்பாய் பிரதேசப் பிள்ளைகள் பயன்பெறும் வகையில் மிகக்குறைந்த பராமரிப்புக் கட்டணத்துடன் தரமான முன்பள்ளிச் செயற்பாடுகளை வழங்கும் இலாபநோக்கமற்ற நிறுவனமாக மிளிர்கின்றதை இந்த தருணத்தில் பாராட்டுகின்றேன். வடமாகாணத்தில் முதலாவது பாலர் பகல் பராமரிப்பு நிலையம் என்பதுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி பாலர் பராமரிப்பு நிலையங்களில் இதுவும் ஒன்றாகக் காணப்படுவது போற்றுதற்குரியது.

சிறந்த ஆளணி வளத்துடன் ஏறத்தாள 80 பாலகர்களை காலை 7.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை பராமரித்து போசாக்குடைய மதிய

உணவு வழங்கப்படுவதுடன் சிறந்த கல்வியும் ஆரோக்கியமான பொழுது போக்கும் வழங்கப்படுவதை கண்ணூடாகக் காணமுடிகின்றது.

இப் பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் சிறந்த சேவையாற்றி நாட்டுக்கு சிறந்த பிரஜைகளை உருவாக்கவும் வைரவிழா மலர் சிறப்புற வெளிவரவும் மனதார வாழ்த்துவதோடு இப் பாலர் பகல் விடுதி முன்பள்ளி நிலையத்தின் பணி மேலும் பல நூற்றாண்டுகள் சிறப்பாக அமைய இறைவனைப் பிரர்த்திக்கின்றேன்.

திருமதி. விஜயகலா மகேஸ்வரன், பா. உ,
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும்,
யாழ் : கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும்.

No: 1440

කාර්යාලය
அலுவலகம்
Office } 021 221 9376

ෆැක්ස්
தொலைநகல்
Fax } 021 221 9374

වෙබ් අඩවිය
இணையம்
Web } www.np.gov.lk

මගේ අංකය
எனது இல
My No } G/NPC/HG/Message

රෙජිනෝල්ඩ් කුරේ
றெஜினோல்ட் குரே
**Reginald Cooray**
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
ஆளுநர், வட மாகாணம்
**Governor, Northern Province**

ආණ්ඩුකාරවර කාර්යාලය
ஆளுநர் செயலகம்
**Governor's Secretariat**

පැරණි උද්‍යානය, නුවර පාර,
චුණ්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.

பழைய பூங்கா, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

දිනය
திகதி
Date } 2016/06/28




## Message for Creche & Pre - School of the Community Welfare League, Neervely

It gives me a great pleasure to contribute this message to the magazine, which is published to mark the Diamond Jubilee of Creche & Pre - School of the Community Welfare League, Neervely.

The Creche & the Pre - School was established in 1956 at Neervely have been pioneering in Sri Lanka. Both of the centers are service oriented with delivering excellent service quality. The beneficiaries of the centers, the children of Kopay Division are fortunate to get the service. Dedicated service of the staff of the centers, support & assistance of parents, neighbours and well - wishers had enabled the Creche & the Pre - School to accomplish their Mission goals.

Creche plays an important role in child's development of the families of working parents. It prepares the kids by giving all basic skills to face challenges from the very beginning before the join school. Choosing the right Creche and Pre - School is an important thing. Many facts are to be kept in mind while finding a Creche for the children. I come to know that the Creche & Pre - School in Neervely deliver reliable and sustainable service to the society.

I take this opportunity congratulate all, teachers, supervisors, caretakers, children, parents, neighbours and well - wishers of the centers for delivering dynamic service by keeping the strength and spirit of their unity for serving the society. On this happy occasion of Diamond Jubilee celebration of the Creche & the Pre - School, I wish them continued success in the future.

Thank You

Reginald Cooray
Governor
Northern Province

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர் - வட மாகாணம்**

**විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්**
**ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත**

**Justice C.V.Wigneswaran**
**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்றுறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்
මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සමාජ සේවා හා අනුරක්ෂාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන, අමාත්‍යවරයා
Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration



# வாழ்த்துச் செய்தி

வேலைக்குச் செல்லும் பெற்றோர்களின் பிள்ளைகளை பராமரிக்கும் நோக்குடன் நீர்வேலி சமுதாய முன்னேற்ற கழகத்தினால் அரசாங்க நன்கொடையுடனும் ஊர் மக்கள் அன்பளிப்புக்கள் மற்றும் சிரமதானம் மூலம் 08.07.1956 இல் உருவாக்கப்பட்ட நீர்வேலி பாலர் பகல் விடுதி வடமாகாணத்தின் முதலாவது பாலர் பராமரிப்பு நிலையம் என்ற பெயரைப் பெற்றதுடன் தனது 60 வருட பாலர் விடுதி சேவையை நிறைவு செய்து வைரவிழா காணும் இச் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும் விஷேட மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

எழுபதுகளின் முற்பகுதியில் இலங்கையின் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த அரிவரி வகுப்பு ஓராண்டுக் கல்விச் செயற்பாடுகள் அரசினால் நிறுத்தப்பட்டு ஐந்து வயதினைப் பூர்த்தி செய்த பிள்ளைகளை நேரடியாக ஆண்டு ஒன்றில் அனுமதிப்பது என்ற திட்டம் கொண்டுவரப்பட்ட போது பாலர் பகல் விடுதியில் முன்பள்ளிச் செயற்பாடுகள் அப்போதிருந்தே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறியப்படு கின்றது.

இப்பாலர் பகல் விடுதியில் மேற்பார்வையாளர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள், சமயல்காரர் ஆகியோரைக் கொண்ட ஆளணி வளத்துடன் கிட்டத்தட்ட 80 பிள்ளைகளை பகல் நேரங்களில் பராமரிக்கின்ற சிறப்பான சேவையை வழங்கிவருவது போற்றப்படத்தக்கது. காலை 7.30ல் இருந்து மாலை 4.30மணிவரை பராமரிக்கப்படும் இப் பிள்ளைகளுக்கு காலை பாலுடன் சத்துணவும் மதியம் போசனை மிக்க உணவும் மாலையில் சிற்றுண்டியும் தேநீரும் வழங்கி இவர்களை ஊட்டச்சத்து மிக்கவர்களாக பராமரிக்கின்ற இந்நிலையம் ஏனைய முன்பள்ளிகளுக்கு முன்னுதாரணமாக அமைகின்றது.

இப்பகுதியைச் சேர்ந்த சிறு பிள்ளைகளும் பெற்றோரும் பயன்பெறும் வகையில் மிகக் குறைந்த பராமரிப்புக் கட்டணத்துடன் தரமான முன்பள்ளிச் செயற்பாடுகளை வழங்கும் இலாப நோக்கற்ற இம் முன்பள்ளி இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாக செயற்பட வாழ்த்துவதுடன் இம் முன்பள்ளியின் ஆசிரியர்களையும், ஏனைய ஊழியர்களையும் இத் தருணத்தில் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடக்கு மாகாணம், 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යතුමාගේ කාර්යාලය
උතුරු පළාත, 124, ආඩියපාදම් වීදිය කල්වියංකාඩු යාපනය

எனது இல. / මගේ අංකය / My No. } வமா / அஅ / கபவிஇ / வா    உமது இல / ඔබේ අංකය / Your No }    திகதி / දිනය / Date. }



## வாழ்த்துச் செய்தி

நீர்வேலி பாலர் பகல் விடுதி, முன்பள்ளியினுடைய வைரவிழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்வடைகின்றேன்.

1956ஆம் ஆண்டு அப்போதைய கௌரவ அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு புகழ் பூத்த யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. 1956முதல் இருபத்தெட்டு வருடங்கள் சிறந்தகல்விப் பணிப்பாளராகத் திகழ்ந்த திரு. இ. க. சண்முகநாதன் அவர்களின் தலைமையில் இப்பாலர் பகல்விடுதி நடைபெற்றது.

1970ஆம் ஆண்டின் பின்னர் ஐந்து வயது பூர்த்தியடைந்த மாணவர்கள் பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அப்பிள்ளைகளுக்கு முன்பள்ளியின் சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் பாலர் பகல் விடுதியில் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது கணினிக்கல்வி வசதி உட்பட பல நவீன வசதிகளுடன் பாலர் பகல் விடுதி இயங்குவது மகிழ்வைத் தருகிறது.

மக்கள் தாமாகவே தங்கள் பிரதேசத்தில் இவ்வாறான நிலையங்களை உருவாக்குவதன் மூலம் சமூகத்தின் பிறழ்வுகளுக்குள் சிக்காத சிறந்த எதிர்காலச் சிற்பிகளை உருவாக்க முடியும்.

குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் அவர்களை பராமரிப்பதன் மூலம் அவர்களுக்கான சிறந்த அத்திவாரமிடலாக இப்பராமரிப்பு நிலையங்கள் அமையவேண்டும் என்பதை நீர்வேலி பாலர் பகல் பராமரிப்பு நிலையம் செய்து காட்டியுள்ளது.

21ஆம் நூற்றாண்டின் சிந்தனையில் பிள்ளைகள் தாமாகவே கற்றுத் தேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அவ்வாறான ஒரு செயற்றிட்டத்தை நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் ஆற்றி வருகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

வைரவிழா சிறப்புற நடைபெறவும், விழாவின் போது வெளியிடப்படும் மலர் சிறந்த ஆவணமாகவும் வெளிவர எனது நல்வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

திரு.த.குருகுலராசா,
கௌரவ கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம், மா.ச.உ
වෛද්‍ය පී. සත්‍යලිංගම්, ප.ස.ම
Dr.P.Sathiyalingam, M.P.C

சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூகசேவைகள், புனர்வாழ்வு, நன்னடத்தையும் சிறுவர் பராமரிப்பு சேவைகளும் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் - வடக்கு மாகாணம்

සෞඛ්‍ය , දේශීය වෛද්‍ය , සමාජ සේවා , පුනරුත්ථාපන ,පරිවාස හා ළමාරක්ෂක සේවා සහ කාන්තා කටයුතු අමාත්‍යවරයා - උතුරු පළාත

MINISTER FOR HEALTH, INDIGENOUS MEDICINE, SOCIAL SERVICES, REHABILITATION, PROBATION & CHILDCARE SERVICES AND WOMEN'S AFFAIRS - NORTHERN PROVINCE



# வாழ்த்துச் செய்தி

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் தனது வைரவிழாவை முன்னிட்டு வெளியிடவுள்ள வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1956ஆம் ஆண்டு அப்போதைய அமைச்சர் கௌரவ சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பின் அப்போதைய யாழ்ப்பாண அரச அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்ற தகவலை அறியும் போது ஆரம்பகாலத்தலைவரும் இந்நிறுவனகர்த்தாவுமான திரு. இ.க. சண்முகநாதன் அவர்களின் அரும்பணி பாராட்டப்பட்டு நினைவுகூரப்படவேண்டியதொன்றாகும்.

வேலைக்குச் செலும் பெற்றோர்களின் பிள்ளைகளை பராமரிக்கும் நல்நோக்குடன் நிறுவப்பட்ட இப்பாடசாலை வடமாகாணத்தின் முதலாவது பாலர் பராமரிப்பு நிலையம் என்ற பெருமையைப் பெற்றுள்ளதோடு நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்ட பாலர் பகல் விடுதிகளில் முன்னணியில் திகழ்கிறது என்பது சிறப்பம்சமாகும்.

தற்கால கல்வி முறைக்கேற்ப கணினிக்கல்வி, ஆங்கில பேச்சுக் கலை, (Elocution) போன்றவற்றை சிறுவர்களுக்கு போதிக்கும் இந்நிறுவனம் தொடர்ந்தும் தன் பணியை ஆற்றி சரிந்து போயிருக்கும் வடமாகாண கல்வியை மேம்பட வைக்க வேண்டுமெனவும் கோரி விழா மலர் சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Dr.**பத்மநாதன் சத்தியலிங்கம்.
அமைச்சர்,
சுகாதார சுதேச வைத்திய, சிறுவர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.

வைத்திய கலாநிதி
ப.சத்தியலிங்கம்
சுகாதார அமைச்சர்
வட மாகாணம்

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone
021-222 2235

ෆැක්ස්
பக்ஸ்
Fax
021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone
021-222 2233
021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. Jf/GA/VAL/03/2016

ඔබේ අංකය / உமது எண் / Your No.

දිනය / திகதி / Date 0.06.2016



## வாழ்த்துச் செய்தி

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நீர்வேலி பாலர் பகல்விடுதியும் முன்பள்ளியும் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தினால் ஸ்தாபிக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு செய்வதனை வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

“உண்மையே வெல்லும்” எனும் தனது மகுட வாசகத்திற்கு ஏற்ப ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய முன்பள்ளிச்செயற்பாட்டினை மழலைச் செல்வங்களுக்கு ஊட்டும் உயரிய நோக்கோடு உருவாக்கப்பட்ட அதே வேளை வேலைக்கு செல்லும் பெற்றோரின் பிள்ளைகளை பராமரிக்கும் பாலர் பகல் விடுதி வடமாகாணத்தில் முதலாவது பராமரிப்பு நிலையமாக குறிப்பிடப்படுவதும் சிறப்புக்குரியது.

இக் கிராமத்தவர்களின் அபிவிருத்திக்கும் தனிநபர் முயற்சிகளுக்கும் அடிப்படையாய் அனைவரும் உழைக்க வேண்டிய காலகட்டத்திற்கு ஏற்ற வகையில் பாலரை பராமரிப்பதும் நல்ல அறிவு புகட்டுவதும் அவர்களுக்கு நல்ல சூழலில் மகிழ்ச்சியான அறிவுத்தேடலுக்கும், விளையாட்டிற்கும் உற்ற துணையாக இப் பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பது காலத்தின் தேவையான தொன்றாகும்.

அகவை அறுபதில் வைரவிழா காணும் இப்பாலர் பகல் விடுதி வைரவிழா மலர் வெளியீடு செய்வது அதன் பணியை அனைவரும் பயனுள்ள வகையில் போற்ற எடுக்கப்பட்ட நன் முயற்சி எனலாம். இப்பணியை ஆற்றிவரும் சமுதாய முன்னேற்றக் கழகத்தினர் பாராட்டுக்கு உரியவர்கள். அவர்களை பாராட்டுவதோடு வைரவிழா சிறப்புமலர் மலர்ந்து நறுமணம் பரப்ப என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்**

**கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**



## வாழ்த்துச் செய்தி

நீர்வேலி பாலர் பகல் விடுதி, முன்பள்ளியினது வைரவிழாவை முன்னிட்டு நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தினரால் வெளியிடப்படும் வைரவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி யடைகின்றேன்.

நீர்வேலி கந்தசாமி கோவில் வீதியில் அமைதியான சூழலில் 1956ஆம் ஆண்டு வடமாகாணத்தின் முதலாவது பாலர் பராமரிப்பு நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாலர் பகல் விடுதி தற்போதும் அரசாங்க நன்கொடையுடன் ஊர்மக்களின் அன்பளிப்புக்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் மூலம் கிடைக்கப்பெறும் நிதியில் மிகச் சிறப்பாக இயங்கி வருவது பாராட்டத்தக்கதாகும். நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தினரால் நடாத்தப்படும் இப்பாலர் பகல் விடுதியானது வேலைக்குச் செல்லும் பெற்றோரின் பிள்ளைகளை பராமரிக்கும் அளப்பெரிய சேவையை ஆற்றி வருகின்றமை பிள்ளைகளை பராமரிக்க வசதியற்ற அப்பிரதேச பெற்றோருக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

1970களில் அறிமுகப்படுத்தப்பட்ட முன்பள்ளி செயற்பாடு பாலர் பகல் விடுதியில் பராமரிக்கப்படும் பாலகர்களுக்கு அன்றிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். மேற்பார்வையாளர், ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள், சமையலாளர், தொழிலாளி ஆகியோரின் பங்குபற்றலுடன் சிறப்பாக இயங்கிவருகின்றது. காலை 07.30 மணியிலிருந்து மாலை 04.30 மணிவரை

பராமரிக்கப்படும் பாலகர்களுக்கு காலை சத்துணவுடன் பாலும் வழங்கப்படுவதுடன் மதியம் போசணை மிக்க உணவும் வழங்கப்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கதாகும்.

சகல வசதிகளுடனும் செயற்பட்டுவரும் இப்பாலர் பகல் விடுதியையும் முன்பள்ளியையும் சிறப்பாக நடாத்திவரும் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தினருக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இப்பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் மேலும் சிறப்பாக செயற்பட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமெனக் கேட்டு வைரவிழாவும் மலர் வெளியீடும் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. இ. இரவீந்திரன்,**
**செயலாளர்**

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුව
DEPARTMENT OF PROBATION AND CHILD CARE SERVICES
வட மாகாணம் උතුරු පළාත NORTHERN PROVINCE
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்
මීනාච්චි අම්මන් පාර, පන්නෙයි, යාපනය
Meenadchi Amman Road, Pannai, Jaffna


Date : 04.06.2016 2015/06/04



# வாழ்த்துச் செய்தி

இலங்கையின் வடபால் அமைந்த யாழ்நகரின் பயிர்கள் செழித்து வளர்ந்து வரும் எழில்கொஞ்சும் நீர்வேலி என்னும் கிராமத்தில் அமைந்துள்ள சின்னஞ் சிறார்களின் அழகில் திளைக்கும் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

வேலைக்குச் செல்லும் பெற்றோரின் சிறார்களை பராமரிக்கும் நோக்குடன் 08.12.1955ஆம் ஆண்டு அப்போதைய கௌரவ அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 08.07.1956ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்க அதிபர் திரு. ம. சிறீகாந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டு இவ் பாலர் பகல் விடுதி ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரி அதிபராகவும் பின்னர் கல்விப்பணிப்பாளராகவும் திகழ்ந்த திரு. இ. க. சண்முகநாதன் அவர்கள் இவ் நிறுவன தோற்றத்திற்கு காரணகர்த்தாவாகவும் ஆரம்பம் முதல் நீண்டகாலம் தலைவராகவும் செயற்பட்டு இவ் பாலர் பகல் விடுதியினை சிறப்பான முறையில் இயக்குவித்தார். தற்போது இளைப்பாறிய கல்லூரி அதிபர் திரு.செ. பத்மநாதன் தலைமையில் மேலும் வளர்ந்துவரும் இப்பாலர் பகல் பராமரிப்பு நிலையமானது வடமாகாணத்திலே முதலாவது பாலர் பகல் பராமரிப்பு நிலையம் என்பதுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடியான ஒரு சில பாலர் பராமரிப்பு நிலையங்களில் இதுவும் ஒன்றாக அறியக் கிடக்கின்றது.

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக்கண்களைப் பெற்றவர்களே உயிர்வாழ்வோர் எனக் கருதப்படுகின்றனர். இவ்வாறான அறிவுக்கண்களானது ஆரம்ப காலத்திலேயே புகுத்தப்படவேண்டும்.இதனாலே எழுபதுகளின் முற்பகுதியில் இலங்கையின் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த ஓராண்டுகால கல்விச்செயற்பாடுகள் (அரிவரிவகுப்பு) அரசாங்கத்தால் நிறுத்தப்பட்ட போது இச்செயற்பாடு முன்பள்ளியாக இப்பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு பாலர் நிலையச் சிறார்களுக்கு சிறப்பாக நடாத்தப்பட்டு வருவதையிட்டு பெருமுவகை கொள்கின்றேன்.

வாழுகின்ற நல்லவர்க்கு அறிவியலும் கலையியலும் சிறந்த கண் என்று அறிந்தவர் கூறுவர். இவை இரண்டும் ஒருங்கே கொண்டதாக இப்பாலர் பகல் பராமரிப்பு நிலையம் கோப்பாய் பிரதேச சிறார்கள் பயன்பெறும் வகையில் மிகக்குறைந்த பராமரிப்பு கட்டணத்துடன் இலவசமாக தரமான முன்பள்ளிச் செயற்பாடுகளை வழங்கும் இலாபநோக்கற்ற நிறுவனமாக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள், தொழிலாளிகள் போன்ற ஆளணிவளத்துடன் சத்துணவு, பால், மதிய உணவு என்பன வழங்கும் விசாலமான கட்டிடத்தில் சகல வசதிகள் அடங்கிய அழகான இவ் பாலர் பகல் பராமரிப்பு நிலையமானது இன்று வைரவிழா காண்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

நவீனமுறையில் கணினிக்கல்வி, ஆங்கிலமொழிப் பேச்சுக்கலை என்பன இச்சிறார்களுக்கு வழங்கப்பட்டு வருவது காணக்கூடியதாகவுள்ளது. இளமையிலே பழகுகின்ற பழக்க வழக்கங்கள் ஏழ் பிறவிக்கு தொடருமாம் என்பது போல ஆரம்ப அறிவுகளைப்புகட்டி சிறந்த பாலர் பகல் பராமரிப்பு நிலையமாக மிளிர்கின்ற இவ் நிலையம் மேலும் வளர்ச்சி பெறவும் வைரவிழா மலர் சிறப்பாக வெளிவரவும் எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.



தி.விஸ்வரூபன்
ஆணையாளர்

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
**Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs**
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council

செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com



# வாழ்த்துச் செய்தி

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் செவ்வனே சேவையாற்றி தனது 60ஆவது வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளதை முன்னிட்டு வெளியிடப்படும் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்பப் பிள்ளைப் பருவம் என்பது மனித வாழ்க்கையில் மிகமுக்கியமான பருவமாகும். ஒருவருடைய வாழ்க்கைப் பருவத்தை தீர்மானிக்கின்ற முதற்படியாக அமைவது அவனுடைய குழந்தைப் பருவமாகும். ஒரு குழந்தை தனது 5 வயதிலேயே பூரண மனிதனுக்குரிய இயல்புகளை பெற்றுக் கொள்வதாகவும், அவ்வயதிலேயே குறிப்பிடத்தக்க அளவு ஆளுமை வளர்ந்து விடுவதாகவும் இந்த வயதில் ஏற்படும் தீமைகளை மீள ஒருபோதும் திருத்தப்பட முடியாது எனவும் குறிப்பிடப்படுவது நாம் அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் நீர்வேலியில் இயங்கி வரும் பாலர் பராமரிப்பு நிலையம் குழந்தைகளின் விருத்தியை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. கோப்பாய் பிரதேச குழந்தைகளுக்கு கல்வியையும், போசாக்கினையும், பாதுகாப்பையும் வழங்கி சிறந்த சேவையாற்றி வருகின்றது. இச்சேவை குழந்தைகளுக்கு குறைந்த கட்டணத்திலேயே வழங்கப்படுகின்றது.

மேலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கின்ற எமது உறவுகள் இவ் நிலையத்துக்கு தேவையான உதவிகளை வழங்கி வருகின்றனர். சிறிதளவு அரச நிதியுதவியும் கிடைக்கின்றது. போதுமான பௌதீகவளம்,

மனிதவளத்தைக் கொண்டு சிறந்த சூழலில் இவ் நிலையம் இயங்கி வருகின்றது.

இங்குள்ள நிர்வாகம் தொடர்ச்சியாக சிறந்தசேவையை ஆற்றி வருகின்றது. தற்போதுள்ள இந் நிலையத்தின் தலைவர் திரு. செ. பத்மநாதன் அவர்கள் இவ் நிலையத்தை சிறப்பாக நடத்தவேண்டும் என அயராது உழைத்து வருகின்றார். அவருடைய தலைமையில் இந்த நிலையத்தின் வைரவிழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இவ் வைரவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துவதோடு அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெயா தம்பையா
பணிப்பாளர்.
ஆரம்பப்பிள்ளைப்பருவஅபிவிருத்திப் பிரிவு.

பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு - கோப்பாய்.
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, වැලිකාමම් නැගෙනහිර-කෝපායි.
Divisional Secretariat, Valikamam East – Kopay.

Divisional Secretary: 021 223 0013 Fax : 021 223 1211 E-mail: valiesastds@gmail.com

எனது இல / මගේ අංකය / My No: VE/DS/ADM/VAZ/2016
உமது இல / ඔබේ අංකය / Your No:
திகதி / දිනය / Date: 01.07.2016



## வாழ்த்துச் செய்தி

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தால் பராமரிக்கப்படும் பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் தன்னுடைய செயற்பணியினை மிகச்சிறப்பாக மேற்கொண்டு முன்பள்ளிச் சிறார்களது வாழ்வில் ஒளியேற்றுவதுடன் பெற்றோர்களுக்கு பெரும் ஆறுதலினை வழங்கி வருவது பாராட்டுதற்குரியது. 1956ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 60 வருடங்கள் சிறப்பாக இயங்கி வைரவிழா கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படுகின்ற வைரவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நீர்வேலிப்பகுதியில் அமைந்துள்ளமையால் நீர்வேலியைச் சூழவுள்ள பிரதேசத்திற்கு மட்டுமன்றி கோப்பாய் பிரதேசத்தின் பலபகுதியிலும் வாழ்கின்ற சிறுவர்களுக்கு முன்பள்ளிக்கல்வியை வழங்குவதோடு பெற்றோர்களுக்கும் பெரும் ஆறுதலாக அமைந்துள்ளது. காலை 7.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை பராமரிப்புடன் இப்பிள்ளைகளுக்கு காலைநேரப்பாலுடன் சத்துணவும் மதியம் போசணைமிக்க உணவும் மாலை சிற்றுண்டியும் தேநீரும் வழங்கி மகிழ்வான சூழலையும் ஏற்படுத்திவருகின்றார்கள். பெற்றோர்களுக்கு குறிப்பாக அரச கடமையாற்றும் பெற்றேர்களுக்கு பெரும் ஆறுதலாக அமைந்துள்ளது இப்பாலர் பகல் விடுதியின் சிறப்பம்சமாகும்.

முன்பள்ளி தொடர்பான செயற்பாடுகள் இன்று நவீனமய மாக்கப்பட்டு காலதேசவர்த்தமானத்திற்கேற்ப இயங்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அதற்கேற்றால்போல் கணினிக்கூடம், விளையாட்டு முற்றம்,

கற்றல் விளையாட்டு உபகரணங்கள் போன்ற பல்வேறு வசதிகளும் கொண்டு இப்பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் இயங்கி வருகின்றமையானது காலத்தின் தேவைக்கேற்ப ஏற்படும் மாற்றத்தினை நிர்வாகம் கருத்தில் எடுப்பதனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

கோப்பாய் பிரதேச மண்ணில் புகழ்பரப்பி நிற்கும் நீர்வேலி பாலர் பகல்விடுதியும் முன்பள்ளியும் தொடர்ந்து சிறப்பாக செயற்பட்டு மாணவர்களது கல்வி, சமூக,ஆளுமை வளர்ச்சியிலே பங்கெடுத்து நல்ல சந்ததியினரை உருவாக்கி தொடர்ந்து நிலைபெற வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு அதற்காக இறையருளினையும் வேண்டிநிற்கின்றேன்.

திரு.மருதலிங்கம் பிரதீபன்,
பிரதேச செயலர்.

வலயக் கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம்
**Zonal Education Office – Jaffna**

தொலைபேசி Telephone: 021-222-2449, 021-222-1649

தொலைநகல் Fax: 021-222-2449, 021-222-1649

எமது இலக்கம் My Number: ZEO/Dev/ /pre-school/

உமது இலக்கம் Your Number
Date: 22 . 06 2016



# வாழ்த்துச் செய்தி

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் என்ற நிறுவனமானது தனது பெருமை மிகு சேவைக்காலத்தில் வைரவிழாவினை காணும் இவ்வேளையில் அதனை வாழ்த்துவதில் மிக மகிழ்ச்சி யடைகின்றேன்.

பாலர்களுக்குகந்த சேவைகளை வழங்கும் மாதிரி முன்பள்ளிக்கான வளங்கள் பலதையும் உடைய ஓர் சேவைக்களம், பாலர்கள் கல்விக்கேற்ற, முன்பள்ளிக் கொள்கைக்கு ஏற்ற விளையாட்டுத்திடல், பெற்றார் பாலர் வளர்ச்சி மாற்றம் கண்டு மகிழ்ந்த சம்பவங்கள் பலதைக் கண்டு மகிழ்வடைந்த சம்பவம் பல. வலயத்துக்கான பெருமைகள் அவை.

இது மட்டுமன்றி இத்தனைக்கும் சிறப்பாக, பலமாக, வளமாக அமைந்தது நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் (தற்போது ஓய்வு நிலை அதிபர்). மனித விழுமியத்தை எடுத்துக் காட்டும் நல்லதோர் நண்பர், மதிப்புக்குரிய திரு. செ. பத்மநாதன் அவர் வழி முகாமைத்துவக் குழு ஆற்றும் பணிகள் அற்புதம்.

மொண்டிசோரி அம்மையார் எதிர்பார்த்த பாடசாலை அமைப்பை உருவாக்கிவரும் இந்த அணியினர் தவறாது தொடர்ந்து செயற்பட வேண்டும். யாழ் வலய முன்பள்ளிகளில் முதன்மை நிலை முன்பள்ளியாக இருக்கின்ற நிலை மேலும் வளர வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

திரு.க.விமலநாதன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்..

எனது இல. / මගේ අංකය. / My No: NP/14/41/GEN/2016 | உமது இல. / ඔබේ අංකය / Your No | திகதி / දිනය / Date



# வாழ்த்துச் செய்தி

நீர்வை மண்ணின் புகழை மேலோங்கச் செய்யும் வகையில் நீண்டகாலமாக கிராமத்தின் மத்தியில் அமைந்து அக்கிராமத்தினதும் அயற் கிராமங்களினதும் மழலைகளின் மகிழ்விடமாக விளங்கும் நீர்வேலி பாலர்பகல் விடுதியினதும், முன்பள்ளியினதும் வைரவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

“மழலைகள் சிரிப்பிலே மகிழ்ந்திராதோர் யாருமுண்டோ” எனும் வாக்கிற்கிணங்க மழலைகளை மகிழ்வித்து நல்வழிப்படுத்தி நெறிப்படுத்தும் இப் பாலர் பகல் விடுதி ஆசிரியர் குழாத்தினதும், நிர்வாகத்தினதும் அருந் தொண்டு போற்றுதற்குரியது.

நாளைய தலைவர்களாக மிளிரவுள்ள இன்றைய சிறுவர்களை நல்வழிப்படுத்தும் இப்பாலர்பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் சேவை சிறக்க மனதார வாழ்த்துவதோடு இவர்களது சேவை வலிகாமம் கிழக்கு பிரதேசம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டு மேலும் பல சிற்பிகளை உருவாக்க வேண்டுமென பிராத்திக்கின்றேன்.

“மழலைகள் சிரிப்பில் மகிழ்ந்திருப்போம்”

**திரு. யுகராஜா ஜெலீபன்,**
**செயலாளர்.**

**ATTIAR HINDU COLLEGE**
**அத்தியார் இந்துக் கல்லூரி**

நீர்வேலி.
யாழ்ப்பாணம்.

Neervely.
Jaffna.

T. P. No.: 021 223 0499 Fax: 021 223 0499 e-mail: ahcn29@gmail.com




## வாழ்த்துச் செய்தி

"நான் இன்னாராக வரவேண்டுமென நீங்கள் தீர்மானிப்பீர்களாயின் நான் என்னையே இழந்துவிடுவேன்" என்பது முன்பள்ளிப்பருவ மாணவர்களின் செயற்பாடுகள் பற்றி ஆய்வு செய்யும் ஓர் கல்வியலாளரின் கூற்று. இதற்குமகுடம் வைத்தாற் போல பிள்ளைகளின் இயல்பான செயற்பாடுகளினூடாக பாடசாலைக் கற்றலுக்கான ஏது நிலைகளைத் தயார்படுத்தும் மையமாக இற்றைக்கு அறுபது ஆண்டுகளாக தளர்வின்றிப் பணியாற்றிவரும் பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் தனது வைரவிழாவினைக் கொண்டாடும் இவ் வேளையிலே மனமாரப் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவின் மத்தியிலே நீர்வேலிக் கிராமத்தில் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைக் கோலத்தை நன்கு புரிந்து கொண்ட கல்வியியலாளன் கனவான் இ. க. சண்முகநாதன் அவர்களின் சிந்தனையிலே உதித்து சிறப்புற இயங்கிவரும் இந்நிறுவனமானது வேலைக்குச் செல்லும் பெற்றோரின் பிள்ளைகளைப் பகற்பொழுதிற் பராமரிக்கும் பாரிய பணியை மேற்கொண்டு வருகின்றது.

நாடு சுகந்திரமடைந்ததைத் தொடர்ந்து அரச ஊழியத்தின் மேற்பற்றுக் கொண்ட தொழிற்படை திணைக்களங்களை ஆக்கிரமிக்க ஆண், பெண் இருவருமே வேலைக்குச் செல்ல வேண்டிய சூழல் உருவானதால் பிள்ளைப் பராமரிப்பு என்பது பாரிய பிரச்சனையாக எழவே

ஆங்காங்கே பாலர்பராமரிப்புமையங்கள் உருவானது. அந்தவகையில் எமது நாட்டில் தோன்றிய முன்னோடிப் பாலர் பகல் விடுதிகளில் இதுவும் ஒன்றாகும். எதிர்காலத் தூண்களாக விளங்கப்போகின்ற தற்போதைய பாலர்களை ஆளுமையுடன் வளர்த்தெடுத்து அவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்யவேண்டும் என்ற தூரநோக்குச் சிந்தனையுடன் செயற்படும் நீர்வேலிக் கிராம முன்னோடிகள் பலரின் பல்வேறு அர்ப்பணிப்புக்களுடன் சிறப்பான வளங்கள் அனைத்தையுங் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் செழிப்பான நாற்றுமேடையான இந்நிறுவனத்தை இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்தி இங்கு கற்கும் சிறார்களின் எதிர்காலம் சிறப்படைய பிரார்த்திப்பதுடன் இதனை நல்ல முறையில் நெறிப்படுத்தும் தலைவர் ஓய்வுநிலை அதிபர் உயர்திரு. செ. பத்மநாதன் மற்றும் ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவரையும் பராட்டுகின்றேன்.



**திரு. கு. ரவிச்சந்திரன்,**
**அதிபர்.**

யா / கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
J / KARANTHAN RAMUPPILLAI VIDYALAYAM

நீர்வேலி
இலங்கை

Neervely
Srilanka



## வாழ்த்துச் செய்தி

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் தனது அறுபதாவது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து அதன் வரலாற்றை ஆவணப் படுத்துவதற்காக வெளியிடும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நீர்வேலி சமுதாய முன்னேற்ற கழகம் அரசாங்க நன்கொடை, ஊர்மக்களின் ஒத்துழைப்பு மற்றும் சிரமதானம் என்பவற்றின் மூலமும், திரு இ. க. சண்முகநாதன் அவர்களின் விடாமுயற்சியாலும் 08.07. 1956இல் இப் பாலர் பகல்விடுதி ஆரம்பிக்கப்பட்டது. இது வடமாகாணத்தின் முதலாவது பாலர் விடுதி எனும் பெருமையையும் பெற்றுத் திகழ்கிறது.

1970களின் முற்பகுதியில் 5வயதினைப் பூர்த்திசெய்த பிள்ளைகளைப் பாடசாலையில் அனுமதிப்பது எனும் திட்டம் கொண்டுவரப்பட்ட காலம் முதல் இன்றுவரை முன்பள்ளிச் செயற்பாடுகளும் இங்கு திறம்பட நடைபெற்று வருகின்றது.

கோப்பாய் பிரதேச பிள்ளைகள் பயன்பெறும் வகையிலும் வேலைக்குச் செல்லும் பெற்றோரின் சுமைகளைச் சற்றுக் குறைக்கும் வகையிலும் இயங்கிவரும் இப் பாலர் நிலையம் இலாபநோக்கமற்ற ஒரு நிறுவனம் என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

குறைந்த பராமரிப்புக் கட்டணத்துடனும், இலவசமாகவும், தரமானதாகவும், முன்பள்ளிச் செயற்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது சகலவசதிகளும் கொண்ட சுற்றுமதிலுடனான விசாலமான கட்டடத் தொகுதியில் இயங்குவது மட்டுமல்லாது, மாதிரி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் ஆகும். இங்கு கணினி வகுப்புக்கள், ஆங்கிலப் பேச்சுக்கலை வகுப்புக்கள் என்பனவும் நடாத்தப்பட்டுவருகின்றன.

இவ்வாறன சிறப்பும் செழிப்பும் கொண்ட இப் பாலர் பகல் விடுதியானது மென்மேலும் வளர்ச்சி பெற்று எமது கிராமத்தில் சிறந்தோங்கி நிற்க வாழ்த்துவதோடு இச்சந்தர்ப்பத்தை வழங்கிய முன்பள்ளிச் சமூகத்திற்கும் என் வாழ்த்துக்களை கூறி நிற்கின்றேன்.



**திருமதி சாந்தினி வாகீசன்,**
**அதிபர்.**

# சிறார்களின் கலைக்கூடமே வாழி



கிராம சேவையாளர்,
நீர்வேலி தெற்கு.

நீர்வேலி தெற்கில் அமைந்துள்ள பாலர் பகல் விடுதியின் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்தமையை எண்ணிப் பேருவகை அடைகின்றேன். எனது கிராம அலுவலர் பிரிவில் முன்பள்ளிக் கல்வியை மட்டுமன்றி சிறார்களைப் பராமரிக்கும் நிலையமாகவும் விளங்கும் ஒரேயொரு நிறுவனம் என்ற பெருமையும் புகழும் இந்த பாலர் பகல் விடுதிக்கு மட்டுமே உரியது. மேலும் யாழ் மாவட்டத்தில் முன்பள்ளிக் கல்வியோடு பாலர்களைப் பராமரித்து அவர்களை நல்வழிப்படுத்தி சமூகத்துக்கு கையளிக்கும் நிறுவனமாக இது விளங்குவது எமது பிரதேசத்துக்கு கிடைத்த அருங்கொடையாகும்.

முன்பள்ளிக் கல்வி சிறுவர்களின் எதிர்காலக்கல்விக்கு ஆணிவேராக விளங்குகின்றது. பாலர் பகல்விடுதி சிறுவர்களுக்கான முன்பள்ளிக் கல்வியை மட்டுமன்றி குழந்தைகளைப் பராமரித்து வளர்த்தெடுக்கும் பெரும் பணியையும் நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியது. கடந்த அறுபது ஆண்டுகளாக இத்தகைய பணிகளை இந்நிலையம் ஆற்றிவருவது வரலாற்றுச் சாதனை ஆகும். இந்நிலையத்தில் கல்வி பயின்ற பலர் இன்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நற்பிரசைகளாக உயர்ந்த நிலைகளில் வாழ்ந்து வருவதை அறியும் போது எமது பிரதேசம் பெருமையடைகின்றது, பூரிப்புப் பெறுகின்றது.

பாலர் பகல் விடுதி முன்பள்ளிக் கல்விக்குரிய அடிப்படைத் தேர்ச்சிகளை முறையாக வழங்கிவருவதே அதன் சாதனைகளுக்கு காரணங்களாகும். அத்துடன் சிறார்களின் உடல், உள ஆற்றல்கள், சமூகத்துக்குப் பொருத்தப்பாடான நற்பழக்க வழக்கங்கள் என்பனவற்றை வளர்ப்பதில்அர்ப்பணிப்புடன் செயலாற்றிவருவதை நான் நன்கு அறிவேன். இந்த வகையில் வைரவிழாவைக் கொண்டாடும் பாலர் பகல்விடுதி சமூகத்தினருக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு இக்கலைக்கூடம் மென்மேலும் வளர்ந்து இப்பிரதேசத்துக்குப் பெரும் பணி ஆற்ற எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ. வசந்தகுமார்**

# 60 ஆண்டுகள் அயராத சேவை



தலைவர் – நீர்வேலி நலன்புரிச் சங்கம்,
அத்தியார் இந்துக்கல்லூரிபழைய மாணவர்
நலன்விரும்பிகள் சங்கம்,
இலண்டன்.

எமது பாலர் நிலையம் 60ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் .இவ்வேளையில் வெளியிடப்படும் விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன்.

உலகமெல்லாம் சிறுவர் கல்வியும் மேம்பாடும் என்பவைக்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் சிறுவயதில் பழகும் நல்ல பழக்கங்கள், கல்வி என்பவை வாழ்வின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமையும் என்பது பல அறிஞர்களின் கருத்து.

சிறுவர் கல்வியிலும் அவர்களது வளர்ச்சியிலும் உலகமெல்லாம் பெயர் பெற்றவர் Dr. Maria Montessori என்பவர். இவர் 20ம் நூற்றாண்டில் சிறுவர்களை எப்படி வளர்ப்பது, எப்படி ஊக்குவிப்பது என்ற விடயங்களை ஆராய்ச்சி செய்து அதை உலகமெல்லாம் பரப்பியிருந்தார். இன்றும் கூட பிள்ளைகளை படிப்பிக்கும் கலைக்கூடங்கள் அவரது பெயரால் Montessori Schools என்று அழைக்கப்படுகின்றன. இலங்கையிலும் கூட Montessori Schools பல இடங்களில் அமைந்துள்ளன.

எமது பாலர் நிலையம் 1956இல் உருவாகியது. இங்கு தமக்கென்றே ஒரு Curriculum ஒன்றை உருவாக்கி எமது சிறார்களை வழிநடாத்துவது பாராட்டுக்குரியது. ஏனென்றால் இங்கு இருக்கும் கற்பித்தல் முறைகள் உலக முன்னோடியான Montessori School போன்று எல்லாவிதமான நல்ல வழிமுறைகளையும் கையாண்டு எமது சிறார்களுக்கு அவர்களை வழி நடத்தல், கற்பித்தல், அவர்களை ஊக்குவித்தல் ஆகியவற்றைச் சிறப்புற செய்கின்றார்கள். இதையிட்டு நாம் பெருமைப்படவேண்டும், பாரட்ட வேண்டும்.

எமது பாலர் நிலையம் 1956ஆம் ஆண்டில் முக்கியமாக திரு. இ. க. சண்முகநாதன், திரு. க. இராசதுரை, திரு. வே. சி. அப்புத்துரை அவர்கள் தலைமையில் மற்றும் எமது ஊரைச் சேர்ந்த அங்கத்தவர்களின்

உதவிகளுடன் ஸ்தாபிக்கப்பட்டது. இவர்களது முயற்சியும் தொலை நோக்குமே இந்த பாலர் நிலையத்தின் ஊன்று கோலாக அமைந்துள்ளது. இவர்களை நாம் என்றும் மறக்காமல் எமது மனத்தில் கொண்டு நன்றியுடையவர்களாக இருக்க நாம் எல்லோரும் கடமைப்பட்டுள்ளோம்.

பல காலங்களாக வீறு நடைபோட்டு வந்த பாலர் நிலையம் எமது நாட்டில் நடந்த அனர்த்தங்களினால் சில பின்னடைவுகளை கண்டு இருந்தது. ஆனாலும் பலரது முயற்சியால் 2012ஆம் ஆண்டு திரு செல்வநாயகம் பத்மநாதன் தலைமையில் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டு திரும்பவும் இழந்த உள்நாட்டு வெளிநாட்டு அங்கத்தவர்களைச் சேர்த்து 1956ல் உருவாக்கிய யாப்பை புனரமைத்து, ஒழுங்கான வரவு செலவு வைத்தல், வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்தல், இப்படியான சீர்திருத்தங்கள் மீண்டும் உருவாக்கப்பட்டன.

ஒரு மக்களின் பொது ஸ்தாபனம் எப்படி நடக்கவேண்டுமோ அப்படி நடப்பதற்கான அடித்தளங்களையிட்டு இன்னும் பல அடித்தளங்களையிட்டு இன்னும் பல வருடங்களுக்கு எமது மக்களின் சேவைக்காக, மக்களின் முன்னேற்றத்துக்காக பாலர் நிலையம் இயங்கும் வகையில் அமைந்துள்ளது.

இதற்காக தன்னலம் இல்லாமல் கடைமையாற்றும் தலைவர் திரு. செ. பத்மநாதன், செயலாளர் திரு. வே. குணசீலன், தனாதிகாரி திரு. பொ. சரவணபவானந்தன் மற்றும் செயற்குழு அங்கத்தவர்கள் திரு. பா. சசிகுமார், திரு. கு. வரதகுலசிங்கம், திரு. த. பதமநாதன், திரு. தி. முத்துக்குமரன், திருமதி. உ. யோகானந்தா, திரு. ந. குமணன், திரு. இ. நிதீபன், திரு. தே. குகானந்தன் ஆகியோரின் சேவையை நாம் பாராட்டுகின்றோம்.

இந்த புதிய நிர்வாகம் 2012ல் பொறுப்பெடுக்க முன்பு பிள்ளைகளின் வரவு குறைந்திருந்தது. ஆனால் இன்று பாலர் நிலையத்தின் முழுமையான வசதிகளை பாவிக்கக்கூடிய முறையில் நிரம்பியிருப்பது புதிய நிர்வாகத்தின் திறமையையும் தகமையையும் எடுத்துக் காட்டுகின்றது. இவர்களது சேவை மனப்பாண்மை, தன்னலமில்லாமை, சமூகத்தின் முன்னேற்றம் கருதி அவர்கள் செய்யும் சேவையை நாம் எல்லோரும் வரவேற்கின்றோம். இதைப் பார்த்து எமது பொது அமைப்புக்கள் பின்பற்றி மேலும் எமது சமூக மேம்பாட்டிற்கு உதவுவார்கள் என்று நம்புகின்றோம்.

இந்த நான்கு வருடங்களில் பாலர் நிலைய வளாகங்கள் திருத்தப்பட்டன, நிர்வாகம் சீர் திருத்தப்பட்டது, கணக்குகள் நேரத்திற்கு

கொடுக்கப்பட்டது, நிர்வாகக் குழு ஒழுங்காக சந்தித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, பிள்ளைகள் தொகை அதிகரித்தள்ளன, ஆசிரியர்கள் தமது கற்ப்பித்தலை முன்னேற்றகரமாக செய்கின்றார்கள், பெற்றோரின் பங்களிப்பும் அதிகரித்துள்ளது, புதிய பாடங்கள், ஆங்கில பேச்சுக்கலை வகுப்பு, கணினிக்கல்வி என்பன தொடங்கப்பட்டன. அத்துடன் வருடா வருடம் கண்காட்சி, விளையாட்டுப் போட்டி, கலைவிழா, சுற்றலா என்பன திறமையாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் வரவேற்று எமது இலண்டன் அங்கத்தவர்கள் பலவருடங்களாக தமது பங்கை ஆற்றி வருகின்றார்கள். இன்று பாலர் நிலையத்தின் முன்னேற்றம் கண்டு மேலும் உதவி செய்ய முன்வருகின்றார்கள். இங்கு இருப்பவர்கள் மாதா மாதம் பாலர் நிலையத்திற்காக தாம் உதவி செய்வதுடன் தமது பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கும் மற்றும் திருமணநாள் நினைவுகள், குடும்ப அங்கத்தவர்களின் இறந்த நினைவுநாள்கள் மற்றும் வேறு நிகழ்வுகளிற்காகவும் மதிய போசன நன்கொடையை வழங்கி ஊக்குவித்து வருகின்றார்கள்.

எமது பாலர் நிலையம் மேலும் மேலும் வளரவேண்டும். பாலர் கல்வி சிறுவர்களது மேம்பாட்டிற்கு ஒரு அடித்தளமாக திகழ வேண்டும் என்று வேண்டுவதுடன் இலண்டன், நீர்வேலி நலன்புரிச்சங்கத்தின் ஆதரவு எப்பொழுதும் இருக்கும் என்றும் கூறி பாலர்நிலையம் வாழிய வாழியவே என்று வாழ்த்துகின்றேன்.

மா. திருவாசகம்

**மா. திருவாசகம்**

# வைரவிழா காணும் பாலர் பகல் விடுதிக்கு என் உளமார்ந்த வாழ்த்துக்கள்



செயலாளர் – நீர்வேலி நலன்புரிச்சங்கம்,
அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
இலண்டன்.

உடலால் உழைத்து தன்காலை ஊன்றி நிற்றலும், உயிரினங்கள் அனைத்திடமும் கருணைகாட்டலும், அன்பாய் இருத்தலும், மகான்களை போற்றுதலும் கடவுளையே நம்பி நல்ல காரியங்கள் எல்லாவற்றிக்கும் கைகொடுத்தலும் மனிதனுடைய முக்கியமான கடமைகள். மனிதனுடைய மனம் ஒரு அழகான பூந்தோட்டம். மனிதன் அத்தோட்டத்தை பண்படுத்தி உயர்ந்த இலக்குடன் விதைக்கின்ற விதை நெடியது, வளர்ந்து விருட்சமாகி ஊரை நிறைத்து நிற்கும் காட்சி உலகினர் நெஞ்சை எல்லாம் நிறைத்து நிற்கும். அத்தகைய பெரு விருட்சத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு நீர்வேலியின் கோபுரமாக அமைந்திருக்கும் அத்தியார் இந்துக்கல்லூரி.

இதன் தொடர்ச்சியாக எம் நீர்வேலிப் பெருநிலத்தில் நல்லறத்தை தந்யைாகவும், நல்ல குணங்களை தாயாகவும், தான் பெற்ற கல்விச் செல்வத்தை தோழனாகவும், துணிச்சலை உடன் பிறப்பாகவும் கொண்ட பெருமக்கள் கூடி பல தர்மகாரியங்களை செய்து வருகின்றார்கள். இத்தகைய பெருமக்களின் எண்ணத்தில் உதித்த ரோஜா மலர்களின் தோட்டமே பாலர்பகல் விடுதி. அதனை கண்ணயராமல் காத்து நிற்கின்றது புகழ் பூத்த நீர்வேலி.

சத்தியம், சாந்தம், ஆசையின்மை, புலனடக்கம் ஆகியவற்றில் உறுதி கொண்ட மக்களின் செயற்பாட்டில்தான் இறைவன் குடிகொண்டிருக் கின்றான். அவர்களின் காரியசித்தியில்தான் மனிதகுலம் கடைத் தேறுகின்றது. அவ்வாறானவர்களின் செயற்பாட்டினால் தான் அறுபது ஆண்டுகளை தாண்டி இன்று பாலர் பகல் விடுதி பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

"அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்று உரைத்த பாரதியின் வழிகாட்டலில் அப்போதைய கௌரவ அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன், அப்போதைய வடமாகாண அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா ஆகியோரின் பெருமுயற்சியாலும் பொருளாதார ஊக்குவிப்பாலும் 1955இல் சேர் கந்தையா வைத்தியநாதனால் அடிக்கல் நாட்டப்பட்டு உதயமானதே இன்று பெருவளர்ச்சி கண்டு நிற்கும் பாலர் பகல்விடுதி.

புகழ்மிக்க இப்பாலர் பகல்விடுதியின் ஸ்தாபிதத்தில் அக்கறை கொண்டு பாடுபட்ட கல்லூரிகளின் அதிபராகவும் பின்னர் கல்வி அமைச்சில் கல்விப்பணிப்பாளராகவும் இருந்த திரு. இ. க. சண்முகநாதன் மற்றும் வே. சி அப்புத்துரை, ஆசிரியர் திரு. க. இராசதுரை ஆகிய பெருமக்களை நீர்வை மக்கள் என்றும் மறந்துவிடமாட்டார்கள்.

குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் அற்புதமாக அமைந்த நிறுவனம் பாலர் பகல்விடுதி என்றால் மிகையாகாது. இவ் நிறுவனத்தின் பாதுகாவலராகவும், குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறையுடன் வாழ்ந்து தமது வாழ்வைத் தலமாக்கி அல்லும் பகலும் தமது குடும்பத்திற்கும் பிறந்த மண்ணுக்கும் தொண்டாற்றி மறைந்த சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் இராசேந்திரக் குருக்கள் நீர்வை மக்களின் இதயத்தில் நீங்கா இடம் பிடித்துள்ளார் என்றால் மிகையாகாது.

அறம் என்பது இல் வாழ்க்கை என்ற வள்ளுவன் கொள்கையில் பல பரிமாணங்களில் வளர்ச்சி கண்டு மிளிரும் எமது பாலர் பகல் விடுதியை நிர்வகிக்கும் தற்போதைய நிர்வாகத்தினர் மிகவும் போற்றுதற்குரியவர்கள். அறம் செய்பவர்களின் வாழ்வும் புகழும் என்றும் நிலைத்து நிற்கும் என்பதாலேயே ஔவை அறம் செய்ய விரும்பு என்றார்.

இந்த வகையில் உலகம் பரந்து வாழும் எம்மண்ணின் மைந்தர்கள் எம்உறவுகள் மேற்கொள்கின்ற அனைத்து தர்மகாரியங்களிலும் கை கொடுத்து நிற்பார்கள் என்று கூறி மேலும் பல்லாண்டுகள் தம் பணியை பாலர் பகல்விடுதி சிறப்பாக மேற்கொள்ள வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

செ. செல்வநாதன்

# வைரவிழாக்காணும் பாலர் பகல்விடுதி



பொருளாளர் – நீர்வேலி நலன்புரிச் சங்கம்,
அத்தியார் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
இலண்டன்.

யாழ் மாவட்டத்தில் சிறந்த பாலர் பராமரிப்பு நிலையமாக பாலர் பகல் விடுதி விளங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். எங்கள் குடும்பத்தின் ஆரம்பப் பாடசாலையாகவும் சிறுவர்கள் ஒவ்வொருவரும் சந்தித்து விளையாட்டுக்களில் அன்றைய பொழுதை கழிக்கும் இடமாகவும் இப்பாடசாலை விளங்கியது என்று சொல்லும் பொழுது என்மனம் ஒரு கணம் பழைய நினைவுகளை தாலாட்டிச் செல்கின்றது.

இப்பாடசாலை எங்கள் ஊருக்கு பெருமை சேர்த்து நிற்கும் நீர்வேலிக் கந்தசாமி கோயிலுக்கு பக்கத்தில் அமைந்து இருந்தமையினால் இரண்டு இடங்களையும் எங்கள் பாதங்கள் சுற்றித் திரியும். அதில் ஒரு ஆனந்தம் எங்களுக்குள் தினமும் ஊற்றெடுக்கும். எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் ஐக்கிய இராச்சியத்திற்கு சிறுவயதிலேயே வந்த பொழுது இங்கு நான் பார்த்த கல்வி முறைகள், சிறுவர்களை பாடசாலையில் வைத்து பராமரிக்கும் முறைகள் என் மனதில் என்னமோ புதிய ஒரு புத்தணர்ச்சியை ஏற்ப்படுத்தியது மட்டுமல்லாது எங்கள் பாலர் பகல் விடுதியையும் இதுபோல் கொண்டுவர வேண்டும் என்ற வேட்கையும் என்மனதில் குடிகொண்டு என் தூக்கத்தைத் தொலைத்து கனவுகாண வைத்தது என்பது என் மனதுக்கே உரித்தான விடயமாகும். அதனை கனவாக்க நான் விரும்பவில்லை நிஜமாக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு பலரின் உதவியோடும் கடின உழைப்பாலும் வெளிநாட்டில் அதாவது நான் எந்தப் பாடசாலையைப் பார்த்துக் கனவு கண்டேனோ அதற்கு நிகராக பாலர் பகல் விடுதியையும் கொண்டுவந்துள்ளோம் என்பதில் பெருமையுடன் அளவுகடந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையை ஆரம்பகட்டத்தில் இருந்து மிகவும் கஷ்டப்பட்டு வளர்த்து எடுத்தவர்களை எப்படி எங்களால் மறக்க முடியும். அந்தவகையில் அவர்களுக்கு எங்கள் சிரம் தாழ்த்தி வணக்கத்தையும் நன்றிகளையும்

தெரிவித்தக் கொள்கின்றோம். அந்த வகையில் காலம் சென்றவர்களான இ.க. சண்முகநாதன், வே. சி. அப்புத்துரை, க. இராசதுரை, க. ச. முத்துவேலு, எஸ். மாணிக்கவாசகர், சு. கனகசபாபதிஐயர் ஆகிய இவர்களை நினைவுகூர்ந்து எங்கள் இதயம் கனிந்த மலர்மாலைகளை இவர்களுக்கு சூட்டிக் கொள்கின்றோம். ஆசிரியர் ஐ. சிவராசா அவர்களின் பங்கும் அளப்பெரியதும் போற்றத்தக்கதும் ஆகும். இவர்களோடு செ. பத்மநாதன், கு. வரதகுலசிங்கம், வே. குணசீலன், ந. குமணன், பொ. சரவணபவானந்தன், த. பத்மநாதன், தி. முத்துக்குமார், பா. சசிக்குமார், இ. நிதீபன், திருமதி உ. யோகானந்தா, தே. குகானந்தன் இவர்களும் எங்கள் அன்புக்கும் பராட்டுக்கும் உட்பிரதேசித்தவர்களே.

இப்பாலர் பகல் விடுதி இன்னும் பல வசதிகளைக் கொண்டதும் மற்ற பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகவும் இன்னும் வளர்ச்சி பெற்று மற்றவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதே என்னைப் போன்றவர்களின் பேரவா ஆகும் என்பது என்னைப் போன்றவர்களுக்கு நிச்சயம் விளங்கும். நீர்வேலி நலன்புரிச் சங்கத்தின் கனவும் அதுவே. எல்லோரதும் ஆதரவு இப் பாலர் பகல் விடுதியை மேன்மேலும் வளர்த்தெடுக்கும் என்பதில் சிறிதளவு கூட ஐயம் இல்லை. உறவுகளே! நன்றிகள்.

T.S.Subeskumar.
செ. சுபேஸ்குமார்

**Neervely Welfare Association – Canada**

நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா

**REGISTRATION NUMBER: 1352652**

# வாழ்த்துச் செய்தி

நீர்வேலி தெற்கு பாலர் பகல்விடுதி தனது அறுபதாவது ஆண்டு விழாவை கொண்டாடுவது கண்டு மிக்க மகிழ்வடைகின்றோம். அந்த நிகழ்வின் ஞாபகமாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நீர்வேலி நலன்புரிச்சங்கம் - கனடா அமைப்பு பெருமை யடைகிறது.

08.12.1955இல் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 08.07.1956இல் அரச அதிபராக பணியாற்றிய திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களால் திறந்துவைக்கப் பட்டது. தொழில் நிமித்தம் செல்லும்போது பிள்ளைகளை பராமரிப்பதில் பெற்றோர்படும் இன்னல்களைக் கண்டு திரு. இ. க. சண்முகநாதன் அவர்களின் மனதில் தோன்றிய கருவூலமே இந்த பாலர் பகல் விடுதியின் தோற்றமாகும். நீர்வேலியுடன் மட்டுமல்லாது இதன் அயற்கிராம பெற்றோர்களும் இதன் மூலம் பயனடைந்து வருவது பெருமகிழ்ச்சியாகும்.

இதன் ஆரம்பகால தலைவராக அமரர் இ.க. சண்முகநாதன் அவர்களும் அதனைத் தொடர்ந்து இதன் பணிகளில் மிகுந்த அக்கறையுடன் அமரர் வே. சி. அப்புத்துரை அவர்களும் செயற்பட்டார்கள். நாட்டின் அசாதாரண நிலைமைகளால் 1995ல் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டு நிலையம் பாவிக்கமுடியாத சூழலில் இருந்தது. திரு. ஐ. சிவராஜா அவர்கள் தலைவராக பொறுப்பை ஏற்று UNHCRஅமைப்பின் உதவியுடன் கட்டடம் புனர்நிர்மானம் செய்யப்பட்டு மீண்டும் இயங்கத் தொடங்கியது. தற்சமயம் திரு. செ. பத்மநாதன் அவர்களின் தலைமையில் சிறப்பாக இயங்குகின்றது.

நீர்வேலி கிராமத்திற்கு நற்பெயர் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்த நிலையம் மேலும் வளர்ந்து சேவையாற்ற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். எம்மால் இயன்றபணிகளை நீர்வேலிக்கிளையூடாக செய்கின்றோம் என்று தெரிவிக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| **சிறீநாதன்**<br>**தலைவர்** | **ஜெகன்**<br>**செயலாளர்** | **பிரபாகரன்**<br>**பொருளாளர்** |

# Diamond Jubilee Celebration of Palar Nilayam Message from Founder's Family

On this auspicious occasion of celebrating $60^{th}$ anniversary of the foundation of our PALAR NILAYAM ( Neervely crèche), We, on behalf of our father late E. K. Shanmuganathan, who founded this institution in 1956 with the support of Social services & Housing minster late Sir Kandiah Vithianathan and Government Agent Northern Province, late Mr Srikantha extend our greetings and best wishes to the committee and the community of Neervely crèche .

Crèche was established 60 years ago to accommodate children and organised with the support of staff to provide various educational activities including looking after children and ensure their safety and well-being while parents are at work. This set up is very similar to the current day care centres run by private and government bodies in the Western world. We are very proud that our late father together with Neervely community established a care facility for the children of Neervely and surrounding villages in 1956 and strongly believe it will continue to provide care and education to the next generation of our children.

Once again, we wish to take this opportunity to express our deep appreciation to the past and current committee for running the crèche successfully over the years and the years ahead.

Mrs. Selvaranee Shanmugananthan
Mr. Shanmukendran & Family
Mr. Selvendran & Family
Mr. Sivendran & Family

# தலைவரின் உள்ளத்திலிருந்து.....



எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆரோக்கியமான சமுதாய உருவாக்கத்திற்காகவும் நாட்டின் அபிவிருத்தியில் பெற்றோரின் ஈடுபாட்டினை அதிகரிப்பதற்காகவும் பிள்ளைகளின் பாதுகாப்பினை பெற்றோர் தொழிலுக்கு செல்லும் வேளைகளில் உறுதிப்படுத்து வதற்காகவும் கோப்பாய் பிரதேசத்தின் மத்தியில் அமைந்துள்ள நீர்வேலிக் கிராமத்தில் அமைதியான சூழலில் 1956ஆம் ஆண்டு நீர்வேலியில் வாழ்ந்த புத்திஜீவிகள் அமரர் இ. க. சண்முகநாதன் தலைமையில் சமுதாய முன்னேற்றக் கழகத்தினை உருவாக்கி அக்கழகத்தினால் 1956ஆம் ஆண்டு கோப்பாய் பிரதேசத்தில் வசிக்கும் வேலைக்குச் செல்லும் பெற்றோரின் பிள்ளைகளை பராமரிக்க பாலர் பகல்விடுதி ஸ்தாபிக்கப்பட்டது.

இப்பாலர் பகல் விடுதியின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அமரர் இ. க. சண்முகநாதன் மற்றும் அமரர்கள் வே.சி அப்புத்துரை, க. இராசதுரை, சு. இராஜேந்திரக்குருக்கள், சு. இரத்தினசபாபதிஐயர், ச. முத்துவேலு போன்றோரின் செயற்பாடுகள் மிகவும் உன்னதமானதும் போற்றுதலுக் குரியதும் ஆகும். தலைவர் தன் உள்ளத்தில் உதித்த சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்க தனது தனிப்பட்ட உயர்மட்ட தொடர்புகளை பயன்படுத்தி ஊர்மக்களின் அயராத பங்களிப்பினைப் பெற்று ஸ்தாபித்த நீர்வேலி பாலர் பகல்விடுதி வடமாகாணத்தின் முன்னோடி பாலர் பகல் பராமரிப்பு நிலையம் என்பதுடன் அப்போதே இலங்கையில் சகல வசதிகள், வளங்களுடன் சிறப்பாக இயங்கிய பாலர் பகல்விடுதி என்பது எமக்கு பெருமையளிக்கின்றது.

இத்தகைய பாலர் பராமரிப்பு நிலையத்தில் முதல் மாணவர் தொகுதியில் நானும் ஒருவன் எனும் போது எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சியைத்தருகின்றது. அப்போது மேற்பார்வையாளராக கடமை

புரிந்தவரை நாம் பெரியம்மா என அழைப்போம். எம்மை பாலர் பகல் விடுதிக்குள் காலை எமது பெற்றோர் அழைத்து வந்து விட்டுச் சென்றதும் அனேகமானோர் வீரிட்டுக் கத்துவார்கள். அவர்களை பெரியம்மாவும் ஏனைய ஆசிரியர்களும் எமது அம்மாக்கள் போல அரவனைத்து கதை சொல்லி எம்மை ஆற்றுப்படுத்தி பாலர்பகல்விடுதி சூழலுக்கு இசைவாக்கி மகிழ்ச்சியாக இருக்க பாட்டுக்கள் பாடி, கதைகள் சொல்லி, விளையாட்டு உபகரணங்கள் தந்து எம்மை மகிழ்ச்சியாக வைத்திருப்பார்கள். வீட்டிலிருந்து குளிக்காமல் வரும் பாலர்களை குளியலறையில் குளிப்பாட்டி தலைசீவி, பொட்டிட்டு அழகுபடுத்தி சகலருக்கும் பாடசாலையிலுள்ள சீருடை (Pinafore) அணிவித்து எமக்கு காலை பாலுடன் சத்துணவும் தருவார்கள். அனேகமான பாலகர்களுக்கு ஊட்டியும் விடுவார்கள். பின்னர் எம்மை எல்லாம் விளையாட்டு அறைக்கு அழைத்துச் சென்று பாட்டுக்கள், கதைகள் எல்லாம் சொல்லித் தருவார்கள். வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தி இசையுடன் பாடல் பாடுவார்கள். விளையாட்டு முற்றதிற்கு அழைத்தச் சென்று ஊஞ்சல், சீசோ, சறுக்கீஸ், ராட்டணம் என்பவற்றில் விளையாட விடுவார்கள். பின்னர் அழைத்துச் சென்று கதைகள் கூறி ஓய்வு பெறவைத்து சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்று மதிய உணவு வழங்குவார்கள். பின்னர் படுக்கை மண்டபத்தில் கட்டில்களில் உறங்க வைப்பார்கள். இரண்டு வயதுக்கு உட்பட்ட பாலகர்களை தொட்டில்களில் உறங்க வைப்பார்கள். உறக்கம் கலைத்து எம்மை எழுப்பி முகம் கழுவி, சீருடை களைந்து எமது உடையை அணிவித்து தலைசீவி, பவுடர் பூசி மாலைச் சிற்றுண்டியும் தேநீரும் தருவார்கள். அதன் பின்னர் பெற்றோர்கள் வந்து எம்மை வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். இந்த பசுமையான இனிய நினைவுகள் இன்னும் எனது மனக்கண்முன் தோன்றுகிறது, ஆனந்தத்தைத் தருகின்றது.

அறுபது ஆண்டுகள் கழிந்த நிலையில் இன்றும் பாலர் பகல்விடுதியில் பராமரிக்கப்படும் பிள்ளைகள் அதே நிலையில் காலை, மதியம், மாலை ஆகிய வேளைகளில் நல்ல போசாக்கான உணவுகள், சிற்றுண்டிகள் வழங்கி ஆரோக்கியமானவர்களாகவும், மகிழ்ச்சிகரமாக விளையாடுவதற்குரிய வசதிகள் வழங்கி, தூக்கத்துக்குரிய நேரம் ஒதுக்கி, அவர்களை சிறந்த பழக்க வழக்கங்களுடைய, பண்பாட்டு விழுமியங்களை பேணி, சகபாடிகளுடன் நல்லதோழமை பேணுகின்ற, ஆளுமையுடையவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள்.

எழுபதுகளின் முற்பகுதியில் இலங்கையில் முன்பள்ளிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போது பாலர் பகல்விடுதியில் பராமரிக்கப்படும் பிள்ளைகளுக்காக இங்கும் முன்பள்ளிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. இன்று பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடன் இச் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. இதை விட 3 வயது பிள்ளைகளுக்காக விளையாட்டுப் பாடசாலை செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு சிறந்த விளையாட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. பிள்ளைகள் சுகந்திரமாகவும் பாதுகாப்பாகவும் ஓடித்திரிந்து விளையாடவும் செயற்படவும் போதியளவு இடவசதிகள் ஏற்ப்படுத்தப்பட்டுள்ளன.

3, 4, 5 வயது என மூன்று பிரிவு பாலகர்களுக்கும் தனிப்பட்ட விசாலமான மண்டபங்களில் அவர்களது கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவர்கள் மகிழ்வாக விளையாட சகல விளையாட்டு உபகரணங்களும் பொருத்தப்பட்ட விசாலமான விளையாட்டு முற்றமும் உண்டு. இதில் அவர்கள் மகிழ்ச்சிகரமாக விளையாடுவது பார்ப்போருக்கு பரவசத்தை ஏற்ப்படுத்தும்.

ஆரம்ப பிள்ளைப்பருவம் மனிதனது வாழ்வில் முக்கியமான பருவமாக காணப்படுவதால் இப்பருவத்தில் பெறப்படும் அனுபவங்களும், ஆற்றல்களும். ஆளுமை பண்புகளும் அவனை எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியனவாக ஆக்குகிறது. அதற்கு ஏற்றால் போல் நீர்வேலி பாலர்பகல் விடுதியும் முன்பள்ளியும் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தி விளையாட்டினூடாக கற்றல் செயற்பாடுகளை மேற் கொள்வதுடன் மாலை வேளையில் ஆங்கில பேச்சுக்கலை வகுப்பு, கணினிக்கல்வி (சித்திரம்வரைதல், வர்ணம் தீட்டல், கணினி விளையாட்டுக்கள்) என பலவகையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இங்கு கற்கும் பிள்ளைகள் அடிப்படைத் திறன்கள் யாவற்றையும் பெற்று பாடசாலைக்கு விருப்புடன் செல்லும் நிலை ஏற்ப்படுத்தப்படுகின்றது.

இப்பாலர் பகல் விடுதி முன்பள்ளியில் கற்கும் பிள்ளைகளுக்கு பராமரிப்புக் கட்டணமாக குறைந்தளவு தொகையே பெறப்படுவதுடன் முன்பள்ளிச் செயற்பாடுகள் இலவசமாகவே வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு கற்கும் பிள்ளைகளின் ஆற்றல்களை விருத்தி செய்யவும் எமது கலை, கலாச்சார பண்பாட்டு அம்சங்களையும் அறிந்து விழுமியங்களைப் பேணவும், தலைமத்துவப் பண்புகளை பெறவும் ஆளுமையை விருத்தி செய்வதற்காகவும் இங்கு வருடா வருடம் பிள்ளைகளது ஆக்கத்திறன் கண்காட்சி, விளையாட்டு விழா, நவராத்திரி விழா, கலைவிழா, சுற்றுலா என்பன மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் பெறப்படாமல் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான உன்னத சேவையை பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் வழங்குவதற்கு உறுதுணையாக நீர்வேலி நலன்புரிச்சங்கம் - இலண்டன் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. மற்றும் பிள்ளைகளின் உணவுச் செலவிற்கு நலன் விரும்பிகளதும், நீர்வேலி நலன்புரிச் சங்கம் - கனடாவினதும் உதவிகள் போற்றுதற்குரியது.

**செ. பத்மநாதன்,**
**தலைவர்,**
**பாலர் பகல் விடுதி,**
**நீர்வேலி.**

# செயலாளர் தம் உளம் கனிந்து



கல்வியோடு கலைகளும் விளையாட்டும் விரவி சிறப்போடு விளங்குவது நீர்வேலிப்பதி. இப்பதியின் எதிர்காலவிருட்சங்கள் சிறுவர்கள். இந்த சிறுவர்களின் பராமரிப்பில் கவனம் செலுத்தி அமைக்கப்பட்டுள்ளதே பாலர் பகல்விடுதி ஆகும். "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்று கூறுவார்கள். தெய்வீக அம்சம் பொருந்திய பாலகர்களுக்கு அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை அளிக்கும் முகமாக எங்கள் பாலர் பகல் விடுதி செயற்படுகின்றது.

பாலகர்கள் சுகந்திரமாகவும் சிந்தனையைத் தூண்டும் விதமாகவும் சமூக இசைவாக்கத்தோடு வளர்க்கப்படுகின்றார்கள். இவர்களது அன்புத்தேவை, பாதுகாப்புத்தேவை நிறைவேற்றப்படுகின்றது. இன்றைய கால உலகப்போக்கை நாம் எதிர்கொள்ளும்போது சிறுவர்கள் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் வளர்க்கவேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதனைக் கவனத்தில் கொண்டே சிறார்கள் பள்ளிப்படிப்பைத் தொடங்கும் வரையில் எங்கள் பாலர் பகல் விடுதியால் அரவணைக்கப்படுகின்றனர்.

நீர்வேலி சமூகத்தின் ஒற்றுமையால் அமரர் இ. க. சண்முகநாதன் மற்றும் பெரியார்களினால் இந்த கைங்கரியம் நிகழ்ந்துள்ளது. இந்த ஆண்டு இந்த பாலர் பகல் விடுதி வைரவிழாக் காண்கின்றது. லண்டன் நீர்வேலி நலன்புரிச் சங்கத்தினரின் முயற்சியாலும் புலம்பெயர் தேசங்களில் வசிக்கும் நீர்வேலி உறவுகளினதும் ஒத்துழைப்பாலும் இது நூற்றாண்டு விழாவும் கண்டு வீறுநடை போடும் என்பதில் சந்தேகம் இல்லை. வைரவிழாக் காணும் வேளை நானும் பாலர் பகல்விடுதிச் செயலாளராக இருப்பதை எண்ணி மனம் மகிழ்கின்றேன்.



**திரு. வே. குணசீலன்,**
**செயலாளர்.**
**பாலர் பகல்விடுதி,**
**நீர்வேலி.**

# பொருளாளரின் பார்வையில்



இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் இப்பிரதேச மக்களின் குழந்தைகள் சிறுவயதிலிருந்தே நல்ல போசாக்கான, பண்பாடான, அறிவுள்ள குழந்தைகளாக ஊருக்கு நற்பிரைஜைகளாக உருவாக்கபட வேண்டுமென்ற சிந்தனையில் அப்போதைய பெரியோர்களால், கல்விமான்களால் தூரநோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட ஓர் நிறுவனந்தான் இப்பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியுமாகும்.

அப்போது நான் சிறுவனாக இருந்தவேளை இப்பிரதேசத்திலுள்ள பெரியோர்களும் இளைஞர்களும் அரசாங்கம் கொடுத்த ஒருதொகைப் பணத்துடன் இரவுபகலாக பலர் எவ்வித ஊதியமும் பெறாமல் சிரமதானம் மூலம் வேலைகளைச் செய்ததை நான் நன்கறிவேன்.அக்காலத்திலேயே இப்படியானதொரு பெரிய கட்டடத்தை கட்டியமையினால் இன்று ஆலமரம் போல செழித்து வளர்ந்து இப்பிரதேசக் குழந்தைகளுக்கு அல்லாது அயற்பிரதேசக் குழந்தைகளுக்கும் நிழல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்றால் நாம் நம் முன்னோர்களிற்கு நன்றி உடையவர்களாவோம்.

ஆரம்பத்தில் எமது பிரதேசத்தில் உள்ள குழந்தைகளை மட்டும் பராமரிப்பதற்காக இப்பாலர் பகல் விடுதி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று அயற் கிராமங்களிலிருந்தும் பல குழந்தைகள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த நிறுவனத்தின் நிர்வாகத்தில் பொருளாளராக இருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆரம்பத்தில் பாலர் பகல்விடுதியாக ஆரம்பிக்கப்பட்டு அறிவு மாற்றதிற்கு ஏற்ப இன்று பல மாற்றங்களுடன் இயங்கி வருகின்றது. எடுத்துக் காட்டாக முன்பள்ளி, ஆங்கிலக் கல்வி, கணினிக்கல்வி என்பன இங்கு போதிக்கப்படுகின்றது என்றால் மிகையாகாது.

இன்று இந்த நிலையம் தற்போதைய குழந்தைகளுக்கான விளையாடுவோம் கற்போம் என்ற கோட்பாடுகளுக்கு அமைய வடிவமைக்கப்பட்டு வருகின்றது என்பது கண்கூடு. இங்கு

குழந்தைகளுக்கான பசுமையான சூழல் அதாவது விளையாட்டு முற்றம், வர்ணப்படங்கள் வரையப்பட்ட சுவர், பூந்தோட்டம் என்பன காணப் படுகின்றன. "குழந்தையும் தெய்வமும் ஒன்று" என்பதற்கு இணங்க குழந்தைகளின் கட்டுப்பாடற்ற சுதந்திரமான நடமாட்டம், பண்பான பயிற்றப்பட்ட ஆசிரியர் குழாம் என்பன இந்நிலைய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக உள்ளது.

எம்பிரதேசத்தில் அவ்வப்போது ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலைகளால் உருக்குலைந்து உடமைகள் அழிந்து சேதமுற்ற வேளைகளில் சோர்வின்றி இந்த விடுதி தொடர்ந்து இயங்குவதற்கு தாங்கும் கரங்களாக இருந்து கைகொடுத்த, தொடர்ந்தும் கைகொடுக்கின்ற சகல தரப்பினரும் இந்த நேரத்தில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தேசிய ஓடையில் தெளிவான சிந்தையுடன் சீரிய உள்ளங்களை இந்த பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் தோற்றுவிக்க வேண்டுமென எல்லாம்வல்ல முருகப்பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**பொ. சரவணபவானந்தன்,**
**பொருளாளர்.**
**பாலர் பகல்விடுதி,**
**நீர்வேலி.**

அப்போதைய அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களினால்
பாலர் பகல்விடுதி திறந்து வைக்கப்பட்டபோது



திறப்புவிழா அன்று ஐரோப்பிய சமூகத்தினருடன் இராப்போசன விருந்து



# பாலர் பகல்விடுதியின் ஆரம்பம் முதல் இன்றுவரையான தலைவர்கள்



திரு. இ. க. சண்முகநாதன்



திரு. க. ச. முத்துவேலு



திரு. செ. பத்மநாதன்
(தற்போதைய தலைவர்)



திரு. வே. சி. அப்புத்துரை



திரு. ஐ. சிவராஜா

# பாலர் பகல் விடுதியின் ஸ்தாபிதத்திலும் வளர்ச்சியிலும் சேவையாற்றியோர்



திரு. இ. க. சண்முகநாதன்



திரு. வே. சி. அப்புத்துரை



திரு. க. இராசதுரை



சிவஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்கள்



பிரம்மஸ்ரீ சு. கனகசபாபதி ஐயர்

# பாலர் பகல் விடுதியின் ஆரம்பம் முதல் இன்றுவரையான மேற்பார்வையாளர்கள்


திருமதி R. N. முத்துவேலு


திருமதி A. தோமஸ்


திருமதி V. அரியரத்தினம்


திருமதி அ. தம்பையா


திருமதி மே. குணரத்தினம்


திருமதி சி. புவனேஸ்வரன்


செல்வி இ. கமலேஸ்வரி


செல்வி தி. வல்லிபுரம்


திருமதி இ. துரைராஜா


திருமதி வி. நாவேந்தன்
(தற்போது பணிபுரிபவர்)

# 3வயது பிரிவுப்பாலர்கள்



# 4வயது பிரிவுப்பாலர்கள்



# 5வயது பிரிவுப்பாலர்கள்



## 3 வயதினர் வகுப்பு



## 4 வயதினர் வகுப்பு



## 5 வயதினர் வகுப்பு



## கணினி வகுப்பு



## ஆங்கில பேச்சுக்கலை வகுப்பு



# பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்
# சமுதாய முன்னேற்றக் கழகம்
# நீர்வேலி
# அன்றுமுதல் இன்றுவரை ஒரு பார்வை...

நீர்வேலி மக்களின் முன்னேற்றம் கருதி 1942ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம் நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலின் தெற்கு வீதியில் அமைக்கப்பட்டது. இந் நிலையத்திற்கு ஓர்கட்டிடம் அவசியம் என கருதப்பட்டபோது அக்கட்டடம் அமைப்பதற்கான ஆதனத்தை காலஞ்சென்றவர்களான திரு. க. தர்மலிங்கமும் அவரின் சகோதரர் திரு. க. தில்லைநாதனும் இவ் நிலையம் அமைக்கவும் பண்டகசாலை கட்டடம் அமைக்கவும் நன்கொடையாக வழங்கியிருந்தனர்.

பண்டகசாலை இலாபத்தாலும் பொதுமக்களால் அளிக்கப்பட்ட நன்கொடையாலும் இந்நிலையத்தின் கட்டடம் அமைக்கப்பட்டு அழகாக காட்சி அளிப்பதை நீங்கள் காணலாம். மேற்குப்பக்க அறைகள் பண்டகசாலை (தற்போது கூட்டுறவுச் சங்கம்) பாவிப்புக்காகவும் ஏனைய பகுதிகள் நூல் நிலையமும் வாசிகசாலையாகவும் மாதர் சிசுபராமரிப்பு நிலையமாகவும் இயங்கி வருகின்றது.

1955ஆம் ஆண்டு நடைபெற்ற நிலையத்தின் பொதுக்கூட்டத்தில் சமுதாய முன்னேற்றக்கழகம் அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. இக் கழகத்திற்கான யாப்பும் தயாரிக்கப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்டு அன்று தொடக்கம் சமுதாய முன்னேற்றக்கழகம் செயற்பட்டு வருகின்றது. சமூக சேவைதிணைக்களத்தால் இவ்யாப்பு அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரகாரம் இன்று இக்கழகம் இயங்கி வருகின்றது.

இக்கழகத்தின் கீழ் ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம் ஒரு அங்கமாக இயங்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் வேலைக்கு செல்லும் பெற்றோரினதும், வறிய பெற்றோரினதும் 6வயதிற்குட்பட்ட பிள்ளைகளை பராமரிப்பதற்கு ஒரு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு இக்கருத்து

அறிவிக்கப்பட்டது. 1955ல் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வீடமைப்பு. சமூகசேவைகள், கைத்தொழில் அமைச்சராகவும், திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் வடமாகாண அரசாங்க அதிபராகவும் கடமையாற்றிய போது அவர்கள் இருவரினதும் கருணையால் பாலர் பகல் விடுதி அமைப்பதற்கு ரூபா 40,000 நன்கொடையாக வழங்கப்பட்டது.

பண்டகசாலைக்கு மேற்குப் பக்கமாக நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலுக்குரிய ஆதனம் பாலர்பகல்விடுதி கட்டடம் அமைப்பதற்காக சமுதாய முன்னேற்றக்கழகத்தால் 99வருடத்துக்கு வருடகுத்தகைக்கு கழகத்தின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்டது. 08.12.1955ல் கௌரவ அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் பாலர் பகல் விடுதிக்கான அத்திவாரம் இடப்பட்டது. அரசாங்க நன்கொடையுடன் ஊர்மக்களின் சிரமதான முயற்சியால் ரூபா 20,000க்கு மேற்பட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பாலர்பகல்விடுதி கட்டடம் 08.07.1956ல் அப்போதைய அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்துக்குரிய தளபாடங்கள், பிள்ளைகளின் விளையாட்டுக்குரிய சாதனங்கள் எல்லாம் பெறப்பட்டன. பாலர் பகல்விடுதி இயங்கும் கட்டிடத்திற்கு தெற்குப் பக்கமாக 22.07.1956ல் 609ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய குத்தகை உறுதியின் மூலம் பெறப்பட்ட ஆதனத்தில் பிள்ளைகளின் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. இவ் 2 1/2 பரப்பு ஆதனத்தை 16.11.1960ல் 2882ல் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் சமுதாய முன்னேற்றக்கழகம் கொள்வனவு செய்தது. இவ்வாதனத்திலேயே தற்போதும் பிள்ளைகளின் விளையாட்டு முற்றம் காணப்படுகின்றது. இவற்றுக்காக பெரும் தொகை பணம் செலவாகியது.

வடமாகாணத்தில் இவ்வாறான நிலையம் ஒன்றுதான் புதிதாக உருவாக்கப்பட்டதால் வெளிநாட்டிலிருந்து வரும் ஸ்தாபனங்களும் பிரமுகர் களும் மற்றும் வெளியிடங்களிலிருந்து வரும் ஸ்தாபனங்களும் பார்வையா ளர்களும் இந்த முயற்சிகளை பாராட்டத்தவறவில்லை. இப் பாராட்டுக்களை இம்மலரில் இன்னோரிடத்தில் பார்க்கலாம். இவ்வாறு பார்வையிட வந்த வெளிநாட்டு ஸ்தாபனங்கள் பாலர் பகல்விடுதியின் தேவைகளில் சிலவற்றை பூர்த்தி செய்தன.

பாலர் பகல்விடுதியின் தேவைக்கும் வசதிக்காகவும் தண்ணீர் தாங்கியும் அதில் நீரை ஏற்றுவதற்கு மோட்டரும் பொருத்தப்பட்டது. இது மத்திரமல்லாமல் மின்சார வசதியும் ஏற்படுத்தப்பட்டது. தற்போது சகல அறைகளுக்கும், மண்டபங்களுக்கும் மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

சமுதாய முன்னேற்றகழகத்திற்கான வங்கி சேமிப்பு வைப்புக் கணக்கு 1956ஆம் ஆண்டு இலங்கை வணிக வங்கி (வர்த்தக வங்கி) யில் ஆரம்பிக்கப்பட்டது. சமுதாய முன்னேற்ற கழகத்துக்கு வருமானத்தை பெறும் நோக்கில் 1970வரை கோப்பாய், தெல்லிப்பளை, பருத்தித்துறை ஆகிய சுகாதார பிரிவுகளிலுள்ள பாலூட்டும் நிலையங்களுக்கான பால் விநியோகிக்கும் பொறுப்பினை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் ஒப்பந்தம் செய்து பெற்று மேற்கொண்டு வந்தது. இதன் மூலம் சமுதாய முன்னேற்றக் கழகம் இலாபமடைந்ததுடன் 15க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கியது. இதனைவிட மேலும் பல வருவாய் ஈட்டும் முயற்சிகளில் சமுதாய முன்னேற்றக்கழகம் ஈடுபட்டு வந்தது.

இதைவிட பாலர் பகல்விடுதிக்கு முன்னால் அமைந்துள்ள கோயில் வீதியை அன்று அரசாங்க நன்கொடை ரூபா 6000 ஐ பெற்று சிரமதானப்பணி மூலம் தார்வீதியாக அமைக்கப்பட்டது. இதனால் தேரோடும் வீதியும் சிறப்பாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

1970இல் முன்பள்ளிச் செயற்பாட்டிற்காக பாலர்பகல் விடுதியுடன் இணைத்து முன்பள்ளிக் கூடம் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலம் இப்பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கப் பட்டுவருகின்றது.

சமுதாய முன்னேற்றக்கழகத்தினால் நடத்தப்படும் பாலர் பகல் விடுதியின் வளர்ச்சி கருதி இவ்வூர் பிரமுகர் காலஞ்சென்ற திரு வன்னித்தம்பி செல்லத்துரை (சோதிடர்) அவர்கள் இவ்வூரில் பருத்தித்துறை வீதிக்கு கிழக்காக 15பரப்பளவு காணியை 26.09.1960இல் 2813ஆம் இலக்க தருமசாசன உறுதியை நிறைவேற்றி வழங்கியதுடன், குறித்த ஆதனத்தை

செவ்வனே பராமரித்து அதில் பெறப்படும் வருமானத்தை எடுத்து பாலர்பகல்விடுதி சிறார்களின் முன்னேற்றத்துக்காக செலவு செய்ய வேண்டும் என்றும் குறித்த ஆதனங்களை எவ்வகையாலும் பாதிக்க அல்லது பாராதீனப்படுத்தக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

09.07.1977ஆம் திகதி நடைபெற்ற ஆண்டு விழாவின் போது பாலர் பகல்விடுதியின் முதலாவது மலரான 21ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பாலர் பகல் விடுதிக்கு காலஞ்சென்ற சிவநெறிப்புலவர், சிவதரும வள்ளல், சிவதருமபூபதி திரு. க. கனகராசா ஜே.பி தம்பதிகளும் காலஞ்சென்ற இவ்வூர் திரு. கதிர்காமர் பூதத்தம்பி அவர்களும் தாராளமாக உதவியுள்ளார்கள்.

1987ல் பாலர் பகல்விடுதியின் பின்புற மதில்களும் கட்டப்பட்டு 5 1/4 பரப்பு விஸ்தீரணமான பாலர் பகல்விடுதி வளாகம் சுற்றிவர மதில்களால் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு ஏற்ப்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாலர் பகல்விடுதி கட்டடமும் பொருட்களும் தேசமடைந்தது. இவற்றை 1997களில் UNHCR, Save the Children போன்ற அமைப்புக்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்கத் தொடங்கியது.

தற்போது காலை 7.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இப்பாலர் பகல்விடுதி இயங்குகின்றது. இவ் விடுதியில் 80 மாணவர்கள் பராமரிக்கப் பட்டு கல்வி போதிக்கப்படுவதுடன் மேற்பார்வையாளர், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், சமையலாளர், தொழிலாளியென ஒன்பது பேர் கடமையாற்று கின்றனர். இச்சிறார்களுக்கு பராமரிப்புக் கட்டணமாக சிறியதொகையே அறவிடப்படுவதுடன் முன்பள்ளி கல்விச் செயற்பாடு இலவசமாக வழங்கப் படுவது குறிப்பிடத்தக்கது. இங்கு பயிலும் மாணவர்களின் திறன் விருத்திக் காகவும் ஆளுமை வளர்ச்சிக்காகவும் வருடம் தோறும் பாலகர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி, விளையாட்டுவிழா. கலைவிழா, சுற்றுலா என்பன சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. இவற்றுக்காக எவ்வித பணமும் பாலகர்களிடமிருந்து அறவிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வருடந்தோறும் இலவசமாக

வழங்கப்படுகின்றன. இங்கு பராமரிக்கும் பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் பண்பாட்டு விழுமியங்களை அறிந்து பேணுமுகமாகவும் பாலர்பகல் விடுதியில் தைப்பொங்கல்விழா, புதுவருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு கூழ்காய்ச்சுதல், நவராத்திரிவிழா, ஆசிரியர்தினவிழா, பாடசாலைக்கு செல்லும் மாணவர்களிற்கான பிரிவுபசார விழா என்பன நடத்தப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.

இவ்வாறு இலாபநோக்கமற்ற நிறுவனமாகவும் சமுதாய வளர்ச்சியை நோக்காகக் கொண்டு கோப்பாய் பிரதேச பிள்ளைகள் பயன்பெறும் வகையில் இயங்கும் இவ் பாலர் பகல்விடுதிக்கு இலண்டன். நீர்வேலி நலன்புரிச் சங்க அங்கத்தவர்களது ஆலோசனைகளும். நிதி உதவிகளும் மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது. மேலும் பிள்ளைகளின் உணவுச் செலவிற்காக கனடா நீர்வேலி நலன்புரிச் சங்க அங்கத்தவர்களதும் மற்றும் நலன் விரும்பிகளதும் நிதி உதவிகள் எமது செயற்பாட்டை சிறப்பாக செய்ய உதவுகின்றது. மேலும் ஊர் மக்களினதும், புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் மக்களினதும் பிறந்தநாள் நிகழ்வுகள், திருமணநாள் நிகழ்வுகள், இறந்த உறவுகளின் நினைவுநாள் நிகழ்வுகளின் போது பாலர் பகல்விடுதி பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதற்காக வழங்கப்படும் பணமும் பிள்ளைகளின் சத்துள்ள தரமான உணவுகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு நிதி உதவி வழங்கி பங்களிப்புச் செய்து எம்மை ஊக்குவிக்கின்ற அன்புள்ளங்களை நன்றியுடன் போற்றுகின்றோம்.

பாலர் பகல்விடுதி பிள்ளைகள் அடிப்படை கணினி அறிவை பெற்றுக்கொள்ளும் முகமாக 2013ஆம் ஆண்டு முதல் கணினிக்கூடம் அமைக்கப்பட்டு நான்கு கணினிகள் மூலம் கணினிக்கல்வி வழங்கப் படுகின்றது. மேலும் இப்பிள்ளைகளின் அடிப்படை ஆங்கில பேச்சுத் திறனை வளர்ப்பதற்காக 2014ஆம் ஆண்டுமுதல் ஆங்கிலப் பேச்சுக்கலை வகுப்பு (Elocution Class) நடத்தப்படுகின்றது. இவ்வாறு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புடன் சிறப்பாக இயங்கிவரும் நீர்வேலி பாலர் பகல்விடுதி மேலும் இங்கு கற்கும் பிள்ளைகளுக்கு புதிய செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி இன்னும் சிறந்த சேவைகளை வழங்க அறுபது ஆண்டுகள் பூர்த்தி செய்துள்ள பாலர் பகல்விடுதி எல்லோரிடமும் உதவிக்கரம் நீட்டுகின்றது.

இவ் பாலர் பகல் விடுதியில் பிள்ளைகள் பராமரிக்கப்படுவதுடன் அவர்களுக்கான முன்பள்ளிச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதனால் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினதும் கல்வித் திணைக்களத்

தினதும் அனுசரனையும் மேற்பார்வையும் உள்ளதால் இவ்வருடம் (2016) முதல் பாலர் பகல் விடுதியின் பெயரினை நீர்வேலி பாலர் பகல்விடுதியும் முன்பள்ளியும் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பாலர் பகல்விடுதியை தூரநோக்கோடு சமுதாய முன்னேற்றம் கருதி சிந்தித்து செயல்வடிவம் கொடுத்த காலஞ்சென்ற திரு. இ. க. சண்முகநாதன் அவர்களையும், அவருடன் இணைந்து செயற்பட்ட காலஞ் சென்றவர்களான திரு. வே. சி. அப்புத்துரை, திரு. க. இராசதுரை, பிரம்மஸ்ரீ சு. இராசேந்திரக் குருக்கள், சு. கனகசபாபதி ஐயர் ஆகியோர் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்களும் போற்றப்பட வேண்டியவர்களுமாவர்.

# பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்
# காணி வரைபடம்



# பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்
# கட்டட வரைபடம்



# பாலர் பகல் விடுதியின் கட்டிட உட்புறத் தோற்றங்கள்









# விளையாட்டு முற்றம்









## காலை உணவின் போது



## மதிய உணவின் போது





சமையல் கூடம்

பாலர்கள்
உணவு உண்பதற்கு
கை கழுவுதல்



பாலர்களின் உறங்கல் நேரத்தின் போது



# நிகழ்வுகளின் விருந்தினர்









# நிகழ்வுகளின் விருந்தினர்













# பாலர் பகல் பராமரிப்பு இல்லத்திற்கான கொள்கை வடமாகாணம்

திரு. தி. விஸ்வரூபன்,
ஆணையாளர்,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்,
வடமாகாணம்.

**01. கொள்கைகள்**

- தாபனம் - பெற்றோர் வேலைக்கும் போகும் சந்தர்ப்பத்தில் பிள்ளையின் பாதுகாப்பு, பராமரிப்பு விருத்தியைக் கவனத்தில் கொண்டு பாலர் பகல் பராமரிப்பு நிலையம் அமைக்கப்படுவது அவசியம்.

- நிர்வாகம் - நிர்ணயிக்கப்பட்ட அங்கத்தவர்களை கொண்ட நிர்வாக சபை
  1. வழமையான குழுவாக இருத்தல்
  2. மூன்று மாதத்திற்கு ஒருதடவை கூடுதல்
  3. வருடத்திற்கு ஒருமுறை புதிய நிர்வாக தெரிவு இடம்பெற வேண்டும்.

- தூரநோக்கு - ஆரம்ப பிள்ளை பருவத்தின் நலனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதன் ஊடாக நாட்டில் ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்குதல்.

- பணி நோக்கு -
  1. மேற்பார்வை
  2. உடல் உள பாதுகாப்பையும் பராமரிப்பையும் உறுதிப்படுத்தல்.

**02. தொழிற்பாடுகள்**

- பொருத்தமான இடத்தை தெரிவு செய்தல்
- பதிவு செய்தல்
- கண்காணித்தல்

- பொருத்தமான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல்
- மேற்பார்வை (ECDA/CRPA/PO)
- போசாக்கான உணவு
- உடல் உள ஆரோக்கியமான செயற்பாடுகள் நடைபெறுவதை உறுதிப்படுத்தல்
- 7.30 - 5.00 மணிவரை பராமரித்தல்
- பணியாளர் நியமனத்தில் பங்கேற்றல்

**03. பதிவு**

- பதிவு தொடர்பான நியமனம்
- மாகாண நன்னடத்தை திணைக்களத்தினால் பதிவு செய்தல் வேண்டும்.
- பகல் பராமரிப்பு நிலையத்தை ஆரம்பிக்கும் போது சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தில் அனுமதி பெறல்
- பதிவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்
    1. காணி உரிமை
    2. பிரதேச சபை/ நகரசபை அனுமதி
    3. பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கை
    4. சுற்றுச் சூழல் அதிகாரசபையின் அறிக்கை
    5. நிலையப் பொறுப்பு நன்னடத்தை, முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசு

**04. அனுமதி முறை**

- இருவரும் வேலைக்குச் செல்லும் பிள்ளைகள்
- பெற்றோர் இருவரையும் இழந்த பிள்ளைகள்
- பெற்றோர் ஒருவர் மட்டும் உள்ள குடும்பம்

**05. கட்டட அமைப்பு**

- கட்டட அமைப்புக்கேற்ப மாணவர் அனுமதி
- காற்றோட்ட வசதி
- முறையான வடிகாலமைப்பு
- ஒய்வு அறை (ஒரு பிள்ளைக்கு 10 சதுர அடி)
- செயற்பாட்டறை

- சமையலறையின் அமைவு
- பாதுகாப்பான மின்சார உபகரணங்கள்
- பாதுகாப்பான சுற்றுவேலி

**06. சுற்றுச்சூழல்**

- தவிர்க்கப்பட வேண்டியவை:
    1. நீர் நிலைகள்
    2. பிரதான வீதி
    3. மதுபானசாலை
    4. தொழிற்சாலை
    5. வன்முறையான இடம்
- இயற்கையான சூழல்:
    1. பூமரங்கள் அமைத்தல்
    2. வீட்டுத் தோட்டம்
    3. மேட்டு நிலமாக இருத்தல்

**07. பாதுகாப்பு**

- பாதுகாப்பான மின்சாரம்
- பாதுகாப்பான கிணறு
- பாதுகாப்பான வேலி
- மருத்தவ வசதி (போக்குவரத்து, முதலுதவி)

**08. பராமரிப்பு**

- பராமரிப்பாளர் ஒருவருடத்துக்கு ஒருதடவை மருத்தவ அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி சம்பந்தமான கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கிய 6 மாத சான்றிதழ் பயிற்சி, ஒருவருட டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்திருக்க வேண்டும்.
    1. பிள்ளைகளின் போசாக்கு மற்றும் சுகாதாரம்
    2. உளவிருத்தி சம்பந்தமான செயற்பாடுகள்
    3. விசேட தேவை மற்றும் மெல்லக் கற்போரை அடையாளம் காணல்

4. அழகியல் விருத்தி சம்பந்தமான அறிவு

5. முதலுதவி பற்றிய அறிவு

6. கற்றலுடன் கூடிய விளையாட்டு

- பராமரிப்பாளர் பெண்ணாக இருப்பது விரும்பத்தக்கது.
- பிள்ளைகளின் அனுமதிக்கான ஆகக் குறைந்த வயதெல்லை 6 மாதம்
- பராமரிப்பாளர் நியமனம்

1. 6மாதம் - 3 வயதுவரை 3 பிள்ளைகளுக்கு ஒருவர்

2. 3வயது - 5 வயது வரை 10 பிள்ளைகளுக்கு ஒருவர்

- திறன் விருத்தி, மேற்பார்வை தொடர்பான பயிற்சிகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் வழங்குதல்
- மேற்பார்வை கண்காணித்தல்

**09. கற்றல் மற்றும் விளையாட்டு தொடர்பான செயற்பாடுகள்**

- பிள்ளைகளின் மனவெழுச்சி, அறிகை மற்றும் இயக்கப்பாடுகளை தூண்டக் கூடிய கற்றல் மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகள்.
- ஆக்கத்திறன் விருத்தியை தூண்டக்கூடிய கற்றல் விளையாட்டுச் செயற்பாடுகள்
- அழகியலுக்கூடான கற்றல் விளையாட்டுச் செயற்பாடுகள் (ஆடல், பாடல், சித்திரம்)
- தேக அப்பியாசத்திற்குரிய விளையாட்டு உபகரணங்கள் (கயிற்று ஏணி)
- ஒழுக்க விழுமியங்களை உள்ளடக்கிய ஆன்மீக செயற்பாடுகள்
- புலன் விருத்தியை தூண்டக்கூடிய விளையாட்டு உபகரணங்கள்
- பொருத்தமான உள்ளக மற்றும் வெளியக விளையாட்டு உபகரணங்கள்
- பிரச்சினையை தீர்ப்பதற்கான அறிவினை தூண்டும் விளையாட்டு

**10. உணவு**

- உணவு தயாரிப்பது பராமரிப்பு நிலையத்தினரின் விருப்பம்
- உணவுப்பட்டியல்
- போசாக்கான உணவு
- வயதினருக்கேற்ற உணவு இடைவேளை

**11. சுகாதாரம்**

- பிள்ளைகள் மலம் கழிப்பதற்கான பயிற்சிகள் (Pampers)
- பணியாளர்களின் சுகாதாரம்
- டெங்கு மற்றும் தொற்று நோய்கள் தொடர்பான அறிவு
- PHI/PHM தொடர் கண்காணிப்பு
- ஆடைகள் விடயத்தில் கவனம் எடுத்தல்
- பிள்ளைகளை மாதத்திற்கு ஒருதரம் வெளியில் சுற்றுலாவிற்கு கொண்டு செல்லல்
- சுகாதார விடயங்களை கையேடுகளில் தொடர் பதிவு செய்தல்.



# சமுதாய வளர்ச்சியில் பாலர் பகல் விடுதியின் பங்களிப்பு

திருமதி. ஞா. தெய்வேந்திரராசா
இளைப்பாறிய ஆசிரியை.

உலகளாவிய ரீதியில் இன்று பெரும்பாலான நாடுகளில் பாலர் பகல் விடுதிகள் மிகவும் இன்றியமையாத நிறுவனங்களாக அமைந்துள்ளன. தாயின் அரவணைப்பில் இருந்த குழந்தைகளை அதே அரவணைப்புடன் பராமரிக்கும் நிறுவனங்களாக பாலர் பகல் விடுதிகள் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது. பிள்ளைகளை அவர்களது ஐந்து வயது வரை அவர்களின் உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி ஆகியவற்றினை கருத்திற் கொண்டு நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்க அத்திவாரம் இடும் முறைசார் நிறுவனங்களாக பாலர் பகல் விடுதிகள் காணப்படுவதனை இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவுகள் பறைசாற்றி நிற்கின்றன.

இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக பெற்றோர்கள் தொழிலுக்குச் செல்லவேண்டிய அவசியம் காலத்தின் தேவையாக உள்ளது. அவர்களது குடும்பநிலை ஆரோக்கியமானதாக இருக்க தொழில் வாய்ப்பு மிகவும் இன்றியமையாதது. கணவன், மனைவி இருவரும் தொழிலுக்குச் செல்லும் பொழுது தமது குழந்தைகளை பராமரிக்க அவர்களது ஏனைய குடும்ப உறுப்பினர்களைவிட ஒத்த வயதுடைய பாலகர்கள் ஒன்றுசேரும் நிலையங்களான பாலர் பகல் விடுதிகளை இன்றைய பகுத்தறிவுடைய பெற்றோர் நாடுகின்றனர். இவ்வாறான உதவிக்கரங்களை நீட்டும் இந்நிறுவனங்கள் இன்றேல் குறிப்பாக பெண்கள் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும். எனவே தமது பிள்ளைகளை பராமரிக்கும் சிறந்த இடமாக பாலர் பகல்விடுதிகளை பெற்றோர் நாடுகின்றனர். இதன் அடிப்படையில் இன்று பாலர் பகல் விடுதிகள் சமுதாய வளர்ச்சியில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன.

ஒத்தவயதுடைய பாலகர்கள் ஒன்று சேரும் பொழுது கூட்டாக விளையாடல், ஆடல், பாடல், கதைகூறுதல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளில் மிகவும் உற்சாகத்துடனும் மகிழ்சியுடனும் ஈடுபடுகின்றனர். இவ்வாறான மகிழ்ச்சிகரமான கற்றல் கற்ப்பித்தல் செயற்பாடுகளினால் உள வளர்ச்சி பெறுபவர்களாகின்றனர். இக் கட்டத்தில் அவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களும் வெளிக்கொணரப்படுகின்றது. இவற்றை கண்டறிந்து

வழிநடாத்தும் திறன் பெற்றவர்களாக இன்றைய பாலர் பகல் விடுதி ஆசிரியர்கள் முறைசார் நிறுவனங்களால் பயிற்றப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். இவற்றை எல்லாம் கண்காணிக்கும் திறன் தனித்து வீட்டிலே பராமரிக்கப்படும் பாலகர்களின் உறவினர்களிடம் காணமுடியாது.

காலை முதல் மாலைவரை இயங்கும் இப் பாலர் பகல் விடுதிகள் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுடன் அன்றைய நாளை பாலகர்களுக்காக ஆக்கபூர்வமாக செயற்படத்துகின்றன. பாரதியாரின் கூற்றுக்கமைய காலையில் படிப்பு பின் மாலை முழுவதும் விளையாட்டாக அவர்களது நேரசூசி அமைகின்றது. விளையாட்டுடன் இணைந்த கல்வி புகட்டப்படு கின்றது. மன உழைச்சலுக்கு ஆளாகாது சந்தோஷகரமான ஆடல், பாடல், விளையாட்டுடன் அறிவு கொடுக்கப்படுகின்றது. இப்பருவத்திலேயே ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, நன்றிகூறுதல், பெற்றோரைக் கனம் பண்ணல் போன்ற ஆரம்ப நன்நெறிகள் யாவும் பிள்ளைகளுடன் இணைந்து அவர்களது வழியில் நின்று புகட்டப்படுகின்றது. சமுதாயத்திற்கு தேவையான உளவளர்ச்சி பெற்ற பிரசைகள் இங்கே உருவாக்கப் படுகின்றனர்.

இன்றைய பெற்றோர்களின் மிகப்பெரிய பிரச்சனை தம் பிள்ளைகளுக்கு சத்தான உணவை ஊட்டல். வேலைக்குச் செல்லும் பெற்றோர் காலை நேரப் பரபரப்பில் உணவை பொறுமையுடன் ஊட்டும் நிலை மிக அரிதாகவே காணப்படுகின்றது. இவற்றையெல்லாம் சுலபமாக செயற்படத்தும் நிறுவனங்களாக பாலர் பகல் விடுதிகள் காணப்படுகின்றன. பாலகர்கள் ஒன்றாக இருந்து உணவு உண்ணும் பொழுது ஒருவரை ஒருவர் நோக்கிச் சாப்பிடும் திறனைப் பெறுகின்றார்கள். எந்த உணவையும் தட்டிவிடாது எல்லாவகையான சத்துக்களையும் கொண்ட உணவுகளை பாலகர்கள் பெறக்கூடிய ஒரு நிறுவனமாக பாலர் பகல் விடுதிகள் காணப்படுகின்றன. உடல் ஆரோக்கியமான பிள்ளைகளை சமூகத்திற்கு வழங்கும் நிறுவனமாகவும் இந் நிலையங்கள் காணப்படுகின்றன.

குழந்தையின் முதல் ஐந்து வயது வரையான பருவம் குழந்தைப் பருவமாகும். இப்பருவத்தில் பிள்ளைகளின் விருத்திக்கான வளர்ந்தோரின் பங்களிப்பு அவர்களது எதிர்கால நிலையைத் தீர்மானிக்கும். சிக்மன் பிரைட் அவர்கள் குழந்தைக்கு ஐந்து வயதாகும் போது அதன் ஆளுமை வளர்ச்சி முடிவுறுவதாக கூறுகின்றார். அவ்வாறே ஜீன் பியாஜே அவர்களது பிள்ளை விருத்திப் பருவங்கள் தொடர்பான கொள்கை, மாஸ்லோவின் தேவைக் கொள்கை முதலானவையும் பிள்ளையின் விருத்தியில் சூழலின் பங்களிப்பை வேண்டி நிற்கின்றன. மரபணுவினால் தீர்மானிக்கப்பட்ட

பிள்ளையின் வாழ்க்கை எதிர்காலத்தில் எந்த நிலைக்கு செல்லும் என்பது சூழலின் தாக்கத்தைப் பொறுத்தே அமையும். சமூக அபிவிருத்திக்குப் பொருத்தமான சூழலொன்றை அமைத்துக் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் அதிகமான பிள்ளைகள் நல்ல அபிவிருத்திக்கு உரித்துடையவராகின்றனர். கருக்குடும்ப அமைப்பு இன்றைய சமூக அமைப்பில் அதிகரித்து வரும் நிலையில் ஆளிடைத் தொடர்புகளுக்கான சந்தர்ப்பங்களை பிள்ளைகள் பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள், முன்பள்ளிகள் என்பவற்றிலேயே பெறுகின்றனர். பிள்ளை விருத்தி தொடர்பான இத்தகைய கோட்பாடுகளை விளங்கிக் கொண்டு அவர்களது உடல், உள, சமூக மனவெழுச்சி விருத்திக்கு உதவுவதில் பாலர் பகல் விடுதிகளும் முன்பள்ளிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன.

மேலே கூறப்பட்ட சகல அம்சங்களுக்கும் பொருத்தமானதாக 1955ஆம் ஆண்டளவில் நீர்வேலி தெற்கு பாலர் பகல் விடுதி ஆரம்பிக்கப்பட்டது. இன் நிறுவனம் முன்னாள் கல்விப்பணிப்பாளர் அமரர். இ. க. சண்முகநாதன் அவர்களின் அயராத முயற்சியினால் ஸ்தாபிக்கப் பட்டது. ஆரம்ப காலங்களில் விவசாய தொழில் புரிந்த பெற்றோர்களின் பாலகர்களை அதிகமாக கொண்டிருந்த இந் நிறுவனம் இன்று விவசாயம், ஏனைய தொழில்களுக்கு செல்லும் பெற்றோர்களின் பாலர்களுக்காகவும் செயற்பட்டு வருகின்றது. இந்நிலையத்தின் அயலில் இருந்து சகல செயற்பாடுகளையும் அவதானித்த பெரும் பேறு பெற்றவள் என்ற வகையில் சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகின்றேன்.

நீர்வேலிக் கிராமமக்களின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்தது இப்பாலர் பகல் விடுதியே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. குறிப்பாக தொழிலுக்குச் செல்லும் நீர்வேலிக் கிராமத்தைச் சார்ந்த பெற்றோர்கள், அயலூர்களிலுள்ளோர் இந்நிலையத்தில் தம் பிள்ளைகளை விட்டு செல்வர். இந்நிலையம் இல்லாவிடில் பெரும்பான்மையான பெற்றோர்கள் தமது தொழில்களையோ, மேற்படிப்புக்களையோ மேற்கொள்ள முடியாது போயிருக்கும். கிராமத்திற்கு தேவையான சிறந்த அறிவாளிகளை, தொழில் வல்லுனர்களை உருவாக்கி அவர்களை சிறந்த உடல், உள ஆரோக்கியமானவர்களாக பராமரித்து சமுதாயத்திற்கு கையளித்த பெருமை எமது பாலர் பகல் விடுதிக்கே உரியது. எமது சமூகத்தின் வளர்ச்சிக்காக இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் குழந்தை பராமரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதனை நெறிப்படுத்தி ஊக்கம் கொடுப்பவர்களாக நிறுவன நிர்வாக சபையினர் செயற்படுகின்றனர்.

நீர்வேலி பாலர் பகல் விடுதியில் படித்த எத்தனையோ பாலகர்கள் இன்று சிறந்த பிரசைகளாக, நல்ல தொழில் நிலைகளில் உள்ளவர்களாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் காணப்படுகின்றனர். இவர்களது வளர்ச்சிக்கு அத்திவாரம் இட்டது எமது பாலர் பகல் விடுதியே. இதன் காரணமாகவே எமது கிராம பாலர்நிலைய பழைய மாணவ புலம்பெயர் தமிழ் உள்ளங்கள் இந்நிலையத்திற்கு அளப்பரிய உதவிக் கரங்களை நீட்டி எதிர்வரும் சமூகவளர்ச்சிக்கு உதவுபவர்களாக காணப்படுகின்றனர்.

எமது பாலர் பகல் விடுதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் எமது பாலகர்கள் வழிநடத்தப்படுகின்றனர். மேற்குலநாடுகளின் ஆய்வுகளில் கூறப்பட்ட பெரும்பாலான விடயங்கள் எமது தகுதிக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கப்படடு கற்றல் கற்ப்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. இங்கு வளர்ந்து பிள்ளைகள் தலைமைத்துவ பண்புகளைப் பெற்றவர்களாக, சமூக இசைவாக்கம் பெற்றவர்களாக, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு பெற்ற நல்மாணக்கர்களாக உடல், உள ஆரோக்கியத்துடன் பாடசாலைகளுக்கு செல்வதை வரலாறு காட்டி நிற்கின்றது. இத்தனை அளப்பெரிய சேவைகளை ஆற்றும் எமது பாலர் பகல் விடுதி மேன்மேலும் எமது கிராமிய சமுதாய வளர்ச்சிக்கு அளப்பெரிய சேவையாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.



# முன்பள்ளிப் பிள்ளைகளிடையே கணித எண்ணக் கருக்களை விருத்தி செய்தல்
# Developing Mathematical Concepts among Preschool children

கலாநிதி த. கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஒரு மனிதனின் வாழ்க்கை வட்டத்தில் பிறப்பிலிருந்து ஐந்து அல்லது ஆறு வயது வரையான காலப்பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. உண்மையில், ஒரு பிள்ளையின் வாழ்க்கைக்கான அடித்தளம் இக்காலப் பகுதியிலேயே இடப்படுகின்றது. இப் பருவத்தில் உளவிருத்தியும் உடல் வளர்ச்சியும் மிக விரைவாக ஏற்படுகின்றன.

சிக்கலான இன்றைய உலகில், யந்திரமயமான வாழ்க்கையின் மத்தியில் ஆரம்ப பிள்ளைப்பருவப் பிள்ளைகளுக்கு வேண்டிய ஆரம்ப அனுபவங்களை வழங்கி, அவர்களின் பல்வேறு திறன்களையும் வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். இந்நிலையில் முன்பள்ளிகளின் தேவை உணரப்பட்டு, இன்று அனைத்துப் பிள்ளைகளுக்கும் முன்பள்ளிக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

வீட்டுச் சூழலிலிருந்து வேறுபட்ட சூழலில், தன்னோடொத்த வெவ்வேறு பிள்ளைகளுடன் இணைந்து மகிழ்வுடனும் திருப்தியுடனும் ஒரு சில மணித்தியாலங்களைத் தினந்தோறும் கழிப்பதற்கும் புதிய அனுபவங் களைப் பெற்றுக் கொள்வதற்கும் முன்பள்ளியானது பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. பிள்ளைகளின் தேவைகளையும் விருப்பு - வெறுப்புகளையும் நன்கு அறிந்து கொள்வதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால், நன்கு ஒழுங்கமைக்கபபட்ட வகையிலே, பிள்ளைகளின் அடிப்படைத் திறன்கள் முன்பள்ளிகளில் விருத்தி செய்யப்படுகின்றன.

ஒரு பிள்ளையோ அல்லது விலங்கோ அதனது முழு விருத்தியும் தூண்டப்படாத ஒரு சூழலில் வளரும் போது, அதன் முழுமையான விருத்தியானது பின்னடைவையே எதிர்கொள்ளும். அவ்வாறன்றி, முழுமையான விருத்தியைத் தூண்டக்கூடிய சூழலையும் சமூகக் கல்வி

நிலையையும் முன்பள்ளிகளில் ஏற்படுத்தும்போது, உடலியல் விருத்தி, உள விருத்தி, மொழி விருத்தி, சமூக விருத்தி, மனவெழுச்சி விருத்தி, அறிகை விருத்தி போன்ற பல்வேறு விருத்தி நிலைகளையும் உள்ளடக்கிய முழுமையான விருத்திக்கான அடித்தளத்தை இடமுடியும். இதனால், முறைசார்ந்த கல்விக்கான பாடசாலைக்குள் பிரவேசிக்கும்போது, அவசியமான முதிர்ச்சியையும் சமூகமயமாக்கல் நிலையையும் பிள்ளை எய்திக் கொள்ள முடியும்.

**கணித எண்ணக் கருக்களின் விருத்தி**

ஆரம்பப் பிள்ளைப் பருவ அறிவாற்றல் விருத்தியின் முக்கியமான இரு அம்சங்கள் மொழி விருத்தி, கணித எண்ணக்கரு விருத்தி என்பன ஆகும். மொழி விருத்தி பற்றிய தெளிவு, பொதுவாக பெற்றோர்களிடத்தும் சமூகத்தினரிடத்தும் ஆசிரியர்களிடத்தும் காணப்படுகின்ற போதிலும் கணித எண்ணக்கரு விருத்தி பற்றிய போதிய அளவான விளக்கம் எல்லோரிடத்தும் இருப்பதாகக் கொள்ள முடியாது.

கணித எண்ணக்கருக்கள் கணிதம் சார்ந்த தகவல்கள் குறித்த பொதுவான கருத்துகளையும் கணிதத்தின் குறிப்பான பகுதியையும் உள்ளடக்குபவை ஆகும். முன்பள்ளியில் முறைசார் கணிதம் கற்பிக்கப்படுவதில்லை. முன்பள்ளிச் சிறார்களுக்கு கணிதம்சார் அறிவுறுத்தல்கள், போதனைகள் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைப் பிரவேசம் வரை பிள்ளைகள் தமது வீட்டில் பெறும் அனுபவங்களிலிருந்து கணிதம்சார் அனுபவங்களையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால், இந்த அனுபவங்கள் ஒழுங்கான முறையிலே வீட்டில் வழங்கப்படுவதில்லை. பாடசாலையில் வழங்கப்படும் செயற்பாடுகளினூடாகவே, ஒழுங்கமைந்த முறையில், பிள்ளை மேலும் கணித அனுபவங்களைப் பெற்றுக்கொள்கின்றது. எனவே முறைசார் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போது, எண்கள் பற்றிய விளக்கத்துக்கு வழிகாட்டக் கூடிய அடிப்படையான கணித எண்ணக்கருக்களை முன்பள்ளிகள் ஒழுங்கமைத்துக் கொடுக்க வேண்டும். எண்களைக் கற்றுக் கொள்வதற்கு முன்பான இந்த எண்ணக்கருக்கள் முன்எண் எண்ணக்கருக்கள் (Pre-number Concepts) எனப்படுகின்றன.

அறிவாற்றல் விருத்தியில் இரு முக்கியமான காரணிகள் சம்பந்தப்பட்டுள்ளன. அவையாவன :

**உள்ளார்ந்த ஊக்கல்**
**வெளிப்புற சூழல்சார் தூண்டல்கள்**

இவவாறு கூறுவதன் அர்த்தம், பிள்ளை வெளிப்புறச் சூழல்சார் தூண்டல்களுக்குத் துலங்குவதற்கு - எண்ணக்கருவை விளங்கிக் கொள் வதற்கு உள்ளார்ந்த ரீதியாகவே தயார்ப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். எனவே, அவசியமான முன் அனுபவங்கள், உளப்பின்னணி, ஆர்வம், உணர்ந்து அனுபவிக்கும் ஆற்றல், விளங்கிக் கொள்ளும் ஆற்றல் ஆகியன வெற்றிகரமான எண்ணக்கரு விருத்திக்கு பிள்ளையுள் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் .

இந்நிலையில், எல்லா வகையான கட்டுப்பாடுகளிலிருந்தும் தடைகளிலிருந்தும் விடுவிக்கப்படுகின்றதான பொருத்தமான ஒரு சூழல் பிள்ளைக்கு அவசியம். தேவையற்ற வகையில் பிள்ளையில் பாதிப்பை ஏற்படுத்தாமலோ சலிப்படையச் செய்யாமலோ, பிள்ளையைத் தூண்டுவதாக இச்சூழல் அமைய வேண்டும். பிள்ளை ஒரு செயற்பாட்டைச் செய்து கொண்டிருக்கும்போது, புறச்சூழல் காரணமாக குழப்பம் ஏற்படுமானால், பிள்ளையின் ஆர்வமும் ஆவலும் குறைந்து கொண்டு சென்று, அச்செயற்பாட்டை பிள்ளை கைவிட நேரிடும். சூழலிலிருந்தான தடைகளுககுப் பதிலாக ஆதரவையும் தூண்டுதலையும் பிள்ளை பெறுமாயின், அச்செயற்பாட்டில் அதிக ஆர்வத்துடன் பிள்ளை ஈடுபடும்.

**எண்ணக்கரு விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

பொதுவாக. எண்ணககரு விருத்தியை ஒரு பிள்ளையிடத்து ஏற்படுத்துவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அக்காரணிகளைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

- செயற்பாட்டைத் தொடங்குவதற்கான பிள்ளையின் ஆயத்த நிலை
- பிள்ளையின் உள அமைவு
- சூழல்

- உபகரணங்கள் / சாதனங்கள்
- இணைந்து செயற்படும் குழு
- திருப்தி
- வளர்ந்தோர் ஆதரவு

எந்தவொரு செயலையும் செய்யுமாறு ஒரு பிள்ளையை நாம் கட்டாயப்படுத்த முடியாது. பிள்ளையிடம், அச்செயலைச் செய்வதற்கான இயல்பான ஆவலும் ஆர்வமும் இருக்க வேண்டும். எனினும், பிள்ளை ஊக்குவிக்கப்பட வேண்டும். அப்போது தான், பிள்ளை தான் விரும்பிய விளைவை அல்லது பெறுபேற்றை அச்செயற்பாட்டிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு, தான் விரும்பும் நேரம்வரை ஒரு செயற்பாட்டில் ஈடுபடவும் விரும்பியபோது அச்செயலை நிறுத்திக் கொள்வதற்கும் அப்பிள்ளைக்குச் சுயாதீனம் வேண்டும். இவ்வகையில் ஒரு செயற்பாட்டைத் தொடங்குவதற்கான **பிள்ளையின் ஆயத்த நிலை** என்பது எண்ணக்கரு விருத்தியில் தாக்கம் செலுத்தக் கூடிய முக்கியமான ஒரு காரணி ஆகும்.

***பிள்ளையின் உள அமைவு*** என்ற காரணியைப் பொறுத்தவரை, ஒரு செயற்பாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பிள்ளையிடம் உளநிலை தொடர்பான நன்னிலை காணப்பட வேண்டும். அதாவது பிள்ளையின் செயற்பாட்டுக்குக் குந்தகமாக அமையும் வகையில் எவ்வித உளத்தடையும் காணப்படக் கூடாது. மகிழ்ச்சியின்மை, உளக்களைப்பு, கூச்சம், பயம், கவலை, பதற்றம் ஆகியன பிள்ளையின் இயல்பான நடத்தையில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய சில உள நிலைகள் (Mental States) ஆகும். இவை பிள்ளையிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவுகளைத் தரமாட்டா. திறந்த மனதுடன் ஒரு செயலில் பங்குபற்றுவதற்கு பிள்ளையிடமிருந்து எல்லா வகையான உளத்தடைகளும் அகற்றப்பட வேண்டும்.

செயற்பாட்டின்போது பிள்ளை குழப்பமடையாத வகையில் **சூழல்** ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பது எண்ணக்கரு விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான மற்றுமோர் அம்சமாகும். வெயில், மழை என்பவற்றிலிருந்து நீங்கியதாக பொருத்தமான சூழல்

அமைந்திருத்தல் பிள்ளை சுயாதீனமாக இயங்க உதவும். பிள்ளை ஓரிடத்தில் இருக்கும் போது கூட கைகளையும் கால்களையும் பரப்பிக் கொண்டு வசதியாக இருக்கக் கூடியதான சூழல் வேண்டும். ஒரு செயலில் வெற்றிகரமாக பிள்ளை ஈடுபடுவதற்கு சூழலானது தூண்டுவதாகவும் தடைகளற்றதாகவும் இருக்க வேண்டும்.

பிள்ளையொன்று தனது செயற்பாடுகளின்போது பல்வேறு உபகரணங்களையும் சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்ளும். இச்சாதனங்கள் பல்வேறு வகையினதாக உள்ள போது பிள்ளை அதிக அளவில் ஊக்குவிக்கப்படும். அதே வேளை, ஒரே சாதனங்களைப் பயன்படுத்தும் போது பிள்ளை சலிப்படையும். அத்தோடு, உபகரணங்களும் சாதனங்களும் அதிக முயற்சியின்றி இலகுவாகப் பயன்படுத்தக் கூடியனவாக இருக்க வேண்டும்.

அனேகமான சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் தனியாகச் செயற்படுவதை விட, குழுவாக இயங்குவதையே விரும்புவர். இவ்வாறாக **இணைந்து செயற்படும் குழுவானது** பிள்ளைகளின் விருப்பத்துக்குக்குரிய வர்களாலும் சமவயதினராலும் உருவாக்கப்பட வேண்டும். இதனால் நட்பார்ந்தரீதியில் அவர்கள் தொழிற்பட வழிவகுக்கப்படும். பிரச்சினை யொன்றை ஒரு பிள்ளை எதிர்கொள்ளும் போது, அக் குழுவிலுள்ள ஏனைய பிள்ளைகளின் அனுசரனையுடன் அப்பிரச்சினையைச் சமாளிக்கக் கூடியதாகவும் இருக்கும். வளர்ந்தோரிடமிருந்தான உதவியை விட தனது வயதை ஒத்தவர்களிடமிருந்து ஆதரவும் உதவியும் கிடைப்பதையே பிள்ளை விரும்புவதோடு எண்ணக்கரு விருத்தியிலும் மேம்பாடு கொள்ள முடியும்.

அடுத்து, ஒவ்வொரு செயற்பாட்டின் முடிவிலும் பிள்ளை பெற்றுக் கொள்ளும் உளத்திருப்தி மற்றுமொரு முக்கியமான காரணியாகும். ஒரு செயற்பாட்டின் முடிவில் உளத்திருப்தியைப் பிள்ளை பெற்றுக் கொள்ளும் போது, திருப்தி தரக்கூடிய மேலதிக செயற்பாடுகளைச் செய்வதற்கும் பிள்ளை விரும்பும். திருப்தி தராத செயற்பாடுகளில் பிள்ளைக்கு வெறுப்பு ஏற்படும். ஒரு செயற்பாட்டினூடாக ஒரு பிள்ளை பெற்றுக் கொள்ளும் திருப்த்தியானது எண்ணக்கரு விருத்தியில் நேர்விளைவை ஏற்படுத்தும்.

பிள்ளைகள் தம்மை ஒத்த வயதுப் பிள்ளைகளுடன் சேர்ந்து செயற்பாடுகளில ஈடுபடவே விரும்புகின்றனர் என ஏற்கனவே நோக்கியுள்ள போதிலும், ஒருவர்க்கொருவர் உதவமுடியாத பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்படும் போது **வளர்ந்தோரின் ஆதரவுடன்** அப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதையே பிள்ளைகள் விரும்புவர். ஆனாலும் இந்த உதவியானது தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். அத்தோடு, பிள்ளைகளுக்கு வழிகாட்டுகின்ற வகையிலும் இந்த உதவி அமைய வேண்டும். எனவே முன்பள்ளிகளில் செயற்பாடுகளின்போது பிள்ளைகளின் நடத்தைகளை அவதானிக்கும் முன்பள்ளி ஆசிரியர் அவ்வாறான வேளைகளில் பிள்ளைகளுக்கு உடனடியாக அறிவுரை வழங்கி, வழிகாட்ட வேண்டும்.

## முன்பள்ளிகளில் கணித எண்ணககருக்களை விருத்தி செய்ய வேண்டியதற்கான காரணங்கள்

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் முறைசார் கற்பித்தல் மூலமே முறைசார் கணிதத்திறன்களைப் பிள்ளை பெற்றுக் கொள்கின்றது. ஆயினும், முன்பள்ளிகளில் கணித எண்ணக் கருக்களை விருத்தி செய்வதற்கான நியாயப்பாட்டுக்கு பின்வரும் காரணங்களை முன் வைக்கலாம்.

- ஆரம்பப் பள்ளிக் கணித நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பிள்ளையைத் தயார் செய்தல்

- பிள்ளையால் செய்யப்படக் கூடியனவற்றுக்கும் செய்ய விரும்புவனவற்றுக்கும் பொருத்தமான கல்வியை வழங்குதல்

- கணிதக் கல்வியில் மேலும் தேவைப்படுகின்ற அடிப்படைத்திறன்களை விருத்தி செய்தல்

- தர்க்க ரீதியான காரணம் காணல் - பிள்ளைகள் தாம் கதைப்பன வற்றுக்கும் செய்வனவற்றுக்கும் காரணங்களைத் தருதல். உதாரணமாக, ஒரு தொகுதி பொருட்களை வகைப்படுத்துவதை நியாயப்படுத்தல்.

- வரிசையில் ஒழுங்கு செய்தல், உதாரணமாக, அலுமாரியில் வெவ்வேறு தட்டுகளில் வெவ்வேறு உடுப்பு வகைகளை வைத்தல்

- மெல்லக் கற்கும் பிள்ளையைப் படிப்படியாக விரைவாகத் தனது வேலைகளைச் செய்வதற்குப் பயிற்றுவித்தல்.

- பிள்ளை, ஒன்றைச் செய்வதற்கான இலக்கைக் கொண்டிருத்தல்.

- பிள்ளைகள் தாம் செய்வனவற்றை ஏன் செய்யுமாறு கேட்கப்பட்டார்கள் என்பதைச் சிந்தித்தல்.

- தமது சொந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிள்ளைகளை ஆற்றலுள்ளவர்களாக்குதல்.

- எதிர்கால விருத்திக்காக அதிக அளவு யதார்த்தமான முன் அனுபவங்களைப் பிள்ளை பெற வைத்தல்.

- தவறான விளக்கங்களையும் அனுபவங்களையும் திருத்திக் கொள்ளல்.

- பிள்ளையின் நாளாந்த வாழ்க்கைக்கு அவசியமான கணித எண்ணக்கருக்களைப் பிள்ளைக்கு வழங்குதல்.

- கணித பாடத்தை பிள்ளைகள் விரும்பிக் கற்கவும் மகிழச்சி பெறவும் வைத்தல்.

- கணித விளையாட்டுகளினூடாக பிள்ளைகளை மகிழ்வாக வைத்திருத்தல்.

**முன்பள்ளிச் சிறார்களில் கணித எண்ணக் கருக்களை விருத்தி செய்தலை மேம்படுத்துவதற்காக வீட்டுச் சூழலைத் தயார் செய்தல்**

பிள்ளைகளின் கணிதத் திறன்களை விருத்தி செய்வதற்கான வீட்டுச்சூழலை எவ்வாறு தயார்செய்வதென பெற்றோர்களுக்கு முன்பள்ளி

ஆசிரியர்கள் அறிவுறுத்த வேண்டும். வீடுகளில் பிள்ளைகள் செய்யக்கூடிய ஒரு தொகுதி செயற்பாடுகளைப் பற்றியும் அச்செயற்பாடுகளில் பெற்றோர் எவ்வாறு உதவ முடியுமெனவும் பெற்றோருக்கு அவர்கள் விளக்கமளிக்கலாம்.

இவ்வகையில் வார இறுதி நாட்களில் பிள்ளைகள் தமது அலுமாரியில் உடுப்புக்களை **வகைப்படுத்துதற்குப்** பெற்றோர் உதவலாம். ஒரு தட்டில் பாடசாலைச் சீருடைகள், இன்னொரு தட்டில் விழாக்களுக்கு அல்லது விசேட வைபவங்களுக்கு அணியும் உடுப்புகள், மற்றுமொரு தட்டில் வீட்டில் அணியும் உடுப்புகள், இன்னுமொரு தட்டில் காலுறைகள், உள் அங்கிகள் என்றவாறாக பிள்ளைகள் உடுப்புகளை ஒழுங்குபடுத்தி வைப்பதற்குப் பெற்றோர் உதவலாம்.

அதேவேளை பிள்ளைகள் தமது உடுப்புகளைத் தாமே தெரிவு செய்வதற்குப் பெற்றோர் அனுமதிக்க வேண்டும். இது நிறங்களுக் கிடையிலுள்ள வித்தியாசங்களைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ளவும் தமது விருப்பத்துக்குரிய நிறங்களை வேறுபடுத்தவும் உதவும்.

தனது உணவைத் தானே பிள்ளை வகைப்படுத்திக் கொள்ள அனுமதிப்பதன் மூலம் தான் விரும்பி உண்ணும் உணவுடன் பரிச்சயப்படவும் குசினியில் பிள்ளைகளை உதவ முன்வரச் செய்யவும் முடியும். இதனால் காய்கறிகள், பழங்கள், மற்றும் பொருட்களோடு பிள்ளை பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

அதேவேளை, சந்தையிலிருந்து காய்கறிகளையும் பழங்களையும் மற்றும் மளிகைச் சாமான்களையும் வாங்கிவரும்போது, குளிரூட்டியில் வைப்பதற்கு முன்பாக காய்கறிகளையும் பழங்களையும் வகைப்படுத்துமாறு பிள்ளையைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இதேபோல, பையிலிருந்து மளிகைச் சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்து வைக்குமாறும் பிள்ளையிடம் பொறுப்பை ஒப்படைக்கலாம். இவற்றிலிருந்து, நிறம், வடிவம் என்பவற்றுக்கு ஏற்ப காய்கறிகளிலும் பழங்களிலும் உள்ள வேறுபாடுகளைப் பிள்ளை அறிந்து கொள்ள முடியும். மளிகைச் சாமான்களிலும் வடிவ வேறுபாடுகளை பிள்ளை உணர்ந்து கொள்ள முடியும்.

இதே போல, தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் போன்ற வீட்டிலுள்ள பொருட்களோடு பிள்ளைகள் பரிச்சயம் பெறுவதற்கும் பெற்றோர் உதவ முடியும். சாப்பாட்டு மேசையில் தட்டுகளையும் கோப்பைகளையும் கரண்டிகளையும் ஒழுங்குபடுத்துமாறு பிள்ளைகளைக் கேட்கும்போது ஒன்றுக்கு - ஒன்றான தொடர்பு பற்றி பிள்ளை உணர்ந்து கொள்ள முடியும். இவ்வாறே, பொம்மைகளின் சட்டைகளை பொம்மை களுக்கு அணிவிக்குமாறு பிள்ளைகளிடம் கோரிக்கை விடுக்கும் போது, அச்செயற்பாட்டின் மூலமும் ஒன்றுக்கு - ஒன்றான தொடர்பு பற்றித் தெரிந்து கொள்ள முடியும்.

பொம்மைகள், விளையாட்டுக் கோப்பைகள், தட்டுகள், கட்டும் கட்டைகள் போன்றவற்றுடன் பிள்ளைகள் விளையாடிய பின்பு வெவ்வேறு பெட்டிகளில் அவற்றை இடுமாறு கேட்கும் போது பிள்ளைகளிடம் வகைப்படுத்தல் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

**அடிப்படையான கணித எண்ணக்கருக்கள்**

முன்பள்ளிகளில் “கற்றல் - கற்பித்தல் செயற்பாடு” என்ற பிரயோகம் பொருத்தமற்றது. பிள்ளைகள் விளையாட்டினூடாக அனுபவங்களைப் பெற்று கற்றுக் கொள்கிறார்கள். என்று கூறுவதே கூடிய பொருத்தமானது. பிள்ளைகள் ஆராய்வு மனப்பாங்கு கொண்டவர்கள். எனவே, பல்வேறு விளையாட்டுக்களின்போதும் அவர்கள் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் அவர்களை ஏன், எப்படி என்று சிந்திக்க வைக்கின்றன. போதிய அளவிலான விளையாட்டு உபகரணங்களுடனும் சாதனங்களுடனும் பொருத்தமான சூழலில் பிள்ளைகள் விளையாடும்போது அவர்களின் செயற்பாடு களினூடாகவே அடிப்படையான கணித எண்ணக்கருக்கள் பலவற்றை உணர்ந்து கொள்கிறார்கள்.

இவ்வாறான அடிப்படையான கணித எண்ணக்கருக்களாக அமைபவை

- வகைப்படுத்தலும் கூட்டமாக்கலும்
- வடிவங்கள்
- ஒன்று - ஒன்றுக்கான தொடர்பு

- வரிசைப்படுத்தல்
- அயல் / நிலை
- மாறின்மை அல்லது காப்பு நிலை
- எண்கள்
- அளவீடு
- தொடர்பு
- சமச்சீர்

சூழலிலுள்ள பல்வேறு பொருட்களும் பல்வேறு பண்புகளைக் கொண்டவை. அவற்றைப் பரிசீலிக்கும்போது, குறித்த இயல்புகளின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்திக் கொள்ளலாம் என்**ப**தைத் தெரிந்து கொள்ள முடியும். வெவ்வேறு வகையினதான விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடும்போது, அவற்றைப் பிள்ளைகள் சிறு சிறு கூட்டங்கள் ஆக்குவதைத் காணலாம். ஒரு கூட்டத்திலுள்ள பொருட்களிடையே ஏதோ ஒரு பண்பு சார்ந்து ஒற்றுமையைக் காணமுடியும். இதுவே **வகைப்படுத்தலாகும்.**

தமது சூழலில் பல்வேறு **வடிவங்களில்** அமைந்த பொருட்களைப் பிள்ளைகள் காண்பதற்குச் சந்தர்ப்பம் உள்ளது. வட்டம், முக்கோணி, சதுரம், நீள்சதுரம் போன்ற ஒழுங்கான வடிவங்களைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்கிறார்கள். இவ் வடிவங்களிலுள்ள பொருட்களைச் சுற்றி தமது விரல்களை ஓடவிடுவதன் மூலமும் புலக்காட்சி பெறுவதன் மூலமும் பிள்ளைகள் வடிவங்கள் குறித்து அறிந்து கொள்கிறார்கள். வீட்டிலுள்ள பொருட்களுடனும் விளையாட்டுப் பொருட்களுடனும் வெவ்வேறு வடிவங்களைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ள முடியும்.

பிள்ளைகள் விளையாடும்போது தாம் பயன்படுத்தும் பொருட்களிடையே ஏதோ ஒரு தொடர்பைக் கண்டு கொண்டு சோடி சோடியாக அவற்றை இணைப்பதை அவதானிக்க முடியும். ஒரு போத்தலுக்கு ஒரு மூடி என்ற வகையிலோ ஒரு கோப்பைக்கு ஒரு கிண்ணம் என்ற வகையிலோ பிள்ளைகள் இணைப்புகளை ஏற்படுத்தும் போது ***"ஒன்றுக்கு - ஒன்று உள்ள தொடர்பு"*** என்ற எண்ணக்கரு விருத்தியடைகின்றது.

பிள்ளைகள் தாம் கையாளும் பொருட்களை ஏதோ ஒரு பண்புக்கூறின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது அது **வரிசைப் படுத்தல்** எனப்படுகின்றது. பருமனின் அடிப்படையிலோ அல்லது உயரத்தின் அடிப்படையிலோ என பொருட்களைப் பிள்ளை வரிசைப் படுத்தும் போது, இந்த எண்ணக்கரு பிள்ளையிடத்து விருத்தியடைகின்றது.

அயல் என்பது ஒரு பொருளின் நிலையைப் பொறுத்து உணர்ந்து கொள்ளப்படுவதாகும். கிட்ட - தூர, மேலே - கீழே, உள்ளே - வெளியே, முன்னால் - பின்னால் என பொருட்களின் **அயலும் நிலைகளும்** விபரிக்கப்படக் கூடியன. இந்த இயல்பு பின்பு எண்களின் பெறுமானங்களை சரியாக இனங்காண உதவும்.

**மாறின்மை** என்பது உறுதியான தன்மை அல்லது மாறாப் பெறுமானம் என்பதைத் குறிப்பதாகும். ஒரு குறித்த எண்ணிக்கையான சிறுமணிகளை வெவ்வேறு பரம்பல் நிலைகளில் வைப்பினும் எண்ணிக்கையில் மாறாதிருக்கும். இவ்வாறே, திரவங்களின் கனவளவு திணிவு, போன்றனவும் அவற்றின் வடிவங்களை மாற்றினும் மாறாதிருக்கும். இப்பண்பு எண்களினதும் பதார்த்தங்களினதும் **மாறின்மை அல்லது காப்புத் தன்மை** என அழைக்கப்படும். இந்த எண்ணக்கருவும் எண்கள் பற்றிய விளக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்பு விருத்தி செய்யப்பட வேண்டிய முன்எண் எண்ணக்கருவாகும்.

முன்பள்ளிப் பிள்ளைகளிடத்து **எண்கள்** பற்றிய எண்ணக் கருவை விருத்தி செய்யும் போது ஒன்று முதல் ஐந்து வரையுள்ள எண்களே அறிமுகம் செய்யப்படும்.. ஒரு பூ, ஒரு மரம், ஒரு பொம்மை... என பல்வேறு உதாரணங்களினூடாக ஒன்று என்ற எண்ணின் தன்மை பிள்ளைக்கு உணர்த்தப்படும்போதே ஒன்று என்ற எண்ணைப் பிள்ளை விளங்கிக் கொள்ள முடியும். இவ்வாறே ஏனைய எண்களும் பொருட்களுடன் இணைத்தே உணர்த்தப்பட வேண்டும்.

முன்பள்ளிகளில் பிள்ளைகளிடத்தில் **அளவீடு** என்ற எண்ணக்கருவை விருத்தி செய்யும்போது கொள்ளளவு, நிறை, நீளம், காலம், பணம் போன்றவற்றை படிப்படியாக விருத்தி செய்ய வேண்டும் இதற்காக நியம

அலகுகளோ, அளவீட்டுக் கருவிகளோ பயன்படுத்தப்பட வேண்டியதில்லை. ஆனால், நியமஞ்சாரா அலகுகளைப் பயனபடுத்துவதன் மூலம் நாளாந்த வாழ்வில் சந்திக்கும் அளவீடுகள் பற்றிய எண்ணக் கருக்களைப் பிள்ளைகளிடத்து விருத்தி செய்ய முடியும்.

இரண்டு அல்லது மூன்று பொருட்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைப்பது **தொடர்பு** எனும் எண்ணக்கரு ஆகும். பொருட்களிடையே உள்ள தொடர்புகளை வெவ்வேறு கோணங்களில் நோக்குவதற்கு பிள்ளைகளுக்கு உதவுவதன் மூலம் இந்த எண்ணக்கருவை வளப்படுத்தலாம்.

சூழலைக் கண்டறிதல் மூலமும் ஆக்கச் செயல் நடவடிக்கைகள் மூலமும் விருத்தியாக்கப்படக் கூடிய எண்ணக்கரு **சமச்சீர்** என்பதாகும். நாளாந்த வாழ்வில் சமச்சீர்த்தன்மையை உணர்ந்து கொள்ளக் கூடிய பல சந்தரப்பங்களைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறாக, இதுவரை நோக்கிய எண்ணக்கருக்கள் யாவும் முன்பள்ளிகளில் விருத்தி செய்யப்பட வேண்டியன. பாடசாலைக் கணிதத்திற்கான அடித்தளம் இந்த எண்ணக்கருக்கள் மூலமாகவே இடப்படுகின்றது. முன்பள்ளிகளில் கணிதம் என்பது எண்ணுதலுக்கும் மேலானது என்பதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் அப்போது தான் முறையான கணித விருத்தியை முன்பள்ளியைத் தொடர்ந்து வரும் காலங்களில் பிள்ளைகளிடத்து ஏற்படுத்த முடியும்.



# முன்பள்ளிகளில் சுற்றாடற் கல்வியின் முக்கியத்துவம்

**செல்வி ஜெயா தம்பையா** (B.A (Hons), PGDM, MED)
**பணிப்பாளர்**
**ஆரம்பபிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு**
**கல்வி அமைச்சு – வடமாகாணம்.**

இயற்கை உலகு பற்றியும் மனவெழுச்சிகள், திறன்கள், மன உணர்வு ஆகியன பற்றிய விளக்கங்களையும் உள்ளடக்கியதாக சுற்றாடற்கல்வி அமைந்துள்ளது. ரூத் வில்சன் (Ruth Wilson - 1994) என்பவரின் கூற்றுப்படி ஆரம்பப் பிள்ளைப் பருவத்தில் சுற்றாடற்கல்வியானது புலன் உணர்வுகளின் வளர்ச்சி, அழகுணர்வுகளின் வெளிப்பாடு, அறியாதனவற்றை அறிந்து கொள்வதில் காட்டுகின்ற ஆர்வம், இயற்கையை அறிந்து கொள்வதில் காட்டுகின்ற ஈடுபாடு, தேடியறிந்து அனுபவம் பெற்றுக் கொள்ள கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக சுற்றாடற்கல்வி அமைந்துள்ளது. மேலும் பிரச்சினை விடுவித்தல் திறன்களின் விருத்தி, ஆர்வங்களின் வளர்ச்சி, நம்மைச் சூழவுள்ள உலகைப் பாராட்டி நயக்குந் திறன்களின் விருத்தி ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக சுற்றாடற் கல்வி அமைந்துள்ளதாக இவர் குறிப்பிடுகின்றார். கற்றல் செயற்றொடரில் அறிகைப் புலத்தின் வளர்ச்சியுடன் மனவெழுச்சிகளும் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளதாக இப்போது கல்வியளார்கள் குறிப்பிட்டு வருகின்றனர். இதனால் அமைதி, மகிழ்ச்சி, ஆர்வம் ஆகியவற்றை இயற்கையுடன் இயைந்ததாக பிள்ளைகள் அனுபவித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை முன்பள்ளிகள் ஏற்படுத்தி தரவேண்டியதாக இருக்கின்றது. இந்த அனுபவங்கள் மூலம் பிள்ளைகளுக்குக் கிடைக்கப் பெறுகின்ற மனவெழுச்சியானது அவர்களிடையே அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவ்றறை காத்திரமாகக் கட்டியெழுப்புவதற்கு ஆதாரமாக அமைந் துள்ளதாக கார்டனர் (Gardner, 1999) என்பவரும் குறிப்பிடுகின்றார்.

யுனெஸ்கோவின் பெல்கிரேட் சாசனத்தின் பிரகாரம் (Belgrade Charter, UNESCO - 1976) சுற்றாடற் கல்வியின் இலக்கானது “சுற்றாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு, அக்கறை

மற்றும் இது பற்றிய அறிவு, திறன், மனப்பாங்கு, ஊக்கம் ஆகியவற்றுடன் தற்போதைய பிரச்சினைகளுக்கானத் தீர்வுகளையும் புதிய பிரச்சினைகள் ஏற்படாதிருக்க அவற்றைத் தடுத்துக் கொள்வதற்கான தீர்வுகளையும் உலக மக்கள் தனித்தும், குழுவாக இணைந்தும் தொழிற்படுவதற்கான இயலுமையை கொண்டிருத்தலாகும்." இதனை வேறொரு வகையில் கூறுவதாயின் சுற்றாடல் தொடர்பில் எழுத்தறிவு பெற்ற குடிமக்களை உருவாக்குவதே சுற்றாடற்கல்வியின் இலக்காகும் எனலாம். சுற்றாடல் தொடர்பில் எழுத்தறிவு பெற்ற ஒவ்வொரு தனிநபரும் சுற்றாடல் விவகாரங்களை விளங்கிக் கொள்ளக் கூடியவராக இருப்பார். மேலும் மனிதர் எடுக்கின்ற முடிவுகள் எங்ஙனம் சுற்றாடலை பாதிப்படையச் செய்யக்கூடும் என்பதை அறிந்து கொள்ளக் கூடியவராகவும் இருப்பார். மேலதிகமாக சுற்றாடல் தொடர்பில் சமூக அக்கறையுடன் பொருத்தமான தெரிவுகளை மேற்கொள்ள பெற்றுக் கொண்ட அறிவைப் பிரயோகிப்பவராகவும் இருப்பார்.

சுற்றாடல் விவகாரங்கள் மற்றும் அதன் மானுட அம்சங்கள் தொடர்பிலான அறிவின் முக்கியத்துவத்தைப் போலவே சுற்றாடலைப் பேணி பாதுகாத்து போசிக்கும் மனப்பாங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பெரும்பாலான மனப்பாங்குகள் வாழ்வின் ஆரம்பப் பகுதியிலேயே உருவாவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதுவும் ஆரம்ப பிள்ளைப் பருவத்தில் சுற்றாடற்கல்வி கற்பிக்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

இயற்கையுடன் மனிதன் இணக்கமுற வாழ முடியுமென்பதோடு நியாயபூர்வமாக ஒவ்வொருவரும் தொழிற்படமுடியும் என்ற நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு சுற்றாடற்கல்வி கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மேலும் இந்தப் புவியின் நலனுடன் எதிர்கால சந்ததியினரின் நலனிலும் அக்கறை செலுத்துகின்ற தீர்மானங்கள் பற்றி மக்கள் அறிந்திருத்தல் வேண்டுமென்ற நம்பிக்கையும் சுற்றாடற்கல்வி கொண்டுள்ளது. சுற்றாடல் தொடர்பில் எழுத்தறிவு பெற்றவர்களாகவும் ஆக்கபூர்வமாகவும் பொறுப்புணர்வுடனும் பயனுறுதியுடனும் சமூகவாழ்வில் பங்குபற்றுகின்ற நற்குடிமக்களாக ஒவ்வொருவரும் திகழவேண்டுமென்ற நோக்கத்தை ஆதாரமாகக் கொண்டே

சுற்றாடற் கல்வியின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. சுற்றாடற் கல்வியானது பெரும்பாலும் வீட்டை நெருங்கியதாகவும் அயலுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட தொடர்புகளை விளங்கிக் கொள்ள ஊக்கமளிப்பதாகவும் அமைந்திருக்கும். இன்னும் சுற்றாடல் தொடர்பிலான விழிப்புணர்வு, அறிவு மற்றும் அயல் பற்றி விளங்கிக் கொள்வதற்கு தேவையான திறன்கள் ஆகியவற்றுடன் சமூகத்திலுள்ள சிறிய அமைப்பு களிலிருந்து பெரிய அமைப்புக்கள் வரையில் அவற்றிற்கிடையிலான தொடர்புகளை விளங்கிக் கொள்ளவும் உதவியளிப்பதாக சுற்றாடற்கல்வி அமைந்திருக்கும்.

ஆரம்ப பருவ பிள்ளைகளிடையே சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வுடன் தொடர்புடைய அறிவு, திறன், மனப்பாங்கு, சமூகத்தேர்ச்சி ஆகியவையும் கட்டியெழுப்பி போசிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி மேலே கண்டோம். முன்பள்ளிகளில் சுற்றாடல் கல்வி எங்ஙனம் அறிமுகப் படுத்தப்படலாம்? என்ற வினாவுக்கும் நாம் இதுவரையில் கலந்துரையாடிய படி பின்வரும் ஐந்து தலைப்புகளில் ஆரம்பப்பருவ பிள்ளைகள் சுற்றாடற் கல்வியைக் கற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்ப்படுத்தித் தரமுடியும்.

**01) அமைப்புக்கள்**

பிள்ளைகள் அமைப்புகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அமைப்புக்கள் பற்றி கற்றுக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றார்கள். குடும்பங்கள், மக்கட் சமூகங்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள்.

**02) ஒன்றிலொன்று தங்கியிருத்தல்**

மக்கள் ஒவ்வொருவரும் ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பதுடன் இயற்கையுடனும் தங்கியிருக்கின்றனர். நாம் எதை உண்ணுகிறோம்? எதை பருகுகிறோம்? எதை சுவாசிக்கிறோம்? எதை அணிகின்றோம்? இவையெல்லாம் இயற்கையிலிருந்து அறியப்பட்டவையாகும். இதனால் இயற்கையிலும் ஒரு தாக்கம் ஏற்படுவதாக உள்ளது.

**03) வாழும் இடத்தின் முக்கியத்துவம்**

பிள்ளைகள் தமது சொந்த வாழ்விடத்தை பற்றியும் காட்சிகள், ஒலிகள், மணங்கள் போன்றவை பற்றியும் அறிந்திருக்க வேண்டியது

அவசியமானதாகின்றது. மேலும், நமது சுற்றாடலில் வீட்டு முற்றம், பூந்தோட்டம், கிணறு, வீதி என இயற்கையும் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.

**04) ஒன்றிணைப்பு**

சுற்றாடற்கல்வியானது ஒரு பாடமாகவோ அல்லது ஒரு செயற்பாடாகவோ வேறுபடுத்தவேண்டியதில்லை. கலைத்திட்டத்தின் பல்வேறு பரப்புகளிலும் (மொழி, கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம், அன்றாடசெயற்பாடுகள்) அனுபவங்களைப் பெறுமாறு ஒன்றிணைக்க வேண்டியதாக உள்ளது. இலைகளையும் விதைகளையும் தெரிதல் மற்றும் பறவைகள், பூச்சிகள், தாவரங்கள் ஆகியவற்றை இனங் காணல் என்றவாறு இயற்கையுலகுடன் நெருங்கி இணக்கமாக பிள்ளைகள் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கின் றனர். பிள்ளைகள் தாம் வாழுகின்ற இயற்கை உலகு பற்றி விளங்கிக் கொள்வதற்கு உதவுமுகமாக இவ்வாறான இன்னும் பல செயற்பாடுகள் அவசியமாகின்றன.

**05) வாழ்க்கை நீடித்த கற்றல்**

உலகம் பற்றிய எழுச்சியூட்டும் அவா, ஆக்கபூர்வமான சிந்தனையும் பிரச்சினை விடுவித்தலும் கூட்டாக கற்றல் போன்றவை வாழ்க்கை நீடித்த கல்விக்கு அடிப்படை ஆதாரமாகவுள்ளன.

மேலும் பிள்ளைகள் சுற்றாடலுடனும் தமது குடும்ப கலாசாரத் துடனும் பின்னிப்பிணைந்துள்ளனர். பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபட்டதாகவுள்ள அவர்களது கலாசார நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் (எடுத்துக்காட்டாக: உண்ணுதல், உறங்குதல், உடையணிதல், பிறருடனான உறவுகள், ஒழுக்கம்) உட்பட மொழி, சமயம், புவியற்பிரதேசம் ஆகிய பண்புகளுடனும் பின்னிப்பிணைந்துள்ளனர். ஆதலால் சுற்றாடலுடன் ஒன்றிணைந்ததாக கலாசாரப் பண்புகளும் பிள்ளைகளிடையே வளர்த் தெடுக்கப்பட வேண்டியதாக உள்ளது.

இதே வேளையில் முன்பள்ளி ஆசிரியர்கள் சுற்றாடல் பற்றி தமது மாணாக்கர்க்கு கற்றல் செயற்பாடுகளை வடிவமைக்கும் போது தொடர்புடைய கல்வித் தத்துவங்களையும் பிரயோகிக்க வேண்டியவராக

உள்ளனர். இதனால் முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்புடைய கல்வித்தத் துவங்கள் பற்றியும் கல்வி அறிஞர்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டியவர்களாகின்றனர். (எடுத்துக்காட்டாக: டூயி, பியாஜே, மொண்டு சூரி, எரிக்சன் போன்றோர்)

ஆரம்பப் பருவப் பிள்ளைகள் விளையாட்டு மூலமும் கண்டறிதல் மூலமும் கற்றுக் கொள்ள தொழிற்படுவதற்கு எல்லையற்ற சந்தர்ப்பங்களை இந்த உலகு வழங்குகிறது. இவற்றை சுற்றாடற்கல்வியுடன் ஒன்றிணைந்ததாக வடிவமைத்துக் கொள்வதற்கு இவ்வாறான கல்வித் தத்துவங்கள் ஆசிரியர்க்குத் தேவையாகின்றன. எடுத்துக்காட்டாக விளையாட்டும், கண்டறிதலும் என்ற தலைப்புக்கான செயற்பாடுகள் சுற்றாடல் சார்ந்தவை யாகும். இவற்றை வடிவமைக்கும் போது பிள்ளைகளின் உள, உடல், இயக்கத்திறன், மனவெழுச்சி, மனப்பாங்கு, அறிவு, திறன்கள் போன்றவற்றின் விருத்தியையும் கருத்திற் கொள்ள வேண்டியதாக உள்ளது. இது பற்றிய விளக்கங்களை கல்விச் சிந்தனைகள் நமக்குத் தருகின்றன.

பிள்ளைகள் தமக்கு பரீச்சயமானவற்றுடனும் வசதியாக உள்ள வற்றுடனும் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள இயல்பாகவே விருப்பங் கொண்டுள்ளவர்களாக இருக்கின்றனர். இவர்களிடையே இயற்கை உலகுடன் தொடர்புறும் உணர்வை விருத்தியாக்க வேண்டுமாயின் அவர்கள் சுற்றாலுடன் அடிக்கடி நேரடி தொடர்பை பேணிவருகின்றவர்களாக இருக்க வேண்டும். ஆரம்பப்பருவ பிள்ளைகள் சுய முனைப்பு செயற்பாடுகள் மூலமும் சுற்றாடலை அறிந்து கொள்ள இயல்பாகவே ஆர்வங் கொண்டவர்களாக இருக்கின்றனர். இதனால் பிள்ளைகள் காத்திரமான அனுபவங்களை பெற்றுக் கொள்ளுமாறு செயற்பாடுகளை ஆசிரியர்கள் திட்டமிட்டுக் கொள்ள வேண்டியவாரகின்றனர். இதன் மூலம் பிள்ளைகளின் மனப்பாங்கு, திறன், அறிவு, சமூகத்தேர்ச்சி, மனவெழுச்சி ஆகியவற்றின் முழு வளர்ச்சியையும் உறுதி செய்து கொள்ள முடிகிறது.



# முன்பள்ளிகளில் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு விளையாட்டுகள்

**கலாநிதி (செல்வி) நிர்மலா நல்லையா**
**முன்னாள் உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

முன்பள்ளி எனப்படுவது வாண்மைத்துவ தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் விளையாட்டுகளை இணைத்து கற்றலை முன்னெடுக்கும் இடமாகும். முன்பள்ளிகள் தரம் வாய்ந்த விளையாட்டுச் செயற்பாடுகள் ஊடாக பிள்ளைகளின் உடல், உள, மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்து அவர்களை ஆளுமைமிக்க சிறார்களாக ஆரம்பப் பாடசாலைகளில் இணைய வழிவகுக்கின்றன.

முன்பள்ளிகள் ஆரம்பத்தில் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள், பகல் பராமரிப்பு நிலையங்கள் எனவும் அழைக்கப்பட்டன. ஆனால் முன்பள்ளி எனும் கருத்துரு இவற்றின்றும் வேறுபட்டது. முன்பள்ளிகளில் பிள்ளைகளிடையே உடல், உள, மனவெழுச்சித் திறன்களும் பாதுகாப் புணர்வும் விருத்தி செய்யப்படுவதுடன் பிள்ளைகள் எதிர்காலத்தில் எவ்வாறு கற்றலை மேற்கொள்ளல் என்பதற்கான அதாவது எவ்வாறு கற்றல் என்பதற்கான திறன்களும் விருத்தி செய்யப்படும். பிள்ளை தனது முதல் 5 வருடங்கள் முடிவுறும் நிலையில் தனது வாழ்நாள் முழுமைக்குமான கற்றலுக்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொண்டு முழுமையான உயர்தரமான முன்பள்ளிக் கல்வியை பெற்ற பிள்ளையானது பாடசாலையில் விருப்புடன் பிரவேசிப்பதுடன் பின்வரும் இயல்புகளையும் கொண்டிருக்கும்.

- ❖ ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் நல்ல சுமுகமான ஆரோக்கிய மான இடைத் தொடர்புகளைப் பேணும்.
- ❖ அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவுத் திறன்களைப் பெற்றிருக்கும்.
- ❖ நல்ல செவிமடுப்பாளருக்குரிய இயல்புகளைப் பெற்றிருக்கும்.

❖ எவ்வாறு சிந்திப்பது, எவ்வாறு பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பன தொடர்பான அடிப்படை விளக்கம் பெற்றிருக்கும்.

❖ தனியாளாக, சோடிகளாக, குழுக்களாக செயற்படுவதற்கான தகைமை களைக் கொண்டிருக்கும்.

❖ இசை, நடனம், நாடகம் என்பவற்றில் பங்குபற்றுவதில் ஆர்வத்தை வெளிக்காட்டும்.

மொத்தத்தில் ஒரு சுறுசுறுப்பான, ஆர்வமிக்க, முன்வருகின்ற ஏனையோரது கற்றலுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் ஒத்துழைத்துக் கற்கின்ற பிள்ளையாகக் காணப்படும்.

இத்தகையை இயலுமைகளைக் கொண்ட பிள்ளைகளைத் தயார்ப் படுத்துவதில் விளையாட்டுக்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

## விளையாட்டும் பிள்ளையின் இயல்பும்

விளையாடுதல் உலகம் முழுவதிலும் உள்ள பிள்ளைகளின் பொதுவான இயல்பாகும். பொம்மைகள் போன்ற விளையாட்டுச் சாதனங்கள் இல்லாவிடத்தும் அவர்கள் விளையாடுவர். வீட்டிற்கு வெளியில், வெளிப்புறத்தில் சென்று விளையாட முடியாத பிள்ளைகளுக்கு கரண்டி,பேனை,பென்சில் போன்ற எல்லாப் பொருள்களும் விளையாட்டுப் பொருளாக மாறும். கிராமப் புறப் பிள்ளைகளுக்கு கல், மண், தடி, இலை, பூக்கள் என சூழலில் கிடைக்கக்கூடிய அத்தனை பொருள்களும் விளையாட்டுப் பொருட்களாக மாறும். நடத்தல், ஓடுதல், துரத்திப்பிடித்தல் போலச் செய்தல் முதலான உடலசைவு விளையாட்டுகளிலும் ஈடுபடுவர். இவை பிள்ளைகளின் உடல், உள, சமூக மனவெழுச்சி மற்றும் நுண்ணறிவுத் திறன்களோடு கூடிய முழுமையான விருத்திக்கு அடிப்படை என்பதால் UNHCR *(1989)* "விளையாட்டு ஒவ்வொரு சிறாரதும் அடிப்படை உரிமையாகும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுயமான விளையாட்டுக்கள்

இத்தகைய விளையாட்டுக்கள் பிள்ளைகளால் தேர்ந்தெடுக்கப்படும். விளையாட விருப்பமில்லாத நிலையில் பிள்ளையொன்று மற்றவர்களின்

வற்புறுத்தலின் பேரில் விளையாட்டில் பங்குபற்றுமாயின் அப்பிள்ளை அதனை விளையாட்டாகக் கருதாது.

விளையாட்டு மகிழ்ச்சிக்குரியது. விளையாட்டில் அப்போதைக்கு ஈடுபட முடியாத பிள்ளைகூட மற்றவர்கள் விளையாடுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடையும். விளையாட்டின் ஊடாக சிறு பிள்ளைகள் உள்ளார்ந்த ஊக்கலைப் பெறுவர். இங்கு வெளியாரது பாரட்டுக்களோ, கைதட்டலோ எதிர்பார்க்கப்படுவதில்லை.

விளையாட்டின் போது செயல்முறை, செயலொழுங்குகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும். முடிவு தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது. உடலும் மனதும் ஒன்றிணைந்து செயற்படுவதால் பிள்ளை சுறுசுறுப்பாக பங்குபற்றும் இது எழுத்தறிவுடன் தொடர்புடையதல்ல. ஆனால் என்னால் முடியும் என்ற நம்பிக்கையை பிள்ளையிடம் ஏற்படுத்தும். பிள்ளைகளது தேர்ச்சிகள் இயலுமைகளை விருத்தி செய்து அவர்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும்.

## வழிகாட்டப்பட்ட விளையாட்டுக்கள்

சமூக இடைத்தொடர்புகள் ஊடான கற்றல் அணுகுமுறையாக வழிகாட்டப்பட்ட விளையாட்டுக்கள் கொள்ளப்படுகின்றன. வளர்ந்தோரால் ஆக்கப்பட்ட, வடிவமைக்கப்பட்ட சூழலில் பிள்ளைகள் விளையாடுவதன் ஊடாக கற்கிறோம் என்று அறியாமல் பிள்ளைகள் நோக்குடைக் கற்றலில் ஈடுபடுவர். வளர்ந்தோர் இவ்விளையாட்டுகளை கல்வி நோக்கங்கள், பிள்ளை விருத்திப் பருவங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வடிவமைப்பர்.

ஆரம்ப நிலையில் பிள்ளைகளின் அனுபவங்களுக்கு ஏற்ப விளையாடுவதற்கு தேவையான பொருட்கள் சாதனங்களை வழங்குவதன் ஊடாக பிள்ளை விளையாட்டில் ஆர்வமாக ஈடுபடக்கூடிய நிலையை உருவாக்குதல் வேண்டும். பிள்ளை விளையாடும் போது அடுத்தபடி என்ன எனத் தெரியாத நிலையில் அவர்களுக்கு வேண்டிய துணைக்கட்டு அமைப்போராக வளர்ந்தோர் செயற்படல் வேண்டும். இவ்வாறாக விளையாட்டு செயற்பாடுகளின் போது...

❖ தாமும் ஒரு பிள்ளையாக மாறி அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதன் ஊடாக

❖ சிந்திப்பதற்கு இடமளிக்கும் வகையிலான வினாக்களை வினாவுதல் ஊடாக

❖ பிள்ளைகள் புத்தாக்க வழிகளில் விளையாடும் போது அதனை எடுத்துச் சொல்லி பாராட்டுதல் ஊடாக

பிள்ளைகள் கற்றலை நோக்கிய விளையாட்டுகளில் ஈடுபட ஊக்கமளித்தல் வேண்டும்

## வழிகாட்டப்பட்ட விளையாட்டு வகைகள்...

### 01) பொருட்கள் உடனான விளையாட்டு

பிள்ளைகள் பொருட்களைப் பயன்படுத்தி விளையாடுவதற்கான சூழலை உருவாக்கலும் படிமுறைச் செயற்பாடுகள் ஊடாக தேர்ச்சி நோக்கி நகர்த்தலும்.

உதாரணம்: பந்து விளையாட்டு.

i) ஆரம்பத்தில் இலக்கற்ற நிலையில் பந்தை எறிந்து விளையாடல்.

ii) ஒரு குறித்த இலக்கை நோக்கி பந்தை எறிந்து விளையாடல்.

- ❖ பெரிதான ஒரு சுவரை நோக்கி எறிதல்
- ❖ ஒரு பெரிய மரத்தின் அடிமரப்பகுதியை நோக்கி
- ❖ சுவரில் புள்ளியிடப்பட்ட பகுதியை நோக்கி
- ❖ ஒருவர் எறிய இன்னொருவர் பிடிக்கும் படியாக எறிதல்.

இவ்வாறு பந்தை இலக்கை நோக்கி எறியவும் பிடிக்கவும் தேர்ச்சி பெற்ற பிள்ளை பின்னர் வட்டத்தின் நடுவில் நின்று பந்து பரிமாறல் விளையாட்டில் ஈடுபடும்.

## 02) பொருட்களைக் கொண்டு வடிவம் ஆக்கும் விளையாட்டு

❖ கட்டிடத் துண்டங்கள் (Building Blocks) உடனான விளையாட்டு



❖ தளவுருக்களைக் கொண்டு உருக்கள் ஆக்குதல்

உதாரணம்: வீடு

முதலில் பொருத்தமான பாகங்களை வரையப்பட்ட வீட்டின் மீது வைத்தல்.



பின்னர் சுயமாக சிந்தித்து ஆக்குதல்.

❖ பகுதிகளைக் கொண்டு முழுமையான உருவம் ஆக்கல்.
வேர், தண்டு, கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள் என்பவற்றை முன் அனுபவத்துடன் தொடர்புபடுத்தி முழுமையான மரம் ஆக்கல்.

❖ பின்னர் வேறுபட்ட மரங்களை ஆக்கல்.
வாழை, மா, பலா

## 03) போலச் செய்தல் தொடர்பான விளையாட்டுக்கள்

1) பிள்ளைகள் குழந்தைப்பருவத்திலேயே இத்தகைய விளையாட்டு களில் ஈடுபடுதலில் ஆர்வம் காட்டுவர். உதாரணமாக குழந்தைப் பருவத்தில் தவழ்ந்து சென்று மாடுபோல் மற்றவர்கள் மீது முட்டுதல், நாய், பூனை போல் நடத்தல், ஒலி எழுப்புதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

2) பொருட்கள், ஏனைய சாதனங்களைப் பயன்படுத்தி விளையாடல்.

- ❖ பப்பாசி இலைத்தண்டை புல்லாங்குழல் ஆகப் பயன்படுத்துதல்.
- ❖ இலைகளை ஊதுகுழலாகப் பயன்படுத்துதல்.
- ❖ வாழைப்பழத்தை தொலைபேசியாகப் பயன்படுத்தல்.

ஆனால் இவ்வாறு பயன்படுத்தும் பொருடகளின் இயல்பு இவர்களுக்கு தெரியமாட்டாது. உதாரணமாக கடதாசியில் செய்யப்பட்ட கப்பலின் இயல்பு தெரியாமல் அதனை நீரில் அமிழ்த்துவர். சொரி மணலால் செய்யப்பட்ட பானை ஒன்றினுள் நீரை ஊற்றுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

3) தாமே கற்பனை பாத்திரங்களை ஆக்குதல்
உதாரணம்: தோட்டக்காரன், ஆசிரியர், வைத்தியர், பொலிஸ்



இத்தகைய விளையாட்டுகளின் ஊடாக பிள்ளையானது
"அறிவுசார், சமூகம் சார், மனவெழுச்சி சார்
திறன்களை விருத்தி செய்யும்" - பியாஜே -

விளையாட்டானது பிள்ளையை சுய கட்டுப்பாட்டுக்கும் சுய ஒழுங்கிற்கும் இட்டுச் செல்வதால் அது பிள்ளை விருத்திக்கான காரணி களில் தலையானதாக அமைகின்றது என விகொற்ஸ்கி கருதுகின்றார்.

## விளையாட்டுக்களை பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்

சக பிள்ளைகளோடும் நண்பர்களுடனும் வளர்ந்தோருடனும் இணைந்து விளையாடும் போது சிக்கலான இடைத் தொடர்புகளைக் கற்றுக் கொள்கிறது.

இணைந்து விளையாடும் போது மற்றவர்களோடு ஏற்படும் முரன்பாடுகள் பின்னர் சமரசம் ஆகும் தன்மை ஊடாகவும் பிள்ளையானது தன்னுடைய எண்ணங்கள், விருப்பங்கள், ஆர்வங்களைப் போல் மற்றவர்களுடைய எண்ணங்கள், விருப்பங்கள், ஆர்வங்கள், அமையா என்பதை புரிந்து கொள்ளும். இதனூடாக சூழலின் நிலைமைக்கு ஏற்ப இயைபாக்கமடையும் சமூகமயமாதல் செயற்பாடு பிள்ளைக்கு இலகுவாகும். மற்றும் இன்னொரு பாத்திரமாக மாறும் போது உதாரணமாக ஒரு ஆசிரியராக மாறும் போது ஆசிரியர் ஒருவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான சமூக நியமங்களையும் கற்றுக் கொள்கிறது.

மன அழுத்தத்திற்கு உள்ளான, மனவெழுச்சி சமநிலையற்ற பிள்ளை ஒன்று ஒரு குறிப்பிட்ட பாத்திரமாக மாறி சத்தமிட்டு அழும் போது, சிரிக்கும் போது அழுத்தங்கள் குறையும். மனவெழுச்சி சமநிலை ஏற்படும்.

ஏறுதல், நடத்தல், பாய்தல், கட்டங்களுக்குள் பாய்தல், தடி ஊன்றிப் பாய்தல் போன்றவற்றின் ஊடாக உடலியக்கச் சமநிலை ஏற்படும்.

விளையாட்டிற்கான வழிகாட்டலும் வசதிப்படுத்தலும் தொடர்பில் ஆசிரியரின் பாங்கு

“பிள்ளைகள் விளையாடும் போது அவர்களது நடத்தைப் பாங்குகளை நெறிப்படுத்தும் வகையிலும் வளர்ந்தோர் துணைக்கட்டு அமைக்கும் போதும் பிள்ளைகளது விளையாட்டு உயர்தரமாக இருக்கும். கற்றலும் அங்கு இடம் பெறும்” - விகொற்ஸ்கி -



- ❖ விளையாட்டுச் செயற்பாடுகளின் போது அருகிலிருந்து பார்த்து, அவதானித்து தொடர்ந்து விளையாடுவதற்கு ஊக்கமளித்தல்.

- ❖ பிள்ளைகளோடு இணைந்து தாமும் ஒருவராக விளையாடலும் தேவையானபோது அபிப்பிராயம் தெரிவித்து தொடர்ந்து விளையாட ஊக்கமளித்தலும்.

- ❖ புதிய அணுகுமுறைகள், உள்ளடக்கங்களை அறிமுகம் செய்வதன் ஊடாக வழிகாட்டல். விளையாட்டு தரம் மிக்கதாக அமையவும் பிள்ளைகள் ஆர்வத்துடன் சிந்தித்து விளையாடவும் இவ்வழிகாட்டல் உதவும்.

- ❖ மேலும் பிள்ளையின் வாழ்வுக்காலம் முழுமைக்குமாக கற்றலுக்கான அடிப்படையை வழங்குவதாக விளையாட்டுச் செயற்பாடு அமையும்.

தொகுத்து நோக்கின் முன்பள்ளிப் பிள்ளைகளுக்குப் பொருத்தமான கற்றல் உள்ளடக்கத்தை விளையாட்டுச் செயற்பாடுகள் ஊடாகக் கற்பதற்கு இடமளிக்கும் வகையிலான முன்பள்ளிச் சூழல் எல்லாப்பிள்ளைகளுக்கும் தேவை. விளையாட்டு மூலமான அர்த்தமுள்ள கற்றலுக்கு பதிலாக மேற்கொள்ளப்படும் Drill and Kill activities பிள்ளைகளிடையே உடல், உள சோர்வை ஏற்ப்படுத்தும்.

எனவே விளையாட்டுடன் கூடிய கற்றலானது ஒத்துழைத்துக் கற்றல், தொடர்பு காணல், எண்ணக்கருவாக்கஞ் செய்தல், தர்க்கரீதியான சிந்தித்தல், பிரச்சனை தீர்த்தல், புத்தாக்கத்திறன், சுயஉறுதிப்பாடு என்பவற்றை விருத்தி செய்வதுடன் மொழி, கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் முதலான பாடங்களைக் கற்பதற்கான அடிப்படைத் திறன்களையும் பெற்றுக் கொள்ள உதவுவதால் முன்பள்ளிகளில் விளையாட்டுடன் கூடிய கற்றலை ஒரு பிரதான முறையியல் ஆகப் பயன்படுத்தல் வேண்டும்.

## உசாத்துணைகள்:

1) லியோ மார்கா ஆச்சிரமம் (2000), முன்பள்ளி ஆசிரியர் கையேடு, லியோ மார்கா பதிப்பகம், மேட்டுப்பாளையம்.

2) Hathy Hirsh, A Mandate for playful Learning www. researchconnections.org/files../KathyHirsh - Pas.

3) Lisa.K, Jane.K, Effective Preschool Curricula and Teaching Strategies, http://www.oect.org/publications/pdf/text 668pdf.

4) New Jersey State Department of Education, preschool teaching and Learning, http://www.nj.gov.education/guide/standared.pdf

5) Rachel. E.W Thhe, Power of the play - A Research summary on play and learning. www.earlychildhoodwebinars.com/.2004



# முன்பள்ளிப்பராய கல்வியும் நவீன ஒன்றிணைந்த அணுகுமுறைப் பிரயோகங்களும்

**கலாநிதி பா. தனபாலன்**
**நிபுணத்துவ ஆலோசகர்,**
**கல்வியமைச்சு – பத்திரமுல்ல.**

மனித வாழ்க்கைக் காலத்தில் மிக முக்கியமான பருவம் முன்பள்ளிப்பருவமாகும். இன்றைய சிறார்கள்தான் நாளைய எம் சமுதாயத்தின் பிரஜைகள். எனவே அவர்களது ஆரோக்கியத்திலும் கல்வியிலும்அக்கறை செலுத்த வேண்டியது எம் எல்லோரதும் கடமையாகும். நின்று நிலைக்கக் கூடிய, ஆரோக்கியமான வருங்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியதுமான சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு முன்பிள்ளைப்பருவ நவீன கல்விப் பிரயோகங்களை அனைவரும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இந்நவீன கல்விப் பிரயோகத்தில் ஒன்றினைந்த கற்றல் கற்ப்பித்தல் அணுகுமுறை இன்று உலகளாவிய ரீதியல் முதன்மை பெறுகின்றது.

முன்பள்ளிச் சிறார்களுடைய மூளை ஒருங்கிணைந்த வகையில் பாடங்களை உள்வாங்கும் ஆற்றலுடையது. இதற்கு ஆசிரியர்கள் முழுமையான பயிற்சியைப் பெறவேண்டியது முன்னிபந்தனையாகவுள்ளது. ஆசிரியர்களுக்கும் தனித்தனியான விளையாட்டு செயற்பாடுகள், ஆடல் பாடல்கள் மூலம் பாடங்களைக் கற்ப்பிப்பது சிரமமானது, பொருத்தமற்றது. அதற்குப் பதிலாகத் தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்களில் அல்லது சுருக்கமான ஆய்வுப் பொருள்களில், விடயங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் செயற்பாடுகளை அமைத்துச் செயற்படுவது இரட்டிப்புப் பலனைத்தரும்.

ஒன்றிணைப்பானது தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்களில் அல்லது ஆய்வுப் பொருள் முன்பள்ளிச் சிறார்களுக்குப் பொருத்தமானதாகவும். சிறார்களின் ஆர்வத்தை தூண்டுவதாயும் அமையப்பெறுவது முக்கியம். சுற்றாடலை மையமாகக் கொண்டு பெறப்பட்ட சரியான அவதானங்களின் படி “விளையாடுவோம் கற்போம்” என்ற ஆசிரியர் வள வழிகாட்டியின்படி ஒன்றிணைத்தல் ஒழுங்கமைக்கப்படவேண்டும். இதில் கற்றல் - கற்ப்பித்தல் சாதனங்கள் முதன்மை பெறுகின்றன.

## ஒன்றிணைந்த பாட எண்ணக்கரு




இவ்வாறான ஒன்றிணைந்த பாட எண்ணக்கருக்களை புரிந்து கொண்டு சுற்றாடல் பாட கருப்பொருட்களான எமது வீடு, எமது முன்பள்ளி, எமது சுற்றாடல், சந்தை, பழங்கள், காய்கறிகள், விழாக்கள், போக்குவரத்து, பகல் இரவு, நண்பர்கள், விலங்குகள் போன்ற கருப்பொருட்களை மையமாக வைத்து நெகிழ்ச்சியான முறையில் பாடங்களை ஒருங்கிணைத்து ஆசிரியர்கள் கற்பித்தலை முன்னெடுக்க வேண்டும். ஒவ்வொரு கருப்பொருளின் கீழும் அனைத்துப் பாடப்பரப்புக்களுக்கருமான செயற்பாடுகளை உள்ளடக்குவது சிரமமாகவும் இருக்கலாம். எனினும் கூட கருப்பொருட்களை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் முடிந்த அளவு செயற்பாடுகளை ஆசிரியர் சேர்த்துக் கொள்ளலாம். இதற்காக ஆசிரியர் களுக்குப் பொருத்தான செயலமர்வுகள் மாகாண மட்டத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் எல்லா ஆசிரியர்களும் பங்கு கொள்ள வேண்டும்.

**ஒன்றிணைந்த அணுகுமுறையை ஆசிரியர் பிரயோகிக்கும் போது**

01) பிள்ளைகள் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபாட்டுடன் ஆர்வமாகக் கற்பார்கள்.

02) தேவையான பொருட்களை முன்கூட்டியே ஆசிரியர் சூழலில் இருந்து பெற்றுக் கொள்ளும் திறனைக் கொண்டிருக்க வேண்டும். இதற்குப் பிள்ளைகளின் உதவிகளையும் பெறமுடியும். உதாரணம்: கருப்பொருள் - சந்தை.

03) குழுவாக சிறார்கள் தாம்வேலை செய்யும் போது தம்மிடையேயும் சம வயதுக் குழு சார்பில் இயல்பாக எல்லோரும் ஈடுபடுவார்கள்.

04) ஆசிரியர் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சிறார்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

05) சிறார்களின் ஆக்கச் செயற்பாடுகளைப் பெற்றோர்களுக்கு காண்ப்பிக்க வேண்டும்.

06) சிறார்களின் ஆர்வம் குறைந்தால் செயற்பாடுகளை மாற்றி அவர்களுக்கு விருப்பமான செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும்.

07) பெற்றோர்களுடன் பொருத்தமான தொடர்புகளை பேண வேண்டும். சிறார்களின் ஒருங்கிணைந்த கற்றல் செயன்முறை, பாதுகாப்பு,ஆரோக்கியம் தொடர்பாக பெற்றோருக்கு அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்.

08) ஆசிரியர்கள் பெறுமதியற்ற, வீசி எறியும் கட்டுமாணக் கட்டைகள், நீர்தாங்கிகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், மண், பாவைப்பிள்ளைகள், வெற்றுப்பிளாஸ்ரிக் பாத்திரங்கள், விதைகள், வெற்றுப்பைகள், பொலித்தீன்பைகள் என்பவற்றை கற்ப்பித்தலில் பயன்படுத்தவேண்டும்.

இவ்வகையில் முன்பள்ளி ஆசிரியர்களுடைய வகிபங்கு மிக முக்கியமானதாகவுள்ளது. குடும்பம் என்ற அமைப்பிற்கு வெளியே பிள்ளை தொடர்புறும் முதலாவது நபராக ஆசிரியர் இருப்பதால் அவர் அப்பிள்ளையின் மிக அன்பிற்கு உரித்துடையவராகின்றார். அன்பு, ஆதரவு,

ஏற்றுக்கொள்ளும் தன்மை, ஒத்துழைப்பு மற்றும் போசாக்கு குறித்த கவனம் போன்றவற்றை வழங்குவதால் ஒன்றிணைந்த கற்றல் - கற்ப்பித்தல் வலுவாக விருத்தி அடையும். ஆசிரியரின் மென்மையான போக்கு, பிரியமான பேச்சு, ஒவ்வொரு பிள்ளை கூறுவதையும் கேட்டு செயற்படும் தன்மை, பிள்ளைகளின் பெயர் சொல்லி அழைத்தல், மென் தொடுகை பெற்றோர்களுடன் லாவகரமாக இணைந்து செயலாற்றுவதன் மூலம் ஒன்றிணைந்த அணுகு முறையை வெற்றி கொள்ள முடியும்.

ஒன்றிணைந்த கற்றலின் போது ஆசிரியர் அனுசரனையாளராக இருந்து தருணத்திற்கு ஏற்ப செயற்பாடுகளை மாற்றியமைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் பிள்ளையின் கற்றல் ஆர்வம் தூண்டப்படும். சாதகமான இடைவினைகள் மற்றும் திறந்த முறை வினாக்கள் என்பவற்றின் ஊடாக ஆக்கத்திறன், புதிய கண்டுபிடிப்புக்களை நோக்கிப் பிள்ளையை வழி நடாத்த வேண்டும். கற்றல் விளையாட்டுச் செயற்பாடுகளை முன்பள்ளியின் உள்ளே அல்லது வெளியே களங்களில் பிள்ளையின் விருப்பத்திற்கு அமையத் தெரிவு செய்தல் முக்கியமானது.

## ஒன்றிணைந்த அணுகுமுறையின் வெற்றிக்கு

01) பிள்ளையின் விருப்புக்களைத் தெரிந்து கொண்ட பின்னரே தலைப்புக் களையோ அல்லது ஆய்வுப் பொருளையோ தீர்மானிக்க வேண்டும்.

02) உடல், உள்ளம், அறிவு, ஆக்கம், அழகியல், சமூகஉறவு, குழுச்செயற் பாடுகள், சித்திர ஆக்கங்கள் போன்றவற்றை மேற்கொள்ளல்.

03) ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறை வேடிக்கை நிறைந்தவை. பிள்ளைகளைக் களிப்படையச் செய்யும். அவர்கள் ஆராய்ந்து, பரிசோதித்து, கதைத்து, புதிய சமூகத் தேர்ச்சிகளை விருத்தி செய்து தம்மை சுற்றியுள்ள உலகை புரிந்து கொள்ள சந்தர்பங்களை வழங்கும்.

04) வயது வேறுபாடு இருப்பினும், தனியாள் வேறுபாடுகள் இருப்பினும் கலப்புக் குழுக்களாக இருப்பினும் ஒன்றிணைந்த அணுகுமுறை இவர்களை ஒருமுகப்படுத்தும்.

05) பிள்ளைகளை அவர்களுடைய குடும்பத்தவர், ஆசிரியர்கள், மற்றும் சமூகத்தில் தொடர்புறுத்திச் சற்று விரிவான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்ய இவை உதவும்.

இவ்வகையில் எமது முன்பள்ளிகளில் ஒன்றிணைந்த அணுகுமுறையிலான கற்றல் கற்ப்பித்தல் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை. இதன் பயன்களை எமது முன்பள்ளிச் சிறார்கள் முழுமையாக அனுபவிக்கவில்லை. இந்த நிலையை மாற்ற முன்பள்ளி முகாமையாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து செயற்படவேண்டும். இதற்கான ஏதுக்களை வலயக்கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வித்திணைக்களம் ஒருங்கிணைந்து வழங்க வேண்டும். ஆசிரியர்களுக்கு முழுமையான பயிற்சிகளைத் தொடர்ச்சியாக வழங்க வேண்டும். இப்பயிற்சிகளில் பெற்றோர்களும் இணைக்கப்படவேண்டும். இவ்வாறான ஒரு ஆக்க பூர்வமான சூழலில் முன்பள்ளிகளின் கற்றல் - கற்பித்தலை வினைத் திறனாக்கும் ஒரு பொறி முறையாக இவ் ஒன்றிணைந்த கற்றல் கற்ப்பித்தல் அணுகுமுறை வழி செய்கின்றது.



# முன்பள்ளிகளின் விளைதிறனுள்ள செயற்பாட்டிற்கான பொதுமைப்படுத்தப்பட்ட குழந்தைக் கலைத்திட்டத்தின் தேவை


**திரு. பொ. சற்குணநாதன்**
B.Sc (Hons) Agri, PGDE (Merit), M.Ed
**சிரேஸ்ட விரிவுரையாளர்** (SLTES)
**கோப்பாய் ஆசிரியர்கலாசாலை**


*"பிள்ளைகள் ஒவ்வொருவரும் பல்வேறு வகைகளில் வேறுபட்டதும் தமக்கு இயற்கையாகவே உரிய விசேட இயல்புகளுடனும் காணப்படுகின்றனர். எனவே இவர்களுக்கு பொதுவாக கற்ப்பிப்பது பயனற்றது."*

- ஜீன் பியாஜே -

## அறிமுகம்

உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை ஐக்கியநாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கின்றது. இதற்கான காரணம் பின்லாந்தில் ஏழுவயதில் தான் ஒரு குழந்தை பாடசாலைக்கு செல்லத் தொடங்குகின்றது. அது வரைக்கும் முன்பள்ளி போன்ற முறைசார் கல்வி ஏற்பாடு எதுவும் அந் நாட்டில் காணப்படுவதில்லை என்பதை ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆயினும் எந்த நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ் சிறு மூளை தன்னைச் சூழ இருக்கும் புறச்சூழலில் நிகழும் ஒவ்வோர் மாற்றத்தில் இருந்தும் கற்றுக் கொள்கின்றது. இவ்வாறு இயற்கையோடு ஒட்டி உறவாடி மகிழ்வாகக் கற்றுக் கொள்ளும் குழந்தையை வகுப்பறை எனும் சிறைக்குள் தள்ளிவிடுவதால் அறிவு அதீத வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கமுடியாது.

இலங்கையில் தற்போது பொற்றோரைக் கவர்ந்து உள் இழுப்பதற்காக பல்வேறு கவர்ச்சிகரமான பெயர்களில் முன்பள்ளிகள் பட்டிதொட்டி எங்கனும் பணம் சம்பாதிக்கும் நிலையங்களாக உருவெடுத்து வருகின்றன. அண்ணளவான கணக்கெடுப்பு ஒன்றில் சுமார் 14,000 முன்பள்ளி களில் 60,000 க்கும் மேற்பட்ட ஆசிரியைகள் பணிபுரிந்து வருகின்றனர். இவற்றுள் பெரும்பாலானவை தனியாரினாலும் ஏனையவை உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினாலும்

நிர்வகிக்கப்படுகின்றன. குழந்தை ஒன்று தனது மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது வயதுகளில் முன்பள்ளிக்கற்றலில் ஈடுபடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. செழுமையான எதிர்காலவாழ்க்கைக்காக ஆயத்தமாகும் இப்பருவத்தில் குழந்தைகளில் உடல், உளம், ஒழுக்கம், அறநெறி, மனவெழுச்சி போன்ற விருத்திகள் மிகத் தீவிரமாக நடைபெறுவதாக உளவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே இப்பருவப் பிள்ளைகளுக்கு கல்வி போதிப்பதற்கு முன் கூட்டியே நன்கு திட்டமிடப்பட்ட குழந்தைக் கலைத்திட்டமொன்று தேசிய ரீதியில் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவது ஆரோக்கியமானதாக இருக்கும். குழந்தைக் கலைத்திட்டம் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைகளை ஊக்குவித்து உறுதிப்படுத்துவதும், ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதுடன் பூரணமான அறிவு, மனப்பாங்கு, திறன் என்பவை விருத்திபெற உதவுவதாக முன்பள்ளியினுள்ளோ அல்லது வெளியிலேயோ தனியாகவோ அல்லது குழுவாகவோ, ஆசிரியரின் உதவியுடனோ அல்லது இல்லாமலோ குழந்தைகளுக்காக முன்வைக்கப்படும் திட்டமிடப்பட்ட கற்றல் அனுபவங்களாகும்.

**குழந்தைக் கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்கள்**

பதின்மூன்று வருடகால பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான தயார்படுத்தல் மேற்கொள்ளப்படும் இடமே முன்பள்ளிகளாகும். இங்கு இரண்டரை வயதில் இருந்து ஐந்து வயது வரையான காலப்பகுதியை சின்னஞ்சிறார்கள் மகிழ்வாகவும், பயனுள்ள தாகவும் கழிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. துரதிஸ்டவசமாக பாடசாலைக் கல்விக்கான தேசிய கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் முன்பள்ளிகளுக்கான குழந்தைக்கலைத் திட்டம் தேசிய ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட வகையில் வடிவமைக்கப் படாமையை அவதானிக்கலாம். இவ்வாறானதொரு நிலைமையில் பாடசாலைக் கல்வியில் தர உறுதிப்பாட்டை எதிர்பார்க்க முடியாதுள்ளது. எனவே ஒவ்வொரு முன்பள்ளியும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் இயலுமை, இயலாமை மற்றும் ஆர்வங்கள், ஆர்வமின்மை என்பவற்றை அறிந்து அவர்களின் உளக் கொள்ளளவுக்குப்

பொருத்தமானதும் ஏற்புடையதுமான குழந்தைக் கலைத்திட்டமொன்றை வடிவமைத்து முன்பள்ளிகளில் அமுல்படுத்துவது எதிர்கால செயலாற்றல்களுக்கு சிறந்த அடித்தளமாக அமையும்.

முன்பள்ளிப்பருவ குழந்தைகளுக்கான கலைத்திட்டம் என்பது குறிக்கோள்களின் அடிப்படையில் பிள்ளைகளிடம் விரும்பத்தகு மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட அனைத்துக் கற்றல் அனுபவங்களின் தொகுப்பு ஆகும். குறிக்கோள்களை தீர்மானித்தல், அவற்றை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான பாடப் பொருள்களையும், கற்றல் அனுபவங்களையும் தெரிவு செய்தல், தேரந்தெடுத்த உள்ளடக்கத்தை வரிசைப்படுத்தி ஒழுங்கமைத்தல், (வடிவமைத்தல்) இவ்வாறு வடிவமைக்கப்பட்ட கலைத்திட்டத்ததை செயற்படுத்தல் மற்றும் மதிப்பிடுதல் போன்ற படிமுறைகள் பின்பற்றப்படுகின்றது. அந்த வகையில் முன்பள்ளிக்கான குழந்தைக் கலைத்திட்டம் கீழ் கண்ட குறிக்கோள்களை நிறைவு செய்யும் விதமாக உருவாக்கப்படுவது முன்பள்ளிகளை விளைதிறன் மிக்கதாக்கும் என எதிர்பார்க்கலாம்.

1) உடல் நலப் பழக்கவழக்கங்கள்
2) விரும்பத்தகு சமூக மனப்பான்மைகள்
3) மனவெழுச்சி, முதிர்ச்சி
4) அழகுனர் ஆற்றல்
5) அறிந்து கொள்ளும் ஆற்றல்
6) சுய சார்பும் படைப்பாற்றலும்
7) எண்ணத்தை வெளிப்படுத்தும் திறன்
8) உடலியக்கத்திறன்

போன்ற எட்டுக் குறிக்கோள்களை தேசிய ரீதியில் காட்டாயப்படுத்தினாலும் இக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான பொருத்தமான பாடப் பொருள்களையும் கற்றல் அனுபவங்களையும் பிராந்திய ரீதியில் தெரிவு செய்வதற்கான சுதந்திரம் வழங்கப்படுவது செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்கும்.

## நடத்தை சார் குறிக்கோள்களின் உருவாக்கம்

பிள்ளைகளது நடத்தைக் கோலங்களை விருத்திசெய்வதற்கு தேவையான முழுமையான நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியதாக நிறுவனத்தின் நோக்கம் வரையறை செய்யப்படுகின்றது. நோக்கங்கள் என்பது மிக விரிவானதும் நீண்ட காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க தொன்றாகும். ஒவ்வொரு முன்பள்ளிக்கும் பொதுமைப்படுத்தப்பட்ட தேசிய ரீதியிலான நோக்கம் உள்ளது. அவ்வாறான நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு பல குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்ள வேண்டியிருக்கின்றது. நோக்கம் ஒன்றின் ஒரு பகுதியே குறிக்கோள் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இது குறுகியதாகவும் குறுங்காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கும். நோக்கத்தைப் போலன்றி குறிக்கோள் அடையப்படுகின்றதா என்பதை அவதானிக்கத் தக்கதாக இருக்கும். இதற்காக பொருத்தமான கணிப்பீட்டுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுவாக பிள்ளைகளின் வயது மட்டத்திற்கு பொருத்தமானதும் குறிப்பானதும் அளக்கக் கூடியதுமான நியதிகளைக் கொண்ட செவ்வைபார்த்தல் பட்டியல் மூலமாக குறிக்கோள் அடையப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். உதாரணமாக முன்பள்ளிகளில் "அன்றாட செயற்பாடுகளுக்கு தேவையான தொடர்பாடல் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்" எனும் குறிக்கோள், தேவைக்கு ஏற்ப பலசிறப்புக் குறிக்கோள்களாகப் பகுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நேர வரையறையினுள் நிறைவேற்றத்தக்க, குறித்த தொடர்பாடல் திறனை மாத்திரம் பிள்ளைகளில் விருத்தி செய்து கொள்ள முடியும்.

முன்பள்ளிப்பருவத்தில் குழந்தைகளில் பிரதானமாக தொடர்பாடல் பற்றிய தகைமைகளை வளர்த்தெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றது. தொலைக்காட்சி சேவை, வானொலிச்சேவை, கூட்டுக்குடும்ப அங்கத்தவர்கள் போன்ற வளங்களைக் கொண்டுள்ள வீடுகளில் இருந்து வரும் பிள்ளைகள் சிறந்த மொழியாற்றலைக் கொண்டிருப்பார்கள். எனினும்

கவனமாகச் செவிமடுக்கச் செய்வதன் ஊடாக புதிய புதிய சொற்களை மூளையில் பதிவு செய்வதனால் தெளிவாக பேசுவதற்கு முயற்சிப்பார்கள். இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. அத்துடன் தெளிவாகவும் செம்மையாகவும் எழுதுவதற்கு எழுத்துப் பயிற்ச்சியை வழங்குவதன் ஊடாக கருத்தறிந்து வாசிக்கும் திறன் வளர்த்தெடுக்கப்படுகின்றது.

பொருள், இடம், காலம் என்பனவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணல், கணித்தல் ஒழுங்குமுறையாக அளத்தல் போன்றவற்றிற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் குழந்தைகளில் எண்ணறிவிற்கான அடித்தளம் இடப்படுகின்றது. அத்துடன் கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறியவும், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தவும், பதிவு செய்யவும் பயிற்சிகள் வழங்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

உண்மை பேசுதல், நேர்மையாக இருத்தல், நேரம் தவறாமை, அன்பு, கருணை உடையவராக இருத்தல், தன்னடக்கம், பொறுமை, கீழ்ப்படிவு போன்ற அறநெறிகளை குழந்தைகள் ஆரம்பத்தில் பெற்ரோர்களினதும், ஆசிரியர்களினதும் நடத்தைகள் மற்றும் மனப்பான்மை களை பாவனை செய்வதன் (போலச் செய்தல்) மூலமாகவே கற்றுக் கொள்கின்றனர். எனவே பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளிடம் எதைச்செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என வழிப்படுத்தலாம். அல்லது நல்ல செய்கைக்கு வெகுமதி, அங்கீகாரம், மெச்சுதல் போன்ற துலங்கல் அல்லது ஒவ்வாச் செயல்களுக்காக வழங்கிவரும் சலுகைகளை அகற்றல். போன்ற செய்கைகள் மூலம் குழந்தைகள் குறித்த ஆளுமைப் பண்புகளுக்கு ஒரு பெறுமதியை வழங்கி ஒழுங்கமைப்பதன் ஊடாக இறுதியில் தமக்கென ஓர் அறநெறிக்கோலத்தை ஆக்கிக் கொள்வார் அல்லது பழக்கமாக்கிக் கொள்வார். இவ்வாறு முன்பள்ளிப் பருவத்தில் குழந்தைகளில் உருவாக்கிய பழக்கங்களே அவர்களின் முதுமைப் பருவம் வரைக்கும் தொடர்ந்து செல்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

## குழந்தைகளும் அறிகைசார் ஆட்சியும்

உளவியலாளர்களின் கருத்துப்படி முன்பள்ளிப்பருவமாகிய மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையான காலப்பகுதியில் புலனுணர்ச்சி இயக்க வளர்ச்சிகள், சமூக மனவெழுச்சிப் பண்புகள், மொழிவளர்ச்சி, உளத்திறன்களின் வளர்ச்சி, அறநெறிவளர்ச்சி, விளையாட்டும் கற்பனையும் போன்ற படிமங்கள் விருத்தியடைய ஆரம்பித்து நிறைவடைகின்றன. குழந்தையொன்று பிறந்த மறுகணமே தனது ஐவகையான புலன் உறுப்புக்களையும் பயன்படுத்தி புறச்சூழலில் உருவாகும் மாற்றங்களை ஒவ்வொருகணமும் உள்வாங்கி மூளையில் பதிவு செய்வதன் மூலம் ஒரு திரளமைப்பை உருவாக்கிக் கொள்கின்றது. குழந்தையைச் சூழ உள்ள புறச் சூழல் மாறும் போது குறித்த திரளமைப்பு எனும் மூளையில் பதிவு செய்யப்பட்ட விடயங்கள் (அறிவு) பெருக்கமடைகின்றது. இச்செயன் முறையானது பிறப்பில் இருந்து ஐந்து வயது வரை மிக வேகமாக நிகழ்வாதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே முன்பள்ளிப் பருவத்தில் பிள்ளைகளுக்கு கவனமாக கற்றல் அனுபவங்களை ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சேகரித்து, சேமித்து வைத்திருக்கும் அறிவுப்பரப்பு பின்நாட்களில் மனவெழுச்சி மற்றும் உள இயக்கம் சார் செயல் ஒழுக்கங்களுக்கு பயன்படுத்தப்படப் போகின்றது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

கிரத்வெல் என்னும் அறிஞரின் கருத்துக்களின் பிரகாரம் குழந்தைகள் தம்மைச்சுற்றி நிகழும் ஒவ்வொரு சம்பவங்களினாலும் தூண்டப்படுகின்றனர். பின்னர் எவ்விதமான சிந்தனையும் இன்றி துலங்கு கின்றனர் (பின்பற்றுவார்கள்) எனவும் பின்னாளில் குறித்த சம்பவத்தை மதிப்பிட்டு அதற்கு ஒரு பெறுமதியை வழங்கி ஒழுங்கமைத்த பின்னர் ஒரு பழக்கமாக்கிக் கொள்கின்றனர் எனவும் கூறுகின்றார். எனவே முன்பள்ளியில் குழந்தைகளிற்காக ஒழுங்கமைக்கப்படும் கற்றல் அனுபவங்களும் கற்பித்தல் முறைகளும் நன்கு திட்டமிடப்படுவதோடு காத்திர மானதாகவும் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### சமூகத்திறன் விருத்தியும் ஊக்கலும்

மூன்று வயது வரை தனிமையாக வீட்டில் விளையாடும் குழந்தைகள் பின்னர் குழுவுணர்ச்சி வளர வளர வேறு குழந்தைகளைத் தேடி வருவர் எனினும் கூட்டுறவு, போட்டி ஆகியன பற்றிய விளக்கம் இருக்காது. ஆயினும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் சமூக வாழ்விற்கு வேண்டிய சமூகத்திறன்களும் வளர சந்தர்ப்பம் உள்ளது என்பதால் அவ்வாறான அனுபவங்களை வழங்குவது பொருத்தமானது. வயது மட்டத்திற்கு பொருத்தமான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்ட விளையாட்டு முற்றம் முன்பள்ளிகளின் தேவையாக உள்ளது. இது இவ்வயதுப் பிள்ளைகளை கிரமமாக விருப்புடன் பள்ளிக்கு வருவிப்பதற்கான உத்தியாகவும் கொள்ளப்படுகின்றது.

ஊக்கல் கோட்பாட்டின் தந்தையான மாஸ்லோ என்பவரின் கருத்தப்படி குழந்தைகளின் தேவைகளிற்கு ஓர் எல்லை என்பது கிடையாது. ஒருதேவையை நிறைவேற்றும் போது இன்னொரு தேவை கிளர்ந் தெழுகின்றது. பசியோடு இருக்கும் குழந்தைக்கு நிறைவான உணவு வழங்கியவுடன் தாயின் அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கிநிற்கும். தாய் அன்பாகவும் ஆதரவாகவும் அணைத்து வளர்க்கும் போது எல்லோரும் தன்னைக்கவனிக்க வேண்டும் என சில செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. இவ்வாறான தேவைகளை நிறைவாக்கும் போது மாத்திரம் குழந்தைகள் தாம் வாழும் சூழலை ஒரு காப்புள்ள இடமாக உணரத் தொடங்கும். தவறும் பட்சத்தில் பய உணர்ச்சிக்கு ஆளாகின்றது இவ்வாறாக வீட்டிலும் முன்பள்ளியிலும் அடிப்படைத்தேவை, அன்புத்தேவை, கணிப்புத்தேவை, காப்புத் தேவை போன்றவற்றை பூரணமாக நிறைவேற்றும் போது குழந்தைகளிடம் உள்ள சுய திறன்கள் வெளிப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகின்றது. அதாவது குழந்தைகளிடம் உள்ள தனித்துவமான ஆற்றல்கள் வெளிப்படுவதோடு அவர்களின் விருப்பத்துக் குரிய இடமாக முன்பள்ளிமாறுவதால் கிரமமாக மகிழ்வுடன் கற்றலுக்காக வருகை தருவார்கள் என எதிர்பார்க்கலாம்.

**எண்ணக்கருவிருத்தியும் மொழிக்குறியீட்டாக்கமும்**

செயல்வடிவபடிநிலையில் இருந்து உளப்படிமவடிவப் படிநிலைக்கும், அதில் இருந்து குறியீட்டு வடிவப்படிநிலைக்கும் பொதுவாக பிள்ளைகள் தாம் உள்வாங்கும் அனுபவங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் என்பது புறூணரின் கருத்தாகும். அதாவது செயல்வடிவப்படிநிலையில் குழந்தைகள் தொழிற்பாட்டின் மூலம் அல்லது உண்மைப்பொருட்களின் மூலம் மாத்திரம் சூழலை விளங்கிக் கொள்கின்றனர். உளப்படிம வடிவப் படிநிலையில் தொழிற்பாடுகள் அல்லது உண்மைப் பொருட்கள் உளப்பாங்குககளாக உருவெடுக்கும் பின்னர் குறியீட்டு வடிவப்படி நிலையில் குழந்தைகள் தாம் பெற்ற அனுபவங்களை மொழிக்குறியீடாக்கும் ஆற்றலைப் பெற்று விடுகின்றனர். உதாரணமாக புகையிரதம் எனும் சொல்லை எழுதக் கற்றுக்கொடுக்க முன்னர் நேரடியாக புகையிரத்தை காணும் அனுபவத்தை வழங்கும் போது அதை உளப்படமாக விருத்தி செய்து மொழிக்குறியீடுகளாக மாற்றிக் கொள்வர்.

பியாஜேயின் சிந்தனை விருத்திக் கொள்கையின் பிரகாரம் முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளில் குறியீட்டினைப் பயன்படுத்தும் திறன் விரைவாக வளர்ச்சியடைந்தாலும் அவர்கள் கையாளும் சொற்களுக்கு சரியான எண்ணக்கருக்களைப் பெற்று இருக்கமாட்டார்கள். எனவே முன்பள்ளிகளில் குழந்தைகளுக்கான உள்ளூர் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து சூழலையும் அங்கு உள்ள பல்வேறு எண்ணக்கருக் களையும் (கடல், மலை, காடு, குளம், மரம், விலங்கு,பறவை) அறிமுகப் படுத்தி உண்மை அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்படுகின்றன.

குழந்தைகள் ஒவ்வொருவரும் தனித்தன்மை பொருந்தியவர் களாகக் காணப்படுவதால் இவர்களுக்கு மரபு ரீதியான வகுப்பறை பொருந்தாது. இது அவர்களின் தனித்தன்மையை முளையிலேயே கிள்ளி விடும் செயலாகும். எனவே ஒவ்வொரு குழந்தையும் தத்தமது இயல்புக்கு ஏற்பவும் தன் வேகத்திற்கு ஏற்பவும் கற்பதற்கு வழியமைத்துக் கொடுக்கப்படுவது பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறு குழந்தைகளின் தனித்துவம் அவர்களுக்குரிய புலன்பயிற்சி மற்றும் கற்பித்தல் சாதனங்கள் முதலியவற்றை முதன்மைப்படுத்தியவர் மொன்ரி சோரி அம்மையார் ஆவார்.

**புரோபலின் குழந்தைப் பூங்கா**

மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரைக்குமான குழந்தைகளுக்குரிய முன்பள்ளிகள் வீட்டுச் சூழலை பிரதிபலிப்பதாக அமைக்கப்படுவதே சிறந்தது. குழந்தைகள் கற்றுக்கொள்ள, உணவு உட்கொள்ள, விளையாட, ஓய்வெடுத்துக் கொள்ள மற்றும் உடல் உழைப்புடன் இணைந்து விளையாடத் தனித்தனி அறைகள் இருத்தல் விரும்பத்தக்கது. திட்டவட்டமான நேர சூசிகை இன்றி ஒவ்வொரு குழந்தையும் தத்தமது விருப்பிற்கேற்ப செயல்களில் ஈடுபடுவதற்கான ஒழுங்கமைப்புக்களை முன்பள்ளிகள் உறுதி செய்து கொள்வது ஆரோக்கியமானது.

பிரெட்ரிக் புரோபல் முன் மொழிந்த குழவிப் பூங்கா முறைமையைப் பின்பற்றி வடிவமைக்கப்பட்ட குழந்தைக் கலைத்திட்டம் பெரும்பாலான முன்பள்ளிகளில் சிறப்பாக அமுல்படுத்தப்படுகின்றது. இங்கு குழந்தைகளின் உடல், உள விருத்தி, ஒழுக்க விருத்தி மற்றும் சமூகவிருத்தி என்பவற்றிற்கான ஏற்பாடுகள் உள்ளன. அதாவது பாடுதல், ஓடியாடி விளையாடுதல், புதிதாக நிர்மானம் செய்தல் (புத்தாக்கம்), குழுவாக சேர்ந்து இயங்குதல், கட்டளைகளுக்குப் பணிதல் முதலியவற்றில் மொழியைப் பயன்படுத்தலும் கருத்துக்களை வெளியிடலும் வளர்ச்சி யடையும். அதேவேளை வண்ணப்பந்துகள், மர உருளைகள், வண்ண வண்ண வடிவங்கள் முதலியவற்றால் பெறப்படும் அனுபவங்கள் எண்ணறிவையும் அழகுணர்ச்சியையும் ஆரம்ப வயதில் இருந்தே வளர்த்தெடுக்க துணைபுரிகின்றன.

முன்பள்ளிப்பருவத்தில் தூண்டல்களுக்கு துலங்கல், பின்னர் துலங்கல்கள் ஒவ்வொன்றிற்கும் பெறுமதி வழங்கப்பட்டு ஒழுங்கமைத்து நடத்தையாக்கம். (பழக்கம்) உருவாக்கப்படுவதால் இப்பருவத்தில் நற்பழக்கவழக்கங்களை குழந்தைகளில் இலகுவாகவும் உறுதியாகவும் விருத்தி செய்ய முடியும். எனவே சரியான பயிற்ச்சியும் பழக்கமும் கட்டாயப்படுத்தப்படுவது சிறந்த பலாபலன்களைப் பெற்றுத்தரும்.

**விளைத்திறன் மிக்க முன்பள்ளி**

நாம் உருவாக்கிக் கொண்ட குறிக்கோள்களை (அறிவு, திறன், மனப்பாங்கு) உயரிய மட்டத்தில் அடையும் முன்பள்ளியானது தன்னை ஒத்த ஏனைய முன்பள்ளிகளுடன் ஒப்பிடுகையில் சமுதாயத்தில் ஓர் உயரிய அங்கீகாரத்தை பெற்று உயரிய கேள்வியுடையதாக மிளிர்வதோடு ஒவ்வொரு நிலைக்குமுரிய தேர்ச்சிகளை அளவு ரீதியிலும் பண்பு ரீதியிலும் விருத்தி செய்து கொள்ளுமாயின் அது விளைதிறன் மிக்க முன்பள்ளி எனக் கருதலாம். இவ்வாறான இலக்கை அடைந்து கொள்ள வேண்டுமெனில் அது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

01) தலைமை ஆசிரியரின் போதனா தலைமைத்துவம் ஆசிரியர் குழாத்துக்கு முழு அளவில் கிடைத்தல்.

02) ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் செயல்ரீதியான ஈடுபாடும்.

03) பிள்ளைகளது நடத்தைமாற்றத்தை நோக்கமாகக் கொண்ட கற்றல் செயன்முறை

04) உயிர் ஓட்டமுள்ள கற்றல் சூழ்நிலை

05) பிள்ளைகள் பூரண அனுபவங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருத்தல்.

06) ஆசிரியருக்கும் பிள்ளைக்கும் இடையிலான தொடர்பாடல் செயன்முறை வலிமையானதாக இருத்தல்.

07) பிள்ளைகள் தொடர்பான செயலடைவுக் கோவைகளை முறையாகப் பேணிவருதல்.

08) பெற்றோர்களின் சிறப்பான உயிரோட்டமான ஈடுபாடு.

09) மகிழ்சிகரமான, சினேகபூர்வமான பிள்ளைநேய முன்பள்ளிச் சூழ்நிலை.

10) கற்றல் செயன்முறை ஆக்க பூர்வமானதாகவும் புதுமைப் பாங்குடைய தாகவும் காணப்படல்.

**நிறைவுரை**

உலகளாவிய ரீதியில் முன்பள்ளிகளின் நோக்கங்கள் பல்வேறு விதமாக வரையறுத்துள்ள போதிலும் இலங்கையைப் பொறுத்தவரையில் பிள்ளைகளை முறையான ஆரம்பக் கல்விக்குத் தயார்ப்படுத்தலே பிரதானமானதாகக் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் முன்பள்ளிகளில் ஆக்கத்திறன், அழகியல், கையாளும் திறன், மொழித்திறன் விருத்தி, கணிதத்திறன் விருத்தி, சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகள் போன்ற பல்வேறு பாடஏற்பாடுகள் முறைசார் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றன. இவ்வாறான முறைசார் குழந்தைக் கலைத்திட்டத்தை செழுமைப்படுத்துவதற்காக முன்பள்ளிகளில் இணைக்கலைத்திட்டம் மற்றும் மறைக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்துவது சிறப்பான விளைவைத்தரும். இதன் மூலம் பிள்ளைகளிடத்தில் அறிவு மாத்திரமன்றி நற்பண்புகள், நன் மனப்பாங்குகள் உயர்மட்ட ஆற்றல்கள், சமநிலை ஆளுமை, மென்திறன்கள், ஒழுக்க விழுமியங்கள், சமயக்கிரியைகளும் விதிமுறைகளும் நற்பழக்க வழக்கங்கள் போன்றவற்றை வளர்சியுறச் செய்யலாம்.

குழந்தைகளை மரபுசார் வகுப்பறையினுள் நீண்ட நேரத்திற்கு அடைத்து வைத்துப் போதிக்கும் வழக்கத்திற்கு மாறாக வகுப்பறைக்கு வெளியே செயற்பட்டு மகிழ்வோம் எனும் விளையாட்டு மூலமான கற்றல், கல்விச் சுற்றுலாக்கள், ஆலயதரிசனம், விளையாட்டு நிகழ்வுகள், வெளிக்கள ஆற்றுகைகள், அரங்க ஆற்றுகைகள் போன்ற இன்னோரன்ன புதிய உத்திகளை பெற்றோருடன் இணைந்ததாக பயன்படுத்தும் போது பிள்ளைகள் வருடம் முழுவதும் சுறுசுறுப்பாகவும் ஆர்வத்தோடும் கற்றலில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

பேராசிரியர் ஹொவாட் காட்ணரின் பல் நுண்மதிக்கொள்கைப்படி ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போதே ஒன்பது வகையான நுண்மதிகளையும் கொண்டுள்ளது. இருந்த போதிலும் வீட்டுச்சூழல் காரணமாக எல்லாக்குழந்தைகளிடமும் சம அளவில் அவை விருத்தியடைந்திருப்பதில்லை எனினும் பரம்பரைக் காரணிகளின் செல்வாக்கினால் ஒவ்வொரு குழந்தையும் தனக்கே உரித்தான குறித்த சில

நுண்மதிகளை உயர் மட்டத்தில் கொண்டிருக்கும். எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் பிள்ளையில் ஆதிக்கம் செலுத்தும் நுண்மதியை இனங்கண்டு அதற்கேற்ப கற்றல் அனுபவங்களையும் ஆற்றுகைச் சந்தர்ப்பங்களையும் வழங்கி கற்பிப்பார்களாயின் முன்பள்ளிப் பருவத்திலிருந்தே பிள்ளையின் சுயதிறன் விருத்திக்கு பலமான அத்திபாரம் இட்டோம் என்ற உளத்திருப்தியுடன் பணியைத் தொடரலாம்.

## உசாத்துணை நூல்கள்


ச. ஜெயராசா (2005) குழந்தை உளவியலும் கல்வியும். பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 13)

ச. முத்துலிங்கம் (2002) கல்வி உளவியலும் (லங்கா புத்தகசாலை, கொழும்பு - 12)

ப. ரவி, ச. கௌமாரீஸ்வரி (2013) கல்விப்புதுமைகளும் கலைத்திட்ட வளர்ச்சியும் (சாரதா பதிப்பகம் சென்னை - 600 014)

Hand book on PRINCIPLES OF EDUCATION Ministry of educations & higher Education.



# மழலைகளின் வளர்ச்சியில் கணினியின் செல்வாக்கு

**திரு. பா. சசிகுமார்**
ICT **ஆசிரியர்,**
**யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

கணினியானது இன்று பல்துறைகளிலும் எட்டமுடியாத அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. இனிவரும் காலங்களிலும் கணினி அடையப்போகின்ற வளர்ச்சிக் கட்டங்களை எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு பாரிய வளர்ச்சியினை அடையப் போகின்றது. தற்போது வாழ்ந்து கொண்டு இருப்பவர்களில் மூன்று வகையானவர்கள் கணினி அறிவினை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றனர். கணினி வளர்ச்சியடையாத காலத்தில் பிறந்து தற்போதும் கணினி சார்ந்த அறிவுகள் இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் ஒரு வகையாகவும் கணினி வளர்ச்சியடையாத காலத்தில் பிறந்து பின்னர் கணினியின் அவசியத்தினையும் அதன் வளர்ச்சிக்கட்டங்களையும் புரிந்து கொண்டு கணினி யுகத்தில் தம்மை இணைத்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இன்னொரு வகையாகவும் கணினி வளர்ச்சியடைந்த காலத்தில் பிறந்து சதா எந்நேரமும் கணினியோடு மூழ்கிப் போயுள்ள இளையவர்கள் மூன்றாவது வகையாகவும் காணப்படுகின்றனர்.

தற்கால கணினி யுகத்தில் எம்மவர்கள் மத்தியில் இலத்திரனியல் பொருட்களின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. சாதாரண மானவர்கள் வீடுகளில் கூட Smart Phone, மற்றும் I pad , Lap top, மேசைக் கணினி (Desktop) என அனைத்து வகையான கணனி சார்ந்த இலத்திரனியல் சாதனங்களும் காணப்படுகின்றன. இதனை விட வசதி படைத்த வீடுகளிலும் வெளிநாட்டுத் தொடர்புடைய வீடுகளிலும் இலத்திரனியல் பொருட்களின் பாவனை தொடர்பாக சொல்லத் தேவையில்லை. அந்தளவிற்கு வீடுகளில் இலத்திரனியல் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறான வீடுகளில் வளரும்

பிள்ளைகள் அங்கு வசிக்கும் பெரியவர்களை விட கணினி சாதனங்களை கையாள்வதில் வல்லவர்களாக காணப்படுகின்றனர். பிறந்த குழந்தைகள் கூட Touch Screen (தொடுதிரை) இல் பவ்யமாக விளையாடுவதை அவதானிக்க முடிகிறது.

எமது சமூகத்தில் வாழ்கின்ற பிள்ளைகளில் முழுப்பிள்ளைகளும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைக்காவிட்டாலும் கூட கணினி சார்ந்த பொருட்களை காணும் வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

கணினி யுகத்தில் பிறந்த தற்காலப்பிள்ளைகள் தமது ஆரம்பக்கல்வியினை முன்பள்ளிகளில் கற்று வருகின்றனர். முன்பள்ளிகளில் வாய்மூலமான கற்றல் கற்பித்தல் முதன்மைப்படுத்தப்படுகின்றது. அநேகமான முன்பள்ளிகளில் சிறுவர்களிற்கு கணினி கற்பிக்கப்படுவ தில்லை. நீர்வேலியில் உள்ள முன்பள்ளிகளில் பாலர் பகல் விடுதிகயில் மட்டுமே கணினி கற்பிக்கப்படுகிறது. இலண்டனில் உள்ள நீர்வேலி நலன் புரிச்சங்கத்தின் உதவியுடன் பாலர்பகல் விடுதியில் கணினியகம் (Computer Lap) அமைக்கப்பட்டு கணினிப்பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளில் பிள்ளைகளை இணைப்பதற்கு முன்னர் உள்ள காலப்பகுதிகளிலும் சரி, அதற்கு பின்னர் உள்ள ஆரம்பக்கல்வி வரையிலான காலம் என்றாலும் எவ்வாறான கணினி சார்ந்த கற்றலை வழங்க வேண்டும் என்பதில் வரையறைகள் காணப்பட வேண்டும். அவற்றை நாம் எடுத்து நோக்கினால் முதலில் கணினி சார்ந்த செயற்பாடுகளில் எவற்றை செய்யக் கூடாது என்பதை எடுத்து நோக்குவோமாயின் இன்று ஏராளமான கணினி சார்ந்த இலத்திரனியல் சாதனங்கள் வீடுகளில் காணப்படுகின்றன. இதனை பிள்ளைகள் கையாளும் போது கணினியின் பாகங்கள் தொடர்பான அடிப்படை பாகங்களை அறியாமல் போய் விடுவார்கள் மேசைக் கணினியே (Desktop) சிறுவர்கள் பயிற்சி பெறுவதற்கு உகந்த சாதனம் ஆகும். மேசைக் கணினியின் சுட்டி (Mouse) விசைப்பலகை(Key board), ஒலிபெருக்கி (Speaker), CPU போன்ற பகுதிகளை தனித்தனியே காண்பதால் கணினியின் பகுதிகளை இனம் கண்டு கொள்வர். அத்துடன் ஒவ்வொரு பகுதிகளையும் கையாளும் திறன் பெறுவர்.

சிறுவர்கள் அனைவருமே கணினி விளையாட்டுக்களில் விளையாடுவதற்கு எத்தனிப்பார்கள். அவ்வாறான விளையாட்டுக்களில் ஆபத்தான விளையாட்டுக்களும் சிறுவர்களை அடிமைப்படுத்தும் விளையாட்டுக்களும் காணப்படுகின்றன. ஆபத்தான விளையாட்டுக்களினை பார்ப்போமாயின் அதில் மழலைகளின் மனதில் வக்கிரங்களை உண்டு பண்ணும் விளையாட்டுக்கள் (Shooting Games) இரத்தங்களுடன் கத்தி சண்டை போடும் (Games), கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓடும் விளையாட்டுக்கள் (Car, Bike Racing games) என்பன காணப்படுகின்றன. இவ்வகையான விளையாட்டுக்கள் சிறுவர்கள் மனதில் இரத்தம் பார்த்தல், அடித்துக் கொல்லுதல் என வக்கிர எண்ணங்களை விதைப்பதுடன் அவ்விளையாட்டுக்களுக்கு அடிமைப்படுபவனவாகவும் அமைந்து விடுகிறது.

கணினி விளையாட்டுக்களில் ஒரு பிள்ளை அதிக ஆர்வம் காட்டுமாயின் ஏனைய திறன்களில் ஆர்வமற்று போகும். இதனால் அப்பிள்ளை அடைய வேண்டிய அனைத்து திறன்களும் இல்லாது போய்விடும். அத்துடன் நீண்ட நேரம் கணினியை சிறுவர்கள் பயன்படுத்து வதனை தவிர்க்க வேண்டும். தொடர்ச்சியாக பல மணித்தியாலங்கள் பயன்படுத்தும் போது அவர்களுடைய பார்வை பாதிக்கப்பட்டு சிந்திக்கும் ஆற்றலும் குறைவடையும். கணினித்திரைக்கும் குழந்தைக்கும் இடையிலான தூரம் 40cm ஆகக் குறைந்தது இருக்க வேண்டும். திரைகளில் CRT எனப்படும் திரைகள் பாவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதிக கதிர்வீச்சு காரணமாக குழந்தைகளின் கண்கள் பழுதடையக் கூடியது. எனவே (CRT) திரைகள் தவிர்க்கப்பட்டு (LCD, LED) திரைகள் பயன்படுத்த வேண்டும்

கணினிகளில் Paint என்ற மென்பொருள் காணப்படுகிறது. வர்ணங்களுடன் மாணவர்கள் உருக்களை வரைதல், வர்ணம் தீட்டுதல் போன்றன பாலர் வகுப்புக்களில் சிறந்தது. மழலைகளின் எண்ணங்களையும் மூளை விருத்தியையும் ஏற்படுத்தவல்ல கணினி விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. பெற்றோர்கள் அதனை தெரிவு செய்து மாணவர்கள் விளையாட நெறிப்படுத்த வேண்டும். மழலைகள் இணையத்தை

பயன்படுத்துவது அவசியமானது. அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும். என்பதனை சொல்லி கொடுக்கும் போது இலகுவாக தமக்கு தேவையான சிறுவர் படங்கள், கார்டூன்கள், கதைகள், என்பவற்றை பெற்றுக் கொள்வார்.

சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருள்களில் M.S. Word என்ற மென்பொருளினை கணினிகளில் நிறுவி மழலைகளுக்கு A,B,C,D...... மற்றும் இலக்கங்கள் என்பவற்றை பழக்கவும் Key board இல் பத்து விரல்களையும் பயன்படுத்தி ஒரே நேரத்தில் தட்டச்சு செய்வதற்கு பயிற்றுவிக்க வேண்டும் எதிர்காலங்களில் வேகமாக தட்டச்சு செய்ய பழகிக் கொள்வர். Photoshop எனப்படும் மென்பொருளானது புகைப்படத்தினை திருத்தம் செய்கின்ற (Photo editing) மென்பொருளாகவே காணப்படுகிறது Photoshop 7 பிரபல்யமாக காணப்பட்டது. தற்போது அம்மென்பொருளுடைய மேம்படுத்தப்பட்ட மென்பொருளாக CS3, CS6 என்பன பயன்படுத்தப் படுகிறது. மழலைகளுக்கு வழங்கப்படுகின்ற அடிப்படைக் கணினி சார்ந்த பயிற்சிகளில் சிறப்பான விளைவுகளை அறிந்து வழங்கப்படும் போது எதிர்காலங்களில் இந்த உலகம் அடையப் போகின்ற பாரிய இலத்திரனியல் சவால்களுக்கு முகம் கொடுக்கவல்ல ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கி கொள்ளலாம்.

## பசுமை நினைவுகள்



கழக ஆண்டு விழாவின் போது (1971)



கழக ஆண்டு விழாவின் போது (1973)



ஆரம்பகால பராமரிப்பாளர்களும் பாலர்களும்



ஆரம்பகால மேற்கத்தேய இசைக்குழு

# கண்காட்சியின் நிழல்கள்

















# விளையாட்டு விழா நிழல்கள்









# விளையாட்டு விழா நிழல்கள்









# கலை நிகழ்வுகளின் நிழல்கள்




















# கலை நிகழ்வுகளின் நிழல்கள்





















# சுற்றுலா நிழல்கள்









# சுற்றுலா நிழல்கள்











# Community Welfare League
# Neervely
# Creche

20.11.1956

Visited the creche which I am told is the model one here, It has been a real pleasure to see the children of the area comparatively of the poorer section of the locality whose mothers are working, well looked after by an agency like this one. The Children who were playing in the inner compound seemed to be quite happy in the Company of their own age. The matron appeared to be an experienced one. It must be said that a very good beginning has been made for giving relief to the working class mothers.

I wish the organization all success.

J. Rahman,
Pakistan.

29.01.1957

What a pity the mumps kept the Children away. They must be very happy in these clean and vright surroundings I hope to come back some day with my wife

V. Wander Mandile
Minister of the Netherlands, Colombo.

07.02.1958

I am delighted to be able to visit the creche and to see the splendid work being done. I have been very cheerfully entertained with song and recitation.

I bring them the best wishes of the order of St. John all over the globe and I am delighted to know that the Jaffna division of St. John Ambulnce Brigade are able to help here

J. M Kirikman
Major General Commissioner in Chief
St. John Ambulance Brigade, London

05.09.1958

We very much enjoyed visiting this happy place.

Joan Robinson, Babara Robinson, Ann Robinson,
Cambridge, England.

25.07.1958

This is the first creche I have seen in Ceylon and it is surely a model for all others to follow. It was great a pleasure to see so many happy, well - cared- for Children an I wish my wife could have been You are doing a wonderful job in this village. Carry on the good work.

Crjcan
U.K. Higb Commssion.

16.01.1959

There is an atmosphere of good work and dedication in this creche, which I have found very conforting.

R.S. Brady,
British Council

24.05.1960

I am most impressed by what I saw here. My very best wishes for the future.

U.N.O Local Govt. Affairs,
International Figure.

Dr. W. Hoven
Holland.

I have visited Ceylon from London and have been astonished at the high standard of the work carried out in this centre. The care of the Children most compare favourably with anything to be found in Londan today. I congratulate the staff on their devotion and wish them every success in the future.

Lois Greenaway,
Senior Mistress Secondary School,
London.

24.05.1962

Presentation on behalf of the serving group of the American Women's Association of Colombo - Shirts, pants and dresses to the Creche.

Babara Thomson
American women's Association,
Colombo.

06.12.1963

I was pleased to see your nursery in many ways quite like our nurseries in America. You seem to be doing very nice things with the

limited equipment you have. I only wish I could present you with some toys and pictures.

May this good work prosper and grow. God Bless you.

Katherine Ellis,
International farm Youth Exchange,
U.S.A.

This was a heart warming experience. Thank You Wishing you all success.

Charge de' affaires for the Netherlands.

02.12.1965

My wife and I enjoyed our visit to the creche very much, We were certainly impressed with the cleanliness and with the attention shown to the happy Children. Our congratulations for the good work done and our hope that it may continue.

Louis A Kurging III
American Vice Consul,
American Embassy, Colombo.

29.12.1966

This is a delightful place to visit. The Children seem happy and well cared for. I wish there were more creches such as this.

Dr. (Mrs.) Betty Bond
World Health Organizations

04.03.1967

I was shown round the Institution an I was much impressed by the good work carried out at this institution.

M. Ramasamy,
W.H.O Scientist.

04.10.1968

I have travelled far and wide and I have never seen an organisation like this. My heart is filled with pride and joy.

S. Anandarajah, FRCS.

08.10.1971

Shina Ratna: Radhe Shyam Shrestha Tulallar
Agricultural Development Bank,
Nepal.

I am deeply touched by everything I have witnessed here today. The staff seem to have the right ingredient needed for this type of work, Namely compassion in young lives. I wish them all the best.

Albert V.J
124, Hayden Place road, London SW19851

01.11.1972

The Children are very well looked after and are getting excellent supervision.

Lawrwnce Haymen CARE

We wish all concerned success in this useful word

S.A Marfaw,
UN Fellow from Cameron W.Africa,
St.Juan Mario Cardero,
UN Fellow from Eaucador, South America

19.06.1963

It was good to see the Children well cared for whilst their parents are at work. I think If I were a child would be very happy to come here every day in pleasant surroundings.

N.A Bond England.
On behalf of Service Civil International.

03.10.1962

We are M. Khattato and F. Ashhab from Syrian Arab Republic to visit the Neervely Creche. We were very happy to see this Institution, we wish good success for the league of this area and staff members.

M. Khattato.

10.08.1975

I have learnt with great interest about this very important community project in this village. I am quite sure that all the officials who work here are making a grand contribution to the social development of this area

Renohi Royln Walter Ivorne,
Sri Lanka Foundation Institute, Colombo.

29.10.1975

I have had the opportunity of attending the prize distribution of the Neervely Creche this afternoon and witnessing the progress of an institution that has brought the people of this village of all ages and positions together for a common purpose. My best wishes go to all those who are endeavoring to maintain and further the interests of this institution

Sgd. Lal Wijeyapala,
Govt. Agent, Jaffna.

## புலம்பெயர் நாடுகளிலிருந்து தொடர்ச்சியாக நீர்வேலி பாலர் பகல் விடுதிக்கும் முன்பள்ளிக்கும் நிதி உதவி வழங்குவோர்

இலண்டனில் வசிக்கும் நீர்வேலி பாலர் பகல்விடுதியினதும் முன்பள்ளியினதும் நலன் விரும்பிகளான,

திரு. திருமதி. மா. திருவாசகம்
திரு. திருமதி. செ. செல்வநாதன்
திரு. திருமதி. ஆர். இரவிச்சந்திரன்
திருமதி. கமலா பாலசுப்பிரமணியம்
திரு. ஆர். அரவிந்தன்
திரு. திருமதி கு. அருணாசலம்
திரு. திருமதி. கே. அருந்தவநாதன் (மாலா)
திரு. திருமதி பொ. சிவதாசன்
திரு. திருமதி செ. சுபேஸ்குமார்
திரு. திருமதி ஆர். சோமசுந்தரம் (ஆனந்தி)
திரு. திருமதி கே. கிருஸ்ணமூர்த்தி
திரு. திருமதி கே. தர்மத்துரை
திரு. திருமதி ஆர். சிவராஜசிங்கம் (சிவசக்தி)
திரு. திருமதி எஸ். சுரேந்திரா (சுவர்ணா)
திரு. திருமதி ஏ. கனகசபேசன்
திரு. திருமதி எஸ். இலங்கநாதன்
திரு. திருமதி எஸ். நந்தகுமார்
திரு. திருமதி எஸ். ஜெயக்குமார்
வைத்திய கலாநிதி சிவந் சிவகுமார்

ஆகியோர் பாலர் பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் அபிவிருத் தியில் அக்கறைகொண்டு இலண்டன் - நீர்வேலி நலன்புரிச் சங்கத்தினால் பேணப்படும் நீர்வேலி பாலர்பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் அபிவிருத்தி நிதியத்துக்கு ஒவ்வொருமாதமும் தமது நிதிப் பங்களிப்பினை வழங்கி வருகிறார்கள்.

அதேபோல் கனடாவில் வசிக்கும் நீர்வேலி பாலர்பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் நலன்விரும்பிகளான பின்வருவோர் பாலர்பகல் விடுதியில் பராமரிக்கும் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டு கனடா - நீர்வேலி நலன்புரிச்சங்கத்தின் ஊடாக

மாதாந்தம் ஒருவர் என்ற அடிப்படையில் பாலர் பகல்விடுதியின் உணவுச் செலவின் ஒரு பகுதிக்கு நிதி உதவியை வழங்கி வருகின்றார்கள்.

| | |
|---|---|
| தை | - வாசுகி கணபதிப்பிள்ளை |
| மாசி | - அகிலன் சிவபாலன் |
| பங்குனி | - ஜெகன் பசுபதி |
| சித்திரை | - கிரிதரன் இராஜேஸ்வரன் |
| வைகாசி | - அசோகமலர் தளையசிங்கம் |
| ஆனி | - சர்மி சர்வானந்தம் |
| ஆடி | - சயிறா செல்வராசா |
| ஆவணி | - ஞானேந்திரன் நமசிவாயம் |
| புரட்டாதி | - மாலதி ஜெகநாதன் |
| ஐப்பசி | - பஞ்சநாதன் பொன்னையா |
| கார்த்திகை | - பத்மநாதன் பொன்னம்பலம் |
| மார்கழி | - ஸ்ரீநாதன் தியாகராசா |

இவ்வாறு புலம்பெயர் நாடுகளிலிருந்து தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்கிவரும் நல் உள்ளங்களுக்கும் மற்றும் அவ்வப்போது நிதி உதவிகளை வழங்குபவர்களுக்கும் நீர்வேலி பாலர்பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் சமூகத்தினர் என்றென்றும் நன்றியுடையவர்காளாவர்.

## வைரவிழாவினை முன்னிட்டு பாலர் பகல் விடுதியின் கட்டிட திருத்தத்திற்கும் வர்ணம் பூசுவதற்காகவும் நிதி உதவி வழங்கியோர்

| | | ரூபா |
|---|---|---|
| 01. | நீர்வேலி நலன்புரிச்சங்கம் - இலண்டன் | 900000.00 |
| 02. | திருமதி புஸ்பா துரைராசசிங்கம் - பிரான்ஸ் | 100000.00 |
| 03. | திரு வை. காங்கேயன் - டென்மார்க் | 40000.00 |
| 04. | திருமதி தேவா வரதராஜன் - கனடா | 15000.00 |

## வைரவிழாவிற்கு நிதி பங்களிப்பு செய்தோர்

| | | ரூபா |
|---|---|---|
| 01. | நீர்வேலி நலன்புரிச்சங்கம் - இலண்டன் | 227030.00 |
| 02. | திரு. குமாரசாமி சயந்தன் - இலண்டன் | 100.000.00 |
| 03. | திரு. கதிரவேலு பாஸ்கரன் - டென்மார்க் | 43.705.31 |
| 04. | திருமதி E. K. சன்முகநாதன் - இலண்டன் | 35.000.00 |
| 05. | திருமதி மீனா சர்வானந்தம் - கனடா | 21.000.00 |
| 06. | திரு. கணபதிப்பிள்ளை புண்ணியமூர்த்தி - நோர்வே | 20.000.00 |
| 07. | திரு. கதிரவேலு ஜெயச்சந்திரன் - ஜேர்மனி | 15.000.00 |
| 08. | திருமதி சிவகுரு அழகம்மா - இலண்டன் | 15.000.00 |
| 09. | வே. சி. ஐயாத்துரை குடும்பம் | 10.000.00 |
| 10. | திருமதி சிறிபதி ரோகினிதேவி - இலண்டன் | 10.000.00 |
| 11. | திரு. சின்னத்தம்பி சிவலிங்கம் - கனடா | 10.000.00 |
| 12. | திரு. பொன்னையா பாஸ்கரன் - ஜேர்மனி | 10.000.00 |
| 13. | திரு. செல்லத்துரை பாலேஸ்வரன் - ஜேர்மனி | 5.000.00 |
| 14. | திருமதி மகாத்மசீலன் செல்வராணி - கனடா | 5.000.00 |
| 15. | திரு. பொன்னுத்துரை சரவணபவானந்தன் | 5.000.00 |

# நன்றிகள் உரித்தாகுக



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது வரலாற்று ஆவணமான வைரவிழா மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய மதத்தலைவர்கள், பெரியோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும், மலருக்கு கட்டுரைகள் வழங்கிய அறிஞர்கள், ஆசிரியர்கள் அனைவர்க்கும்

இம்மலர் சிறப்புற வெளிவர பெரு விருப்புக் கொண்டு தமது ஆலோசனைகளையும் நிதி உதவிகளையும் வழங்கிய நீர்வேலி நலன்புரிச் சங்கம் – ஐக்கிய இராச்சிய அங்கத்தவர்கள் அனைவர்க்கும் வைரவிழா சிறப்பாக நடைபெற மனமுவந்து நிதி உதவி வழங்கிய அனைவருக்கும்

இம்மலருக்கு சிறந்த முறையில் புகைப்படங்கள் எடுத்து உதவி வழங்கிய பிறேமா புகைப்பட நிலைய உரிமையாளருக்கும் இம் மலரை சிறந்தமுறையில் அச்சிட்டு வழங்கிய ஷாம்பவி பதிப்பகத்தினருக்கும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் எமது விழாவினை ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்திய நிறுவனங்களுக்கும்

மேலும் விழா சிறப்புறவும் மலர் சிறப்புற வெளிவரவும் பல வழிகளில் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைதெரிவித்துக் கொள்கின்றோம்.

*நிர்வாகத்தினர்,*
*பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்,*
*நீர்வேலி.*





ஷாம்பவி பதிப்பகம்,
யாழ்ப்பாணம். 021 2224143.